ரிஜிஸ்டர் நெ. 2041

தனிப்பிரதி விலை ஒரு அணா

குடி அரசு

வருட சந்தா முன்பணம்	— ரூ.	3—0
6-மாத சந்தா ,,	— ,,	1-12
வெளிநாட்டிற்கு ,,	— ,,	4—0

ஞாயிறுதோறும் வெளிவருவது.

ஆசிரியர், ஈ. வெ. இராமசாமி.

வியாபாரிகள் விளம்பரம் அங். 1க்கு ரூ. 1
கோர்ட் விளம்பரம் அங்குலம் 1க்கு ரூ. 2.
நீடித்த விளம்பரத்துக்கு தனி விகிதம்

மாலை 7 | ஈரோடு, பிரஜோத்பத்தி௵ ஆடிமீ 32௨ (16—8—1931) | மலர் 16

குஷ்ட நோய்க்கு

ஓர் அற்புத மருந்து.

உடம்பில் தோல் நிறம்மாறி தோல் தடித்தல், மதமதப்பு, திமிர், இரணம் முதலிய உண்டாகி அவயவங்கள் குறைந்து அழுகுதல் முதலிய குஷ்ட நோய்களுக்கு ஓர் சிறந்த மருந்து. இது தாம்பிரம், வங்கம் முதலிய உலோகங்களின் களிம்புள்ள செந்தூர பஸ்பங்களைப்போல் கெடுதி ஒன்றுஞ் செய்யாது. கடுமையான பத்தியமில்லை.

40 நாள் மருந்து ரூ. 12—0—0, 20 நாள் மருந்து ரூ. 7—0—0.

சென்னை, 18-7-31.

எனக்கு கால்விரல்கள் ரணமாகியும், பாதத்தில் பெரிய குழிப்புண் உண்டாகி அழுகி நீர்வடிந்து கொண்டும் சுமார் 2-வருஷமாகப் பலவகை வைத்தியங்கள் செய்தும், இஞ்சக்ஷன்கள் செய்தும், குணமாகாமல் கஷ்டமடைந்தேன். சென்னை தங்கசாலைத்தெரு தமிழ் வைத்தியசாலைத்தலைவரும் கார்ப்பரேஷன் கவுன்சிலருமாகிய பண்டிட் ஆனந்தம் அவர்களின் அருமையான மருந்தால் என் ரணங்கள் ஆறி, குழிப்புண்களும் ஆறி, பழைய நிலைமையை அடைந்தேன். என்னுடைய நோய் தீராதென்று என் உயிரையே வெறுத்துக் கொண்டேன். பயங்கரமான என்னுடைய நோய் நீங்கி சுகமடைந்தேன். என்போன்ற பலரும் போலி மருந்துகளால் மோசம் போகாமல் பண்டிதர் அவர்களிடம் நோய் நீங்கி சுகமடையக்கோருகிறேன்.

ரா. ராதாகிருஷ்ணன்,
1|75 திருப்பள்ளித்தெரு, சென்னை.

பொதுஜனங்களுக்கு எனது விண்ணப்பம்.
18—7—31.

எனக்கு ஏற்பட்டிருந்த தோல் தடிப்பு, நிறம் மாற்றம், தினவு, ரணம், முதலிய வைகளோடு கூடிய குஷ்டநோய்க்கு சென்னை பண்டிட் ஆனந்தரின் அற்புத மருந்தைச் சாபபிட்டு கொடிய நோய் அறவே நீங்கி வடிவும் அழகும் அடைந்திருப்பதை மிக மகிழ்ச்சியுடனே அறிவிக்கின்றேன்.

இனியேனும் என்போன்ற நோயாளிகள் போலி மருந்துகளை அருந்தி மோசம்போகாமல் பண்டிட் ஆனந்தரின் அரிய மருந்துகளைஉண்டு அறவே நோய்கள்நீங்கி தேகநலத்தோடும் பலத்தோடும் வாழவேண்டுமென விண்ணப்பித்துக் கொள்ளுகின்றேன்.

61, படை வேட்டம்மன் கோவில் வீதி, புரசவாக்கம், சென்னை.

இங்ஙனம்,
வி. டி. சுந்தரம்.

கேட்லாக் சுகவழி இனாம். தந்திவிலாசம்:- "மருத்துவன்" சென்னை. டெலிபோன் நெ. 2584

பண்டித. எஸ். எஸ். ஆனந்தரின்

தமிழ் வைத்தியசாலை, 221. தங்கசாலை வீதி, சென்னை.

Best copy available.

வெளிவந்து விட்டது! வாங்கத்தவறாதீர்கள்!!

முந்துங்கள்!!!

நாளது ஆகஸ்டு௴ த்திற்குள் நடக்கும் பொது எலெக்ஷனுக்கு முன் வாங்குங்கள்!

புதிய பஞ்சாயத்துகளுக்கும், தாலூகா போர்டுகளுக்கும், டிஸ்டிரிக்ட்டு போர்டுகளுக்கும், இவைகளின் மெம்பர்களுக்கும், ஆங்கிலமறியாத பொது ஜனங்களுக்கும் வெகு முக்கியமான

சென்னை லோக்கல் போர்டு ஆக்டு.

(1930ம்௵ வரையிலுமுள்ள சீர்திருத்தங்களுடன் கூடியது)

மிகவும் துல்லியமானதும் எளிதில் புரியும் படியான அழகிய தமிழில்

M. S. பார்த்தசாரதி அய்யங்கார், B. A., B. L.,

(வக்கீல், அகில இந்தியா லா ஜர்னல் பத்திராசிரியர் திருவள்ளூர்) அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. சொற்ப காப்பிகளே எம்மிடம் உள்ளன.

விலை ரூபா 2—0—0. வி. பி. செலவு ரூ. 0—6—0

மானேஜர்,

குடி அரசு புத்தகசாலை, ஈரோடு

அரசாங்க இஞ்சினீயர்களில் 14 பேர்களாலும், மற்ற பிரபலர்களாலும் மதிக்கப்பெற்ற

"மோட்டார்கார் இயந்திர சாஸ்திரமும் அதன் அநுபோகப்பயிற்சி முறையும்".

50 படங்களுடன் 200 பக்கங்களடங்கிய புஸ்தகம் விலை ரூ. 2. தபால் செலவு வேறு. வெளிநாட்டு ஆடர்களுக்கு முன்பணம் அனுப்ப வேண்டும். ஏஜண்டுகள் தேவை.

மோட்டார் ஸ்கூல் 1916ம் வருஷம் ஸ்தாபிக்கப்பட்டது. இதில் 3 மாதத்தில் மோட்டார் டிரைவிங் அண்டு மெக்கானிசம் கற்றுக்கொடுத்து கவர்ன்மெண்ட் லைசென்ஸும், பாடசாலை சர்டிபிகேட்டும் கொடுக்கப்படும்.

தென் இந்தியா மோட்டார் இஞ்ஜினீரிங் ஒர்க்ஸ்,

மைலாப்பூர், சென்னை

அகத்தியர் ஆராய்ச்சி.

இது சென்னை இராஜதானி கலாசாலை தமிழ் ஆசிரியரும் கலாவல்லவருமான பண்டிதர் உயர்திரு. கா. நமச்சிவாய முதலியார் அவர்களால் அனேக நூல்களை ஆராய்ச்சி செய்து பல ஆதாரங்களைக்கொண்டு எழுதப்பட்டதாகும்.

விலை அணா 0—2—0 தான். வேண்டுவோர் 3 அணா ஸ்டாம்பு அனுப்பவும்.

பகுத்தறிவே விடுதலை.

அல்லது ஜீவாத்மா இல்லை, என்னும், இப்புத்தகம் சிறந்த ஆராய்ச்சி நூலாகும். முன், பின், ஜென்மம், மூடப்பழக்கவழக்கங்கள் முதலியன ஆராயப்பட்டிருக்கின்றன. சடங்குகள், அதன் செலவு, கடவுள் ஆராதனை விக்ரக வணக்கம் முதலியன கண்டிக்கப்பட்டிருப்பதோடு பல ஆதாரங்களினாலும், மேற்கோள்களாலும் விளக்கப்பட்டிருக்கின்றது. சித்திரப்படங்களுடன் 100 பக்கங்கள் கொண்டது.

விலை அணா 6, 7 அணா ஸ்டாம்பு அனுப்புவோருக்கு அனுப்பப்படும்.

கிடைக்குமிடம்:—

குடி அரசு புஸ்தகசாலை, ஈரோடு.

...ஷக்கணக்கில் துணபுடைவதைவிட்டு ஏன் கவலைப்படுகிறீர்?

...வாச காச நிவாரணி.

ஆயிரக்கணக்கான பேர்கள் குணமடைந்திருக்கின்றனர். சுவாசகாச ரோகத்தினால் நுரையீரல், சுவாசக்குழல், மார்பு இவைகளில் உண்டாகும் கபம், இருமல், இளைப்பு, சீதளம், மார்ச்சளி, நெஞ்சுவலி, ...ஷ்டசுவாசம், மூக்கடைப்பு தொண்டையில் உண்டாகும் இரைச்சல், ...டைப்பு, கரகரப்பு, எரிச்சல் வலி, புண் முதலியவற்றையும், சாதாரண ஜலதோஷம், தும்மல், பீனிசம், வாயிலும் நாசியிலும் சீர்வடிதல், குழந்தைகள் மார்ச்சளி முதலியவைகளையும் நமது ஆஸ்தமா பௌடர் உபயோகித்த அந்த நிமிஷத்திலேயே நிவர்த்திசெய்வதுடன் இரத்தத்தை சுத்திசெய்தும் கெட்டியான கபத்தை இளகச் செய்தும், கபத்தை வெளியில் தள்ளியும், சுலபமாய் மூச்சு விடும்படியாயும், தாராளமாய்ப் பேசும்படியாயும், பசி தீபனத்துடன் ஆகாரம் உட்கொள்ளும்படியாயும் இராத்திரியில் நன்றாய் அயர்ந்து சுகமாய் நித்திரை செய்யும்படியாயும் செய்கிறது. 48 நாள் ஒரு மண்டலம் உபயோகிக்கக் கூடியடின் 1க்கு 1-4-0. தபால் கூலி அணா. 4.

புரொப்ரைட்டர், திருநாவுக்கரசு மேடிகல் ஹால்,

அங்காளம்மன் கோவில் தெரு, செவ்வாய்பேட்டை, சேலம். S. I.

...சோல் ஏஜண்டுகள்:—

...தாதா & Co., 52 நைனியப்ப நாயகன் தெரு மதராஸ்.

K. S. மேதா & Co., 234, சைனாபஜார் ரோட் மதராஸ்.

...வெள்ளைச்சாமி, No. 300, சிராங்கூன் ரோட், சிங்கப்பூர்

குணமில்லாவிடில் பணம் வாபீஸ் செய்யப்படும்

சித்தரசம்

சகல வியாதிகளுக்கும் உள்ளுக்கும், வெளியிலும் உபயோகிக்க நிமிஷகணக்கில் குணமாகும்

புட்டி 1-க்கு ரூ. 1—0—0

சி. பி. சாமி, சித்தமருந்து செய்சாலை பழநி S. I.

"சன்மார்க்கன்"

உயரிய தமிழ் மாதப்பத்திரிகை.

ஆண்டுசந்தா.

உள்நாடு ரூ. 1—0—0.

வெளிநாடு ரூ. 1—4—0.

ஆசிரியர் (நாவலூற்று)

சி. சுவாமி சிவநேசம்,

"சன்மார்க்கன்" பழனி.

இனிது இனிது, இன்ஜெக்ஷனிலும் இனிது

R. K. பழனிஸ்வாமிகள்

இன்டியன் சக்கி முக்கி ஆயில்.

இவ்வற்புத சஞ்சீவினியை, எந்த ஜீவராசிகளுக்கேனும் உடல் வாதனையேற்பட்ட காலத்தில், டைரக்ஷனில் கூறியவண்ணம் மேல்பிரயோகமாக, சகல வியாதிகளுக்கும் உபயோகிக்க, உடனுக்குடனே நற்குணமளித்து, ஆபத்ரக்ஷகனைப்போல் நன்கு குணப்படுத்துவதால் ஒவ்வொரு குடும்பங்களிலும் பல ஆபீஸ், மில்கள், பற்பல இஞ்சின் சகலடிரைவர்களிடமும, மெஷின்கள் ஓட்டுமிடங்களிலும், நானாவித ஆயுதங்கள் புழங்கும் கிடங்கு, பட்டரை, ஒர்க்ஷாப், முதலானவிடங்களிலும், பல மிருக ஜாதிகளிடம் பழகுபவர்களிடமும், காடுகரை, தோட்டம், மலை, மரம், மண், கல்வேலை நவரத்தினதிவ்யபரசக்கனிகளில் தொழில் புரிபவர்கள் முதலான மகாஜனங்கள் ஒவ்வொருவர்களிடமும், முக்கியமாய் இத்தலமிருக்குமானால், உலகத்தில் பம்பரம்போல் சுழன்றாடி ஓடிக்கொண்டிருக்கும் பற்பல அபாய விபத்துகளின் இம்சைகளினின்றும் பல அபமிர்த்துக்களினின்றும், சில கன்ம நோய்களினின்றும் விஷக்கடி, வெட்டுக்காயம், ரண வியாதிகளினின்றும் மீட்கப்படலாமென்பது மிகவும் உறுதி. இதின் முழு விபரங்களைப்பற்றி நமது கேட்லாக் மூலமாய் சகல உண்மைகளும் அறியலாம். கேட்லாக் இனாம்.

1 அவுன்ஸ் சக்கி முக்கி ஆயில் விலை ரூ. 2—0—0

1/4 அவுன்ஸ் ... ... விலை ரூ. 0—8—0

கோ. கோவிந்தராஜுலு செட்டியார்,

மளிகை அண்டு ஷாப் வியாபாரம்,

(துரையூர்) முசிரி தாலூகா, திருச்சி ஜில்லா.

விருதுநகர் மாகாண மூன்றாவது சுயமரியாதை மகாநாடு.

நமது லட்சியம் மறுக்க முடியாதது.

காங்கிரஸ் வலையில் சிக்கவேண்டாம்.

காந்தியார் வேண்டுவது வருணாச்சிரம ராஜியமே.

சௌந்திரபாண்டியன் வீரமொழி.

மாகாண மூன்றாவது சுயமரியாதை மகாநாட்டு வரவேற்புக்கழகத் தலைவர் உயர்திரு. ஊ. பு. அ. சௌந்திரபாண்டியன் அவர்களின் வரவேற்பு உபன்யாசமாவது:—

சகோதரப் பிரதிநிதிகளே!
பெரியோர்களே!!

"சுயமரியாதைக்கோட்டை"களில் ஒன்றென எல்லோராலும் பெருமைப்படுத்தப்பட்டுவரும் இவ் விருதுநகரில் கூடியிருக்கும் நமது மூன்றாவது மகாநாட்டிற்குப் பிரதிநிதிகளாக பல வேறு பாகங்களிலிருந்து வந்திருக்கும் உங்களை உபசரணைக் கமிட்டியின் சார்பாக வந்தனத்துடன் வரவேற்கிறேன். உங்கள் எல்லோரையும் வரவேற்று உறவாடுவதற்கு ஓர் சந்தர்ப்பம் கிடைத்தது குறித்து பெரும் மகிழ்ச்சி அடைகிறேன்.

நமது லக்ஷியத்தை யாரும் மறுக்க முடியாது.

நமது இயக்கத்தின் பெயர் பொது மக்களிடை சென்ற சுமார் ஆறு ஆண்டுகளாய்ப் பழகிவந்தாலும் நாம் இத்துடன் மூன்று மகாநாடுகள்தான் நடத்தியிருக்கிறோம். சென்ற மகாநாடுகளைப்பார்க்கிலும் இந்த மகாநாட்டுக்குத்தான் இயக்கத்தை விருத்தி பண்ணுவதற்கு வேண்டிய பொறுப்பு அதிகம் ஏற்பட்டிருக்கிறது என்று நான் கருதுகின்றேன். சென்ற இரண்டு மகாநாடுகளும் சுயமரியாதை என்ற பதத்தின் சரித்திரத்தையும் அது வேண்டிய அவசியத்தையும் நன்கு பொதுமக்களிடையே உணர்த்திவிட்டது. சென்ற சில ஆண்டுகளாக ஆங்காங்கே நமது இயக்கத்திற்குப் பலத்த எதிர்ப்புகள் தோன்றினவென்றாலும், நமது மகா எதிரிகள் கூட நம் லட்சியத்தை மறுக்க முடியாமல் திண்டாடிக்கொண்டிருந்தார்கள் என்பதை நீங்களே அறிந்திருப்பீர்கள். அவர்கள் எல்லாம் தனிப்பட்ட மனிதர்களின் குற்றத்தை எல்லாம் இயக்கத்தின்மீது திரித்துக்கூறி இயக்கத்தை நசுக்கப் பிரயத்தனப்பட்டார்கள். ஆனால் உண்மையை வெல்ல யாராலும் முடியாது. சூழ்ச்சி உறுதியாக முறியடிக்கப்படும். இப்போது விதி நம் எதிரிகளிடையே பலித்துவிட்டது. நமது இயக்கத்தைப் பஸ்பமாக்குவோம் என்று சபதம் செய்து கங்கணம் கட்டி வெளிவந்த சைவப்பண்டிதர்களுங்கூட சமீபத்தில் நமது கொள்கை முழுவதையும் பகிரங்கமாக ஆதரித்துவிட்டார்கள். இவ்வாறு நிதான புத்தியிலிருந்து குரோதப்பான்மையற்ற கண்களுடன் நோக்கும் யாவருக்கும் நமது கொள்கை உணர்த்தப்பட்டேயிருக்கிறது. பிடிவாதக்காரர்களையும் ஆராய்ச்சிக்குறைவானவர்களையும் ஒரு காலமும் யாராலும் திருப்தி செய்ய முடியாது. எப்படியும் தமிழ் நாட்டிலும் வெளிமாகாணங்களிலும் இருக்கும் அறிவுள்ள மக்கள் யாவரும் நமது லட்சியம் அவசியம் நிறைவேற்றப்படல் வேண்டுமென்று ஒப்புக்கொள்ளுகிறார்கள். ஆகையால் நமது லக்ஷியம் மேலானதேயாகும். அதைச் சந்தேகப்பட்டுக்கொண்டு மறுபடியும் விளக்கமாகப் புனராலோசனை செய்யவேண்டிய அவசியம் இல்லை. சந்தேகம் இல்லாத கொள்கை உடைய நாம் இனி அடுத்தபடியாக நமது கொள்கையைப் பரப்புவதற்கு சாதனங்கள் எவை? நமது இயக்கத்தைப் பலப்படுத்துவது எங்ஙனம்? என்பதையே இம்மகாநாட்டில் நிர்ணயிக்க வேண்டும். அவ்வழியிலேயே எனது பிரசங்கத்தைச் செலுத்த நான் இஷ்டப்படுகிறேன்.

காங்கிரசும், நாமும்.

அதற்கு முன்பாக காங்கிரசைப் பற்றியும், அதன் பால் இழுக்கப்பட்டிருக்கும் சில நம் பழைய நண்பர்களைப்பற்றியும் சிறிது கூற விரும்புகிறேன். சட்ட மறுப்பியக்கத்தின் வேகத்தால் பீடிக்கப்பட்டஎமது அன்பரில் சிலர் கராச்சிக் காங்கிரஸ் தீர்மானத்தில் நமது கொள்கைகள் எல்லாம் ஒப்புக்கொள்ளப்பட்டு விட்டனவென்றும், ஆகையால் நாம் காங்கிரசுக்கு ஆக்கம் தேடலாம் என்றும் கூறுகின்றனர். இக்கூற்றை உரைப்பவர்கள் கராச்சி காங்கிரஸ்தீர்மானத்தின் சாரத்தைச் சரியாய் உணராதவர்கள் என்றே கூறுவேன். கராச்சி காங்கிரஸ்பிரஜாஉரிமைத்திட்டத்தில் மதநடுநிலைமையும், சுதேச சமஸ்தானங்களுக்குப் பாதுகாப்பும், மதஸ்தாபனங்களுக்கு விசேஷப் பாதுகாப்புகளும் பிரமாதப்படுத்தப்பட்டிருக்கின்றன. இந்த ஒரு பகுதியே நமது இயக்கத்தை அறைகூறிப் போருக்கு அழைப்பது போன்றிருக்கிறதே!

மதப்பைத்தியத்தை மகாத்மா வளர்க்கிறார்.

அத்துடன் திருகாந்தியாரின்பிரசாரமும், அவர் உபயோகிக்கும்வார்த்தைகளும் அவர் அனுஷ்டிக்கும் முறைகளும் பாமர மக்களிடம், மனிதனின் அறிவைக் கெடுக்கும் மதப்பைத்தியத்தை அதிகப்படுத்தியும் வரும். கராச்சி காங்கிரஸ்தேர்தெடுக்கப்பட்ட காரியக்கமிட்டியிலிருந்து விலக்கப்பட்டிருந்த திரு.மாளவியாவையும், திரு.ராஜகோபாலாச்சாரியாரையும் காங்கிரஸ் காரியக்கமிட்டியார் தங்களுடன் சேர்த்துக்கொண்டதின் இரகசியம் என்ன? இவர்கள் இருவரும் இந்துக்களையும் இந்து மதஸ்தாபனங்களையும் விருத்தி செய்வதில் தகுந்த டிரஸ்டிகளாவார்கள். ஆகையால் தற்கால காங்கிரஸால் வருவதாக இருக்கும் சுயராஜ்யம் 'இந்துராஜ்யம் ராமராஜ்ய'மாகத்தான் இருக்கும் என்பதை உணர்ந்த முஸ்லிம்கள் தனிக்கிளர்ச்சி செய்வதுபோல, காங்கிரசின் சமூதாய லக்ஷியம் வருணாச்சிரம தர்மத்திற்குப் பாதுகாப்பு அளிப்பதாக இருப்பதால் அதன் முயற்சிகளைஎதிர்த்துப் போராடவேண்டியதுதான்.

காங்கிரஸ் வலையில் விழ வேண்டாம்.

திரு காந்தியின்வாக்கால்,வைதீகப் பிரசாரம்செய்துகொண்டு திருஜவஹர்லாவின் பொதுஉடைமைப் பிரசங்கத்தால் நம்மை மயக்கப்பார்க்கும் காங்கிரஸ் வலையில் சிக்கிவிடவேண்டாம் என்று என் வாலிப நண்பர்களை எச்சரிக்கை செய்கின்றேன். ஒரு சிலர் காங்கிரஸ் கடல்போன்ற ஓர்பழைமையான ஸ்தாபனம் என்றும் அதில் சகல இயக்கங்களின் கொள்கைகளும் பொதிந்து கிடப்பதால் வேறு தனி இயக்கங்கள் வேண்டுவதில்லை என்றும் வாதிக்கின்றனர். இதுதான் காங்கிரஸ் தனக்கு எதிராகத் தோன்றும் வேறு ஸ்தாபனங்களைக் கொலை செய்யும் நயவஞ்சக மார்க்கமாகும். பண்டைக்காலத்தில் இந்து மார்க்கத்

(தொடர்ச்சி 22ம் பக்கம் பார்க்க.)

திரு. ஊ. பு. அ. சௌந்திரபாண்டியன்.
மூன்றாவது சுயமரியாதை மகாநாட்டு வரவேற்புக்கழகத்தலைவர்.

விருதுநகர் இரண்டாவது சுயமரியாதை பெண்கள் மகாநாடு.

இந்திராணிபாலசுப்பிரமணியம் தலைமையுரை.

[சென்ற வாரத்தொடர்ச்சி]

2. பிறப்பினால் உயர்வு தாழ்வு.

ஜாதி வித்தியாசமென்பது கற்பிக்கப்பட்டதேயொழிய வேறில்லை. வலுத்தவன் இளைத்தவனை அடக்கி வைப்பது என்பதற்கு அத்தாட்சி ஜாதி வித்தியாசமேயாகும். இதனால் நமக்கு என்ன தெரிகின்றதென்றால் நமது நாடு மிருகத்தன்மையிலிருந்து மனுஷத்தன்மைக்கு இன்னும் வரவில்லை என்று தெரிகிறது.

நமது பெரியோர் ஒவ்வொருவரும் ஜாதியைக்கண்டித்துப் பாடியிருக்கிறார்கள்.

ஜாதி வேற்றுமை தொலைந்தாலன்றி நாடு நலமடையாது. நமது நாட்டின் விடுதலை, ஜாதிவேற்றுமை ஒழிவதினாலேயே உண்டு என்பதை அறியுங்கள்.

பிறப்பில் ஜாதிவேற்றுமை குறிக்கும் எந்த வேலையிலும் தலையிடாதீர்கள். கோவிலுக்குள் உங்கள் இந்து சகோதரி, சகோதரராகிய மற்ற வகுப்பினரை விடாத பக்ஷத்தில் நீங்களும் அவ்விடத்திற்குப்போகாதேயுங்கள், வேற்றுமையுள்ள விடத்தில் கடவுள் இருக்கமாட்டார். கலப்பு மணத்தில் கருத்தைச்செலுத்துங்கள். அப்பொழுது ஜாதி வேற்றுமை தானே சாய்ந்துவிடும்.

3. தீண்டாமை.

நமது நாட்டில் தீண்டாமை என்னும் மற்றொரு நோய் வாட்டுகிறது. மனித வர்க்கத்தில் தீண்டப்படாதவர்கள், பார்க்கப்படாதவர்கள், பேசப்படாதவர்கள், கோவிலுக்குள் புகப்படாதவர்கள் என்று ஒரு கூட்டத்தாரை வகுத்திருப்பின் அந்த நாடு வைத்தியக்காரர்கள் இருக்கும்படியான நாடென்பது மிகையாகாது.

தீண்டாதார்களுக்கு ஒழுக்கமில்லையென்று யாராவது சொல்லக்கூடுமோ? ஏனையோர்கள் எல்லோரும் ஒழுக்கசீலர் என்றாவது சொல்லமுடியுமா? எல்லாக்குலத்திலும் ஒழுக்கமுள்ளவர்களும், ஒழுக்கமில்லாதவர்களும் உண்டு. அவர்களைப்பார்த்து ஜாதி இந்துக்களென்று சொல்லப்பட்டவர்கள் "மாடு தின்னும் புலையர்க்கு சுத்தமேது?" என்று சொல்லுகிறார்கள். மலம் தின்னும் கோழியை தின்னும் உயர்ந்த ஜாதியார் அவர்களுக்குச் சுத்தமில்லை என்று சொல்லுவது கேலிக்கிடமாயிருக்காதா? இருந்தாலும் அவர்களை சென்சஸ் ரிப்போர்டில் (Census Report) இந்துக்களென்று தான் எடுத்துக்கொள்ளுகிறார்கள். ஆனால் இந்துக்களுக்குண்டான உரிமையுண்டோவெனில், இல்லை என்று தான் சொல்லவேண்டும்.

எப்பொழுது சாதி வித்தியாசம் ஒழிகிறதோ அப்பொழுதே அந்த நாடு முன்னேறுவதற்குரிய வழியைக் கண்டு பிடித்து விட்டதென்று சொல்லலாம். சிருஷ்டியிலே மனிதனுக்கு மனிதன் வித்தியாசமில்லாதிருக்கும் போது மனிதன் தன் சுயநலத்திற்காக ஏன் இந்த நியாயமில்லாததும் அநாகரீகமானதுமான வித்தியாசத்தைக் கற்பனை பண்ணி பிறரை அடக்கியாள முயலவேண்டும்? இதனாலல்லவா, நசுக்கப்பட்டவர்கள், தாழ்த்தப்பட்டவர்கள் மற்றவர்களோடு கலந்திருப்பதற்கு முடியாமலிருக்கிறார்கள். பிளவுகளும், சச்சரவுகளும் இதனால் ஏற்படுகின்றதல்லவா? ஒருவரையொருவர் அண்ணன் தம்பி போல் நேசிப்பதற்கு இடமில்லையே. ஒற்றுமையென்பது எங்ஙனம் உண்டாகும்? இந்த சமூக ஒற்றுமையின்மை தேசியத்திலும் தலைநிமிர்ந்து நிற்குமென்று நினைக்கின்றீர்களா? இல்லையா? நம்மோடு பிறந்து வளர்ந்தும் நம் நாட்டின் சுக துக்கங்களில் பங்கிட்டுக்கொள்ளும் சகோதர, சகோதரிகளுக்கு நாம் சகோதரத்துவம் காட்டவில்லையென்றால் பிற நாட்டிலிருந்து நம்மை ஆண்டுவரும் வேறு நாட்டாரிடத்தில் நாம் எந்த முகத்தைக் கொண்டு சம உரிமை கேட்பது என்பதுதான் இப்பொழுது முக்கிய கேள்வி ஜாதியால் ஒரு சாரார் உயர்ந்தவர்களென்று சொல்லிக்கொண்டால் வெள்ளையர்கள் நிறத்தால் நாமெல்லோரும் அவர்களுக்கு என்னாளும் அடிமைகளென்று சொன்னார்களானால், நாம் அவர்களைக் குறை சொல்ல முடியுமோ?

திருமதி. இந்திராணிபாலசுப்பிரமணியம்.
விருதுநகர் இரண்டாவது சுயமரியாதை
பெண்கள் மகாநாட்டுத் தலைவி.

சகோதரிகளே! நமது நாடு முன்னேறவேண்டுமானால் ஜாதி வித்தியாசம் ஒழியவேண்டும்; தீண்டாமை அறவேண்டும்; காந்தியடிகள் தீண்டாமை அகற்றுதல் என்பதையே காங்கிரசின் வேலைகளில் முக்கியமான வேலையாக வைத்திருக்க இந்த விஷயத்தில் கவனம் செலுத்தாமல், 'தேசியம்' "தேசியம்" என்று சொல்லிக்கொண்டிருப்பது சரியாகாது. ஏனென்றால் உண்மைக்காங்கிரஸ்வாதிகள் தீண்டாமையையகற்றியிருப்பார்கள்.

தீண்டாமை நீக்குதல் விஷயமாக டெல்லி சட்டசபை உபதலைவராகிய சுயமரியாதை இளஞ்சிங்கம் ஆர். கே. ஷண்முகம் அவர்கள் ஒரு மசோதா டெல்லி சட்டசபையில் கொண்டு வந்திருப்பதை கேள்விப்பட்டு லாகூரில் கூடிய அகில இந்திய பெண்கள் மகாநாடு சந்தோஷப்பட்டு அவருடைய முயற்சியை போற்றி இருக்கின்றது என்று உங்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

மூடப்பழக்க வழக்கங்களும் சடங்குகளும்.

நமது நாடு மிகவும் பழமையான நாகரீகத்தையுடையது என்கின்றோம். ஆனால் நமது நாட்டைவிட மிகவும் பின்னணியிலிருந்த மற்ற நாடுகள் இப்பொழுது முன்னணியிலிருப்பதற்குக் காரணம் என்னவென்றால், மூடப்பழக்க வழக்கங்களையும், குருட்டு நம்பிக்கைகளையும், அறவே ஒழித்து பகுத்தறிவுக்கு இடந்தந்து ஆராய்ச்சித் துறையில் அவர்களது அறிவையும், பணத்தையும் நேரத்தையும், ஊக்கத்தையும், முயற்சியையும் செலவு செய்வதின் பயனேயொழிய வேறில்லை. இப்பொழுது பாருங்கள். மற்ற நாடுகளெல்லாம் எந்திரத்தை எப்படி சீக்கிரப் படுத்துவதென்றும் மோட்டார்களை எளிதில் ஒவ்வொருவரும் வைத்துக்கொள்வதற்கு எவ்விதம் செய்யலாமென்றும், எண்ணெயில்லாமலும்கூட மோட்டார்களை விடமுடியுமா? என்பதிலும், மார்ஸ் என்ற நக்ஷத்திரத்தில் ஜனங்கள் இருக்கிறார்களா? அப்படி இருந்தால் போக்குவரவு எப்படிச் செய்ய முடியும்? என்பதைப்பற்றியும், மனிதருடைய ஆயுள்விருத்தியை எந்தெந்த விதமாய் அடையலாமென்பதைப் பற்றியும் இன்னும் இவைபோன்ற உலகவிருத்திக்கும், மனித வாழ்க்கைக்கும், நலம் உண்டாக்குவது எப்படி என்றும் கண்ணுங் கருத்துமாய், ஆணும்பெண்ணுமாய் வேலை செய்துகொண்டிருக்கும்போது இங்கே ஜனங்களுடைய ஊக்கமும், அறிவும், பணமும, எந்தெந்த விதத்தில் செலவு செய்யப்படுகிறதென்றால், கோவிலுக்குள் இன்னாரை விடுகிறதா? இல்லையா? பொதுக்கிணற்றில் இன்னார் தண்ணீர் எடுக்கிறதா? இல்லையா? பொது ரஸ்தாவில் இன்னார் நடக்கிறதா? இல்லையா? என்பது போன்ற பல பூசல்களில் கவனஞ்செலுத்தி நாட்டில் பிளவுகளை ஏற்படுத்திக்கொண்டிருக்கிறார்கள். முக்கியமாக கடவுள், மதம், பக்தி, வேதம் முதலானவைகள் உற்சவம், சுபம், அசுபம் என்பது போன்ற சடங்குகள், நோன்பு வேண்டுதல், தீர்த்தம், மூர்த்தி, ஸ்தலம், காணிக்கைகள் இவை போன்ற அநேக விஷயங்களில் நாம் குருட்டு நம்பிக்கையினால் கைக்கொண்டதேயாகும். இந்த நம்பிக்கைதான் நமது நாட்டை மிகவும் மோசமான நிலைமையில் என்றும் விடுதலையடைய முடியாத அடிமைத் தனத்திலும் அறியா

தொடர்ச்சி 21ம் பக்கம் பார்க்க.

விருதுநகர் மூன்றாவது சுயமரியாதை மகாநாடு.

சுயமரியாதை வீரர்கள் தான் உண்மைதேசீய வாதிகள்.

மதபாதுகாப்பை தகர்க்கவேண்டும்.

தேசீய சுயமரியாதை வீண்பைத்தியமே.

சுயமரியாதை இயக்கமே விடுதலை இயக்கமாகும்.

தலைவர் திரு. ஷண்முகம் சொற்பொழிவு.

திரு. ஆர். கே. ஷண்முகம்.
மூன்றாவதுசுயமரியாதை மகாநாட்டுத் தலைவர்.

அன்பார்ந்ததாய்மார்களே! சகோதரர்களே!! சகோதரிகளே!!!

எனக்கு உடம்புக்கு திடீரென்று அசௌக்கிய மேற்பட்டு, இன்புளுயன்சா ஜுரத்தினால் அதிகக்கஷ்ட மேற்பட்டு, டாக்டர்கள் கண்டிப்பாக என்னை ஊரை விட்டுப்பிரயாணம்போகக்கூடாதெனத் தடுத்தும் கூட என்னுடைய ஆவலானது என்னை இங்கு வரும்படி செய்து விட்டது. என்றாலும்நான்பேசவேண்டுமென்று கருதியிருந்தவிஷயங்கள் முழுவதும்பேசுவதற்குமுடியாமலும், அதிகநேரம்பேசுவதற்குமுடியாமலும் போனதற்கு நான் மிகவும் வருத்தப்படுவதோடு உங்களையும் மன்னிக்கும்படியாய் வேண்டிக்கொள்ளுகிறேன்.

சகோதரர்களே! நான் இது சமயம் நின்றுகொண்டு பேசமுடியாத நிலைமையிலிருப்பதால் உட்கார்ந்து பேசுவதற்கு உங்களனுமதி பெற்று உட்கார்ந்து கொண்டு பேசவேண்டியவனாயிருக்கிறேன். இந்தப்பெரியதான ஒரு முக்கியமகாநாட்டிற்குத் தலைமை வகிக்கும் பெருமையை எனக்கு நீங்கள் அளித்ததற்கு நான் மிகுதியும் பெரும்பாக்கியத்தைப் பெற்றவனென்றே கருதிக்கொண்டு, எனது மனமார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். இம்மகாநாட்டுக்கு நான் தலைமை வகிக்க வேண்டுமென்று நமது நண்பர் திரு. சௌந்திர பாண்டியன் அவர்கள் எனக்குத் தெரிவித்த போது நான் "பல மகா நாடுகளுக்குத்தலைமை வகித்து எனது அபிப்பிராயங்களையெல்லாம் ஏற்கனவே தெரிவித்திருப்பதால் இந்தத்தடவை வேறு யாராவது ஒருவரை தேர்ந்தெடுத்துக்கொள்ளுங்கள்" என்று வணக்கமாய்த்தெரிவித்துக்கொண்டேன். ஆனால் எனது வேண்டுகோளை வரவேற்புக்கமிட்டியார் ஏற்றுக்கொள்ளாமல், நானேதான் தலைமை வகித்தாக வேண்டுமென்று கட்டளையிட்டதின் மேல் அதை நான் ஏற்றுக்கொள்ள வேண்டியவனானேன். ஆகவே என்மீது அவர்களுக்குள்ள அன்புக்கு நான் மறுபடியும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பழம்பாடம்படித்துக் கொண்டிருக்க வேண்டாம்.

சகோதரர்களே! நமது சுயமரியாதை இயக்கமேற்பட்டு 5, 6 வருஷகாலங்களாகி மூன்று பெரிய மாகாண மகாநாடுகளும், அநேக ஜில்லா தாலூகா மகாநாடுகளும் நடந்த பிறகும் இன்னும் நாம் நமது இயக்கத்தின் கொள்கைகளைப்பற்றி பேசிக்கொண்டிருக்கவேண்டிய அவசியமில்லை. அன்றியும் எனது தேக அசௌக்கியமானது அவற்றைப்பற்றி பேசவும் இடங்கொடுக்கவில்லை. ஆனால் வேறு இரண்டொரு விஷயத்தை மாத்திரம் பேசிவிட்டு எனது உபன்யாசத்தை முடித்துக் கொள்ளுகிறேன். அதாவது,

தேசீய சுயமரியாதை வீண் பைத்தியமே.

சென்ற ஒருவருஷகாலமாக நமதியக்கத்தின் தலைவர்களுக்கும் சிலதொண்டர்களுக்கும் சிறிது கொள்கைகளில் வித்தியாசங்கள் வெளியிடப்பட்டிருக்கின்றன. அவ்வித்தியாசங்கள் வலியுறுத்தியும் பேசப்பட்டு வருகின்றன. ஆனால் நான் அவற்றை சிறிதும் லட்சியம் செய்யவில்லை. ஒரு இயக்கமானது குழந்தைப்பருவத்திலிருந்து நன்றாக வளர்க்கப்பட்டு வாலிபப்பருவமடைந்து அது எவ்வித காரியங்களைச் சாதிக்க வலிமை பெற்றுவிட்டால் அதில் அபிப்பிராய பேதங்களேற்படுவது இயற்கையேதான். எந்த வலிமையுள்ள இயக்கத்திற்கும் அபிப்பிராயபேதமில்லாமலிருக்கமுடியாது. நமது இயக்கக் கொள்கைகளில் எனக்குச் சிறிதும் சந்தேகமில்லை. அதில் சந்தேகப்படக்கூடிய விஷயங்களுமில்லை என்றே சொல்வேன். ஆனால் நமது இயக்கத்தொண்டர்களில்பலர் "தேசீய சுயமரியாதை" என்பதாக ஒரு[illegible] ஏற்படுத்திக் கொண்டிரு[illegible]வும் நாம் நமதியக்கத்தில் [illegible]லதை கைவிட்டிருப்பதாகவு[illegible]ல்லிக்கொண்டு, பாமரமக்[illegible]தில் ஒருவித தப்பபிப்பிரா[illegible]டாக்க முயற்சித்துவருவ[illegible]கிறது இதுபெரிதும் நம[illegible] எதிரிகளின் சூட்சியென்[illegible]துகிறேன். நமது எதிரிகள் எதாவது ஒரு சூட்சி செய்[illegible] நமதியக்கத்தின் வளர்ச்சியை[illegible] முயற்சித்துத்தான் தீருவார்கள். அவற்றிற்கெல்லாம் நீங்கள் [illegible]விசாய்க்காதீர்கள் என்ற ஒரேசமாதானந்தான் சொல்லக்கூடும். ஏனென்றால், 'தேசீயசுயமரியாதை' யென்றும், 'தேசீயமல்லாத சுயமரியாதை' யென்றும், பிரித்து சொல்லுவது அருத்தமற்ற, பைத்தியக்காரத்தனமேயாகும்.

சுயமரியாதை வீரர்கள்தான் உண்மை தேசீய வாதிகள்.

சுயமரியாதை இயக்கத்தில் உள்ள எல்லோரும் உண்மையான தேசீய வாதிகளென்பதை மறந்துவிடாதீர்கள். போலி தேசீயவாதிகளே நமது உண்மையான தேசீயத்திற்கு முட்டுக்கட்டைப் போட இம்மாதிரி சொல்லித்திரிவார்கள். 'தேசீயம்' என்ற பதத்திற்கு குறுகியபொருள் கொடாமல், தனித்த சுயநலமில்லாமல், விசாலமான பொருளில் எல்லாமக்களுக்கும் பயன் தரத்தக்க முறையில் கணித்துப் பார்த்தோமானால் நமதியக்கந்தான் உண்மையான பலன்தரும்விடுதலை இயக்கமாகும்.

(இதன் தொடர்ச்சி 19-ம் பக்கம் பார்க்க)

விருதுநகர் இரண்டாவது சுயமரியாதை பெண்கள் மகாநாடு.

வரவேற்புக்கமிட்டித் தலைவி திருமதி பத்மாவதி திருவண்ணாமலை சொற்பொழிவு.

சகோதரிப்பிரதிநிதிகளே!

பலவருடங்களாய், ஆண்களாலும் மதத்தாலும், ஜாதிக்கட்டுப்பாட்டாலும், பழக்க வழக்கங்களின் பெயராலும் அடிமைகளாக்கப்பட்டு வந்த பெண்களின் விடுதலையைக்குறித்து இங்கு கூடியிருக்கும் எல்லா சகோதரிகளையும் மிகுந்த சந்தோஷத்துடன் வரவேற்கிறேன். நமது மகாநாட்டிற்குத் தலைமை வகிப்பதற்கு மனமுவந்து ஒப்புக்கொண்ட அனுபவம் மிகுந்த தலைவி ஸ்ரீமதி இந்திராணி பாலசுப்பிரமணியம் அம்மையார் அவர்களையும் வரவேற்கிறேன். நமது தலைவி அவர்கள் தங்கள் வாழ்நாட்களில் பெரும் பகுதியை பொதுஜன சேவையில் ஈடுபடுத்தி வந்திருப்பதால், அவர்களின் தலைமை ஸ்தானம், நமக்கு அதிக பயனை அளித்து நமது எதிர்கால வேலைத்திட்டத்தை நிர்ணயம் செய்யும் என்று உறுதியாக நம்புகிறேன். நமது தலைவி அவர்கள் ஆரம்பத்தில் தஞ்சை ஜில்லாவிலும் பிற்காலத்தில் கஞ்சம் ஜில்லாவிலும் பல ஸ்தல ஸ்தாபனங்களில் நிர்வாகம் வகித்து அதன்மூலம் பெண்களின் சுதந்தரத்திற்காகப் பாடுபட்டு வந்திருக்கிறார்கள். இந்தியா முழுமையிலும் எங்கும் கண்டிராதபடி பெர்ஹாம்பூர் முனிசிபல் சபையில் பலத்த போட்டியினிடையே உபத்தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். தனது ஆயுள் முழுமையும் பல பெண்கள் ஸ்தாபனமும், குழந்தைகள் ஸ்தாபனமும், ஆரம்பிப்பதிலும், அதில் உத்தியோகம் வகித்த காலத்தும் வகிக்காத காலத்தும், அவைகளை விருத்தி அடையச் செய்வதிலுமே அவாவுடையவர்களாக இருந்து வந்திருக்கிறார்கள். அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட இத்தகைய ஸ்தாபனங்களை இன்னும் தஞ்சாவூர் ஜில்லாவிலும், கஞ்சம் ஜில்லாவிலும் நாம் காணலாம். அவர்கள் சமீபத்தில் அதாவது 1931-ம் ௵ ஜனவரி மாதம் லாகூரில் நடந்த அகில இந்திய பெண்கள் கல்வி சமூதாய மகாநாட்டுக்கும் அகில ஆசிய மாதர் மகாநாட்டிற்கும் நமது பிரதிநிதியாகச் சென்று பல தொண்டுகள் ஆற்றியிருக்கிறார்கள். இத்தகைய அனுபவம் வாய்ந்த தலைகர் அவர்கள் நமது மகாநாட்டிற்குக் கிடைத்தது குறித்து நான் பெரு மகிழ்ச்சி அடைவதுடன் அவர்களை நம்மிடையே வரவேற்பதில் அளவிலா பெருமை கொள்கிறேன்.

இத்தகைய பெண்கள் மகாநாட்டின் அவசியத்தை இந்த நூற்றூண்டிலும் நான் உரைக்கத்தேவையில்லை. உலகில் உள்ள மற்ற தேசப் பெண்களைவிட நம் தேசப்பெண்களை ஆடவர்கள் அதிகமான அடிமைத்தனத்தில் ஆழ்த்தி வைத்திருக்கின்றனர். அதற்கு வேண்டிய கடவுள் சம்மதம் பெற்றதெனச் சொல்லப்படும், பல வேத சாஸ்திர பிரமாணங்களையும் உண்டுபண்ணி, ஔவை போன்ற நம் இனத்தார் வாயிலிருந்து வந்தது எனபலபொய்பழமொழிகளையும் தங்களுக்கு ஆதாரமாக எற்படுத்திக்கொண்டனர். காலசக்கரத்தின் வேகத்தின் பயனாய், நம்மை அறியாமலே யாரோ செய்த முயற்சியின் பயனாய், பெண்களிடையே விழிப்பு ஏற்பட்டு விட்டது பல பாகங்களிலும் சகோதரிகள் கூடி கூடிப்பேசுகின்றனர். சுதந்தரவேகம் அதிகரிக்கிறது. நம்மை அடிமைப்படுத்துவதற்காக எற்பட்டிருக்கும் கட்டுக்கதைகளும் பழமொழிகளும் நம்மை இனிமேல் ஏமாற்றமுடியாது. ஒவ்வொருகதையையும், பழமொழியையும் எடுத்து விரி உறை கூறி அவைகளுக்கு மறுப்புக்கூறி காலத்தை கழிக்க நான் இஷ்டப்படவில்லை. அத்தகைய கதைகளும் பழமொழிகளும் முறையே கடவுளாலும் நமது சகோதரிகளாலும் உண்மையில் சொல்லப்பட்டிருந்தாலும் நாம் அதை தற்காலத்தில் ஏற்றுக்கொள்ளப்போவதில்லை. அக்கடவுள்கள் காலம் வேறு. நாம் வாழும் நிலைமை வேறு. ஆகையால் நமது காலதேச வர்த்தமானத்திற்குத் தகுந்தவாறு நமது சௌகரியத்திற்கு வேண்டியவைகளை நம்மை அடிமைப்படுத்தினவர்களிடமிருந்து அபகரிப்பதில் நம் முயற்சியைச் செலவழிப்பதே புத்திசாலித்தனமாகும்.

தற்பொழுது நம்மைப்பொறுத்தமட்டில் ஆண்கள் எவ்வித சுதந்தரத்துடன் வாழ்கின்றார்களோ அவ்வித சுதந்தரத்துடனே நாமும் வாழப்பிரியப்படுகிறோம்.

தற்பொழுது அமுலில் இருந்து வரும் நடை முறைப்படி நம்மில் பெரும்பாலோருக்குச் சொத்துரிமை கிடையாது. ஆண்களைப்போன்ற சந்தோஷகரமான காரியங்களில் நண்பர்களுடன் கலந்து உறவாடும் உரிமையும் இல்லை. தேகாரோக்கியத்திற்காக செய்யப்பட்டுவரும் பயிற்சிகளும் பயிற்சிக்கூடங்களும் நமக்குக்கிடையா. கலாசாலையைப்போன்று, பயிற்சிக்கூடங்களும் அறிவு வளர்ச்சிக்கு அத்தியாவசியம் அல்லவா? பெண்களுக்காகவேண்டி டென்னிஸ் கிளப்புகளும், பேட்மின்டன் கிளப்புகளும், புத்தக வாசகசாலைகளும் எங்காவது இருப்பதாக நீங்கள் கேள்விப்பட்டதுண்டா? குக்கிராமங்கள் முதல் பெரிய பட்டணங்கள்வரை ஆடவர்கள் பலவித டாம்பீகம் உள்ள பயிற்சிக்கூடங்களை உண்டுபண்ணி தங்கள் ஆரோக்கியத்தைப் பெருக்கி வருகின்றார்களே! அது சமக்கும் வேண்டாமா? இத்துடன், கலியாண விஷயங்களிலும் நமக்கு சுதந்தரம் அளிக்க வேண்டும் என்று விரும்புகிறோம். இத்தகைய சாதாரண உரிமைகளைத் தானே நாம் கேட்கிறோம். இதில் என்ன குற்றம் இருக்கிறது. நமக்குப்பெரிய மந்திரி வேலைகள் தேவையில்லை. நம்மிடம் சிந்தனா சக்தி இருக்குமானால் அவைகளைப்பின்னால் எளிதில் பெரிதும் கொள்ளலாம். நமக்கு இப்பொழுது அவசியமாய் வேண்டுவது மேலே கூறப்பட்டக்குறைகள் உடனே நீக்கப்பட வேண்டும். அதற்காக நாம் கூசாமல் கிளர்ச்சிகள் செய்யவேண்டும். இவ்விஷயத்தில் கல்விகற்ற சில நம் சகோதரிகள் கூட, தம்மைச்சேர்ந்த பொது அறிவு இல்லாத சிலர், தம்மை ஏளனம் செய்கின்றனர் என்ற பயத்திற்காக தங்கள் முயற்சிகளைத் தணித்து வைக்கிறார்கள் என்பதை நோக்க நான் மிகவும் வருந்துகிறேன்.

அவ்வித பயங்களை ஒழித்து நமது கடமைகளை நாம் செய்யவேண்டும். காலதேச வர்த்தமானமும் நமக்கு அனுகூலமாக இருப்பதாகநான்கருதுகிறேன். பூனாவிலே புரோபசர்கார்வே என்பவர் மாதர்களுக்காகச் சர்வகலாசாலை ஏற்படுத்தி அவர்களை எதிர்கால வாழ்வு முறைக்கு ஏற்றவாறு பயிற்சி செய்து வருகிறார்கள். நமது நாட்டின் பலவேறு பாகங்களிலும் நமது சகோதரிகள் மகாநாடுகள் கூட்டியும் பெண்கள் இயக்கம் ஆரம்பித்தும் குடும்ப சொத்துரிமை, கலப்பு-விதவா விவாகங்கள் சிசு விவாகத் தடுப்பு போன்ற பிரச்சினைகளுக்காக பாடுபட்டு வருகிறார்கள். இக்கோரிக்கைகள நமது முன்னேற்றத்திற்கு அத்தியாவசியாய் இருப்பதால், நாமும் அவைகளைப் பரிசீலனை செய்து தக்கன இம்மகாநாட்டில் செய்யக்கேட்டுக்கொள்ளுகிறேன்.

நமது தலைவி அவர்கள் நமது உதவியால் அதிகமான கிளர்ச்சி செய்யத்தயாராக இருக்கிறார்கள் என்றே நம்புகிறேன். அவர்கள் ராஜமஹேந்திர புரத்தில் ஓர் பெண்கள் சங்கம் நிறுவி, அச்சங்கத்தில் கோஷா ஸ்திரீகளைக் கூட அங்கத்தினர்களாகச் சேரும்படி தூண்டி, பேட்மின்டன், டென்னிஸ் போன்ற விளையாட்டுகளையும் பழக்கிக்கொடுத்திருக்கின்றனர் வென்பதை நோக்க அவர்களின் முயற்சியும் உதவியும் நமக்குக்கிடைக்குமானால் நமது கிளர்ச்சியை இன்னும் பலப்படுத்தி விடலாம். நமது மாகாணத்திலே தோன்றியிருக்கும் சுயமரியாதை இயக்கமும் அதன் தலைவர்களும் நமக்கு வேண்டிய உதவி செய்யத்தயாராக இருக்கிறார்கள். சுயமரியாதை இயக்கத்தைப் பலப்படுத்துவதே நமது விடுதலையின் அஸ்திவாரமுமாகும். ஆகையால் நாம் நம்மால் இயன்ற அளவு சுயமரியாதைப்பிரசாரமும் செய்ய வேண்டும். இன்று காலையில் நடந்த சுயமரியாதை மகாநாடுத்தலைவர் திரு. ஆர். கே. ஷண்முகம் பி. ஏ., பி. எல்., எம். எல். ஏ., அவர்கள் நமக்கு அத்தியாவசியமாக வேண்டிய பல சட்டங்களை இந்திய சட்டசபையில் கொண்டுவந்து, தன் சகாக்களின் உதவியால் சட்டமாக்க முயற்சி செய்துகொண்டு வருகிறார்கள். அவ்வித சட்டங்கள் உண்டாகி, அவைகள் அமுலில் உடனே நடத்தப்படுமானால் நாம் சீக்கிரம் விடுதலை அடைவது உறுதி. ஆகையால் திரு. ஷண்முகம் அவர்களின் முயற்சி வெற்றி அடையவேண்டிய வெளிக்கிளர்ச்சிகளும் நாம் செய்யவேண்டும்.

இது போன்ற காரியங்கள் நம்முன்இன்று இருப்பதால் எல்லாப்பிரதிநிதிகளும் கலந்தாலோசித்து, நமக்கு நன்மை பயக்கத் தக்க ஓர் திட்டத்தை வகுக்க வேண்டுமாய் வேண்டிக் கொள்ளுகிறேன். இங்கு கூடியிருக்கும் உங்களுக்கு மறுமுறையும் வரவேற்புக்கூறி என் உபசரணைப் பிரசங்கத்தை முடித்துக்கொள்ளுகிறேன்.

தேவை! தேவை!

“பர்மா நாடு”

சிறந்த தினசரிப் பத்திரிகை.

இரங்கூன்.

பர்மாவில் தினசரிப் பத்திரிகையாக நடைபெற்றுவரும் ‘பர்மா நாடு’வை பல் வகையிலும், சிறந்ததோர் நவீன தினசரிப் பத்திரிகையாக நடத்துமாறு பல பெரும் முயற்சியிலீடுபட்டுள்ளதால் ஒத்துழைக்கக்கூடிய ஊக்கமும், உணர்ச்சயும், தேச பக்தியும், பத்திரிகைத் தொண்டில் சிறிது அனுபவமுள்ள இரு உதவியாசிரியர்களும், ஆங்கிலத்தினின்றும் எளிய இனிய தமிழ் நடையிலே மொழி பெயர்க்கக் கூடிய இரு மொழி பெயர்ப்பாளர்களும் தேவை. திறமைக்கும், உழைப்பிற்கும் தக்க ஊதியம் கிடைக்கும். விரும்புவோர் உடனே கீழ் குறிப்பிடும் விலாசத்திற்கு எழுதவும்.

இத்துடன் ஒவ்வொரு ஜில்லாக்களிலும் நமக்குச் சொந்த நிருபர்களும், பிரதிநிதிகளும், ஏஜண்டுகளும் தேவை.

பொருப்பாளர், “பர்மா நாடு”
221, 32-வது வீதி, இரங்கோன்.

ரோஜா முத்தையா

விருதுநகர் மூன்றாவது சுயமரியாதை மகாநாடு.

இரண்டு யானையும், ஆறு குதிரையும் கட்டிய இரதத்தில் தலைவர் ஊர்வலம்.

ஊர்வலத்தில் 15000-பேர்கள்.

முனிசிபல் உபசாரப்பத்திரம்.

மகாநாட்டில் 5000 பிரதிநிதிகள்.

பெண்கள் மகாநாட்டில் 3000 பெண்கள்.

வாலிபர் மகாநாட்டில் 2000 வாலிபர்கள்.

தண்ணீர் இல்லா ஊரில் ஏரி, குளம் போல் தண்ணீர்.

சாப்பாடும், சிற்றுண்டியும் பந்தி 1-க்கு 1500 பேர்.

மதம்-கடவுள்-காங்கிரஸ்-கதர்-ஹிந்தி-கண்டனம்.

இதுவரை நடந்தமகாநாடுகளை விட விசேஷமானது

விருதுநகரில் கூடிய மூன்றாவது சுயமரியாதை மகாநாடானது தமிழ் நாட்டில் இதுவரை நடந்த எந்த மகாநாட்டையும் விடப் பெரியதாகவும்சிறப்பாகவும் நடந்தது என்றே சொல்லவேண்டும்.

தமிழ் நாட்டிலும் கேரளத்திலும மற்றும் பல மாகாணங்களிலிருந்தும், பர்மா, கொளும்பு, மலாய் நாடு ஆகியவைகளிலிருந்தும் ஏராளமான பிரதிநிதிகளும் சிறப்பாக பெண்களும் வாலிபர்களும் இதுவரை நடந்த எல்லா மகாநாடுகளையும்விட அதிகமாக விஜயம் செய்திருந்ததானது முக்கியமாய் குறிப்பிடத்தக்கதாகும்.

மூன்றாவது சுயமரியாதைமகாநாட்டை விருதுநகரில் கூட்டுவதாக ஈரோடு மகாநாட்டில் கேட்டுக்கொண்டிருந்தபடி இவ்வருஷம் குறிப்பிட்ட காலத்திற்கு மேல் சில காரணங்களால் 2, 3 மாதம் காலதாமதமாகி விட்டாலும், இதற்குள் சிலர் பல கற்பனைகள் செய்து விஷமப்பிரசாரம் செய்து பரிகாசம் செய்து வந்தும் முடிவில் அவர்கள் எல்லோருமே வெட்கப்படத்தக்க மாதிரியில் விருதுநகர் மகாஜனங்கள் மகாநாட்டை நடத்திக்கொடுத்து விட்டார்கள்.

தண்ணீர் சௌகரியம்.

தண்ணீர் கஷ்டத்திற்கென்று மகாநாட்டை ஒத்திப்போட்டு வந்தும் கொஞ்சமும் தண்ணீரில்லாத காலத்தில் மகாநாட்டை நடத்தித்தீரவேண்டியதாகி, ஏரி, குளம் போல் ஜாகைகளிலும் கொட்டகைகளிலும் சமையல் இடத்திலும் ஸ்நானயிடத்திலும் தண்ணீரைக்கொண்டு வந்து நிரப்பி விட்டார்கள். சுமார் 65 வண்டிகளும் மோட்டார் லாரிகளும் மூன்று நாள் இரவும் பகலும் ஊருக்கு 2, 3 மைல்களுக்கப்பாலிருந்து தண்ணீர் கொண்டு வந்து கொட்டினவண்ணமாகவேயிருந்தன.

கட்சிப்பிரதிகட்சி.

ஊருக்குள் வேறு பல காரணங்களால் "கட்சிப்பிரதிகட்சியும் அபிப்பிராய பேதமும் வலுத்து இருப்பதால், சற்று சமாதானம் ஏற்பட்ட பிறகு மகாநாடு நடத்தலாம்" என்று கருதி சமாதானத்திற்காக எவ்வளவோ பொறுமை காட்டி வந்தும், கடைசிவரை அது பயன்படாமல்போய் கடைசியாக கலகத்தை தாராளமாய் வளரவிட்டு பதிலுக்குபதில் செய்யத் துணிந்து பலாத்காரம் உபயோகிக்க நேரிட்ட பிறகே மகாநாடு எதிர்பார்த்ததற்குமேல் வெகு சமாதானமாய் அபிப்பிராய பேதமென்பதே சிறிதுமில்லாத ஒரே குடும்பத்தாரால் நடத்தப்படும் மகாநாடு போல் நடத்தப்பட்டது.

இட விஷயத்திலும் ஜாகை விஷயத்திலும் நூற்றுக்கணக்கான வீடுகளும் பல மைதானங்களும், நந்தவனங்களுப, பள்ளிக்கூடங்களும் அடியோடு காலிசெய்யப்பட்டு மகாநாட்டுக்கு நான்கு நாள் முன்னதாகவே சுவாதீனம் செய்யப்பட்டு விட்டது.

கொட்டகை.

கொட்டகை விஷயத்தில் ஏதாவது ஒரு டிராமா கொட்டகையில் நடத்திவிடலாம் என்பதாகக் கருதியிருந்த வரவேற்புக்கமிட்டியார் உள்ளூர் எதிர்ப்பையும் வெளியூரிலிருந்து சில தொண்டர்களின் விஷமத்தனத்தையும் பார்த்தபிறகு தங்களுக்கு ஏற்பட்ட ஆவேசத்தால் ஒருபெரிய மைதானத்தில் மகாநாட்டுப்பந்தலும் சுற்றுபுறத்திய மதில் பந்தலும் போடப்பட்டிருந்த இடமானது 5-ஏக்கர் சுற்றளவுக்கு சதுரித்துஅடைப்புத்தட்டிகள் போட்டு மூன்று புறங்களிலும் கடைகள் கட்டி மத்தியில் வளைவு பார்க்குபோல் புஷ்பச்செடிகளால் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்ததுடன் பல ரோட்டுகளும் வகுக்கப்பட்டிருந்தன. மகாநாட்டுக் கொட்டகைக்கும் சாப்பாட்டு ஜாகைக்கும் நேரே ஒரு ரோட்டு வகித்து பல விளக்குகளும், தோரணங்களும், கட்டி அலங்கரித்து அதற்குப் "பாண்டியன் ரோடு" என்று பெயரும் கொடுக்கப்பட்டிருந்ததுடன் 200 அடிக்கும் 200 அடிக்குமாக ஒரு பெரிய கொட்டகையும் பந்தலும் போட்டு 12000 ஜனங்கள் தாராளமாக இருக்க சௌகரியம் இருக்கும்படியாக போடப்பட்டிருந்ததோடு அதன் மத்தியில் ஒருபெரிய அலங்கார மண்டபம் ஜோடித்து அக்கொட்டகை முழுவதும் சித்திர வேலைகளும் பூவேலைகளும் பார்ப்போர் கண்ணைப்பறிக்கும்படி செய்து இருந்ததுடன் மகாநாட்டுப் பந்தலுக்குள்ளும் வெளியிலும் மின்சார விளக்குகளும், மின்சார விசிரிகளும தொங்கவிடப்பட்டு இரவும் பகலும் இஞ்சின் வேலை செய்து கொண்டே இருந்தது. மகாநாட்டுப் பந்தலுக்குள் இருந்த சுமார் 400 கம்பங்களில் 200க்கு மேற்பட்ட கம்பங்களுக்கு சுயமரியாதை நீதிவாக்கியங்களும, புராணமரியாதைக்காரர்களின் புரட்டு வாக்கியங்களும், தேசியப்புரட்டு வாக்கியங்களும், பெரும் பெரும் எழுத்துகளில் அச்சடித்து அட்டைகளில் ஒட்டிகட்டித் தொங்கவிடப்பட்டிருந்தன.

பனகால்இராஜாபடமும், ஈ.வெ. இராமசாமி படமும், பெரிய சைசில் நடுமண்டபத்தின் இருமருங்கிலும் கட்டித்தொங்கவிடப்பட்டிருந்தன. சுகாதாரக் கண்காக்ஷி, மதுவிலக்குக் காக்ஷி, மருந்துகள் வைத்திய முறைகள் முதலிய காக்ஷிகள் வெகு விமரிசையாய் மைதானங்களில் வைக்கப்பட்டிருந்தன. இந்த் அலங்காரங்களைப் பார்த்த ஜனங்கள் இரண்டு மூன்றுநாளும் பகுதி பிரதிநிதிகளுக்கு மேலாகவே கொட்டகையைவிட்டு வெளியே போகமனமில்லாமல் கொட்டகையிலேயே சதா காலமும் இருந்து கொண்டு அதையே ஜாகையாக வைத்திருந்தார்கள்.

சாப்பாடு.

சாப்பாட்டு வசதிகள்என்பவைகளைஎடுத்துச்சொல்ல முடியாத அளவுக்கு அவ்வளவு பெருமையாய் நடத்தப்பட்டன. வரிசை ஒன்றுக்கு 100 பேர் உட்காரும்படியான 8, 8 வரிசைகள் கொண்ட 2-பெரிய கொட்டகைகளும், 40 அடுப்புகள் ஏககாலத்தில் எறியும்படியான 150 அடி நீளமுள்ள சமையல் கொட்டகையும், சாமான்கள்கொண்டுவந்துவைத்திருக்க 20X30 வீதம் 4 அறைகள் கொண்ட ஸ்டோர் கொட்டகையும் போடப்பட்டிருந்ததோடு சாப்பிட்ட ஜனங்கள் வந்து உட்கார்ந்துஇளைப்பாருவதற்கு 100X100 விஸ்தீரணம் கொண்டஒருபெரிய பந்தலும் போடப்பட்டிருந்தன.

சதாகாலமும் மீட்டிங்.

கொட்டகையில் மகாநாடு கூட்டம் இல்லாதபோது ஒரு நிமி

ஷமும் ஒப்பில்லாமல் சதா பிரசங்கங்களும், பாட்டுகளும், நாடகமும் நடந்த வண்ணமாகவே இருந்தன. சுமார் 100 பேர்கள் ஆதிதிராவிட வாலிபர்கள் இராணுவஉடையுடனும், தொண்டர் உடையுடனும் காப்பாளர்கள் கைகளில் தடிகளுடனும் கொட்டகையைச் சுற்றிக்கொண்டே இருந்தார்கள்.

———

தலைவர் வருகை.

வழிநெடுக வரவேற்பு.

மகாநாட்டுத்தலைவர் உயர்திரு. ஆர். கே. ஷண்முகம் அவர்கள் கோவையிலிருந்து தனது நண்பர்களுடன் புறப்பட்டதுமுதல் ஒவ்வொரு முக்கிய ஸ்டேஷன்களிலும் பல நூற்றுக்கணக்கான ஜனங்கள் அவரை வரவேற்று அவருக்கு மாலையிட்டு சிற்றுண்டி, பழம் முதலியவைகள் அளித்து ஆடம்பரத்துடன் வரவேற்புகள் நடந்து வந்தன.

7-8-31 தேதி மாலை 5-30 மணிக்கு ரயில் வண்டி விருதுநகர் ஸ்டேஷன் வந்து சேர்ந்ததும் சுமார் 2000 ஜனங்களுக்கு மேடையில் மாலைகளுடனும் பாண்டு மேளங்களுடனும் இருந்து வரவேற்று 5-30 மணிக்கே ஊர்வலம் துவக்கப்பட்டது.

ஊர்வலம்.

வீதிகளில் ஸ்டேஷனிலிருந்து முனிசிபல் ஆபீசு வரையிலும், முனிசிபல் ஆபீசிலிருந்து கொட்டகைவரையிலும், கொட்டகையிலிருந்து சாப்பாட்டு ஜாகை வரையிலும் வரவேற்பு வளைவுகளும், செருப்பந்தல்களும், தோரணங்களும், வெகு நெருக்கமாகவே போடப்பட்டிருந்ததானது குறிப்பிடத்தக்கது.

ரயில்வே ஸ்டேஷனிலும் பிரயாணிகள் வருகின்ற வழியில் ஒரு பெரிய பந்தல் போட்டு, அதற்குள்ளாகவே தலைவரை வரவேற்று, இரண்டு யானைகளும், ஆறு அழகிய குதிரைகளும் கட்டிய இரதத்தில் ஏற்றி, பாண்டுமேளவாத்தியங்களுடன் 7ந்தேதி மாலை 5-30 மணிக்கு ஊர்வலம் துவக்கப்பட்டது. ஊர்வலத்தில் சுமார் 10,12 மோட்டார் பஸ்களும், 5, 6 கார்களும் தொடர்ந்து வந்தன. ரோட்டின் இரு மருங்கிலும் ஜனங்கள் பிரிக்கப்பட்டு, தொண்டர்கள் அணி வகுத்து மத்தியில் வண்டிகள் விடப்பட்டன. குறைந்த அளவு ஊர்வலத்தில் 15000 ஜனங்கள் இருக்கக்கூடும். தெருக்களில் நின்று கைதட்டி, ஜேபோட்டும், மாலைபோட்டும் வரவேற்ற ஆண் பெண்களின் சங்கை கணக்கிடக்கூடியதல்லவென்றே சொல்லவேண்டும். ஊர்வலம் வளைவுப் பந்தல்கள் தோறும் நிறுத்தப்பட்டு, மாலையிட்டு, சந்தனம், பழம், கற்கண்டு வினியோகிக்கப்பட்டு நிதானமாய் ஊர்ந்தே செல்ல முடிந்தது. 5-30 மணிக்குப் புறப்பட்ட ஊர்வலம் 7 மணிக்கே முனிசிபல் ஆபீசை அணுக முடிந்தது.

முனிசிபல் உபசாரம்.

முனிசிபல் ஆபீசு (பனகால் மண்டபம்) மேல் மாடியில் தலைவருக்கு வரவேற்பு ஏற்பாடு செய்திருந்தபடி திரு. ஆர். கே. ஷண்முகம் அவர்கள் மாடிக்குப் பெருத்த ஜே! கோஷத்துடன் அழைத்துச் செல்லப்பட்டார். அந்த இடம் சிறிதாயிருந்தபடியால் கூட்டத்தின் நெருக்கடி சகிக்கமுடியாமல் சீக்கிரத்தில் வேலை முடிக்க வேண்டியதாயிற்று. அக்கூட்டத்தில் கவுன்சிலர்களும், கலெக்டர் திரு விஸ்வநாதன் அவர்களும், மற்றும் பல உள்ளூர் பிரபலஸ்தர்களும் விஜயம் செய்திருந்தார்கள். சேர்மென் அவர்கள் உபசாரப் பத்திரம் படித்ததும் தலைவர் ஷண்முகம் அவர்கள் பதிலளித்ததும், மாஜி சேர்மென் திரு. எம். எஸ். பி. செந்தில்குமார் அவர்கள், திருவாளர்கள். ஈ. வெ. இராமசாமிக்கும், சௌந்திரபாண்டியனுக்கும், இந்திராணி பாலசுபிரமணியம அம்மாளுக்கும், கலெக்டர் திரு விசுவநாதத்திற்கும் வரவேற்பு வந்தனம் சொல்லி மாலையிட்டு, 8 மணிக்குக் கூட்டம் முடிவு பெற்றது.

பிறகு அங்கிருந்து தலைவர் ஜாகைக்கு அழைத்துச் செல்லப்பட்டார். தலைவருடன் கோயமுத்தூரிலிருந்து வந்திருந்த திருவாளர்கள். பிரபல வியாபாரிகள் வி. எஸ். செங்கோட்டையா, பி. இரத்தினசபாபதி, பழனிசாமி, முருகநாதன், அனுப்பபாளையம் குமாரசாமி, பாலகிருஷ்ணன் முதலியவர்கள் தலைவர் ஜாகையிலேயே இறக்கப்பட்டார்கள். மற்றவர்கள் அவரவர்களுக்கு ஏற்பாடு செய்திருந்த ஜாகைகளில் இறக்கப்பட்டார்கள். பெண்கள் மகாநாட்டுத்தலைவி திரு. இந்திராணி பலசுப்பிரமணியம் அம்மாள் பெண்கள் மகாநாட்டு வரவேற்புத் தலைவி திருமதி பத்மாவதி திருவண்ணாமலை அவர்கள் ஜாகையில் இறக்கபபட்டார்கள்.

முன்னாளே பொதுக்கூட்டம்.

மகாநாட்டிற்கு முதல் நாளே அதாவது 7ந்தேதி பகலும் இரவுமே சுமார் 2000 பிரதிநிதிகளுக்கு மேலாகவே சாப்பாடு போடப்பட்டது.

இரவுக் கூட்டம்.

அன்று இரவு அதாவது 7-ந் தேதி இரவு மகாநாட்டுப் பந்தலில சுமார் 2000 ஜனங்களுக்குமேல் கூடி இருந்த கூட்டத்தில திருவாளர். எஸ். இராமநாதன் அவர்கள் தலைமையில் திருவாளர்கள் ஈ. வெ. இராமசாமி, கோவை ஏ. ஆர். சிவானந்தம் புதுவை ஜே. சவுரிநாதன், காஞ்சீபுரம கல்யாணசுந்திரம், குப்புசாமி, கே. வி. அழகிரிசாமி, அருப்புக்கோட்டை மலையப்பா, அ. பொன்னம்பலம், உடுமலை கனகராஜன், ப. ஜீவானந்தம், ஆகியவர்கள் கதர், காந்தி, ஹிந்தி, வருணாச்சிரமம், காங்கிரசு, மதம், கடவுள் ஆகியவைகளைப்பற்றிக்கண்டித்தும் சிலவற்றிலசாதகமாகவும், விவாதம்நடக்கும் முறையில் பேசினார்கள். கடைசியாக திரு. இராமசாமி பதில் சொன்னார். பிறகு தலைவர் இராமநாதன் அவர்கள் விளக்கமான முடிவுரையுடன் கூட்டம் இரவு 1 மணிக்கு முடிவுபெற்றது.

மகாநாடு ஆரம்பம்.

———

முதல் நாள் நடவடிக்கை.

8-தேதி காலை 9 மணிக்கு மகாநாடு ஆரம்பிக்கப்பட்டது.

8ல 9 மணிக்கே கொட்டகையில் சுமார் 5000-க்குமேற்பட்ட பிரதிநிதிகளும், 2000 விசிட்டர்களும் நிறைந்து விட்டார்கள். வெளி ஜில்லாப் பிரதிநிதிகளில் திருநெல்வேலி, தஞ்சை ஜில்லாக்களின் பிரதிநிதிகளே எண்ணிக்கையில் அதிகமானவர்களாகக் காணப்பட்டார்கள். ஏறக்குறைய இந்த இரண்டு ஜில்லாக்களின் ஒவ்வொரு முக்கிய கிராமத்திலிருந்தும் பிரதிநிதிகள் வந்திருந்தார்கள் என்றே சொல்லலாம். மதுரை, திருச்சி, சேலம் ஜில்லாக்களின் பிரதிநிதிகளும் குறிப்பிடப்பட வேண்டிய அளவுக்கே தாராளமாய் வந்திருந்தார்கள் என்றே சொல்லவேண்டும்.

திருவிதாங்கூர் பிரதிநிதிகளும், நாகர்கோவில் திரு பி. சிதம்பரம் அவர்கள் தலைமையில் தாராளமாய் சுமார் 150 பேர்களுக்கு மேலாகவே வந்திருந்தார்கள். இஸ்லாமியப் பிரதிநிதிகளும் தாராளமாய் விஜயம் செய்தது குறிப்பிடத்தக்கதாகும்.

உதாரணமாக, திருநெல்வேலி ஜில்லா கடையநல்லூர் என்கின்ற ஒரு கிராமத்திலிருந்து மாத்திரம் 40-க்குமேற்பட்ட முஸ்லீம் பிரதிநிதிகளும், மற்றும் சாத்தான்குளம், களக்காடு, பத்தமடை முதலிய ஊர்களிலிருந்தும் தக்க முஸ்லீம் பிரதிநிதிகள் வந்திருந்தார்கள். மற்ற ஜில்லாக்களிலிருந்தும் பிரதிநிதிகள் வந்திருந்தார்கள்.

மகாநாட்டிற்கு விஜயம் செய்திருந்தவர்களில் முக்கியமானவர்கள்:— திருவாளர்கள் கோவை ஆர். கே. சண்முகம் பி. ஏ. பி. எல். எம்.எல்.ஏ., ஏ. ஆர். சிவானந்தம், பி. இரத்தின சபாபதி கவுண்டர், பழனிசாமி நாயடு, வி. எஸ். செங்கோட்டையா, முருகநாதன் செட்டியார், குமாரசாமி செட்டியார், எம். வி. கருப்பண செட்டியார், எம். சிக்கையா, செகப்பண்ணன், கோவிந்தசாமி, கந்தசாமி, குதரத்துல்லா, சி. சுப்ரமணியம், ஈ. வெ. கிருஷ்ணசாமி, சா. இராமசாமி, ஈ. வெ. இராமசாமி, T. D. கோபால் திருமதிகள் ஈ. வெ. ரா. நாகம்மாள், இரகைம்மாள், கண்ணம்மாள், திருவாளர்கள் ஆர். டி எல்லநாயகம், ஆர். இராமசாமி, சூலூர் கிருஷ்ணன், திருமதி, அங்கமுத்தம்மாள் மற்றும் பலரும்.

சேலம் திருவாளர்கள் இரங்கசாமி தலைமையில் ஒரு கோஷ்டியும், திருச்சங்கோடு ஸ்ரீதரசுவாமி தலைமையில் ஒரு கோஷ்டியும் வாணியம்பாடி கோவிந்தசாமி தலைமையில் ஒரு கோஷ்டியுமாக விஜயமானார்கள்.

கரூர் திருவாளர்கள் வைஸ்சேர்மன் தாண்டவன் செட்டியார், கவுன்சிலர் ஈ. ஓ. சி எம். கிருஷ்ணசாமி செக்ரட்டரி கே. இராமசாமி, சுயமரியாதை சங்கக்காரியதரிசி இராமசாமி, திருச்சி. கி. அ. பெ. விஸ்வநாதம் அவர்கள் தலைமையில் ஒரு கோஷ்டியும், பாலசுப்பிரமணியம், டி. வி. சோமசுந்திரம், திருமலைசாமி, கலியபெருமான், வாசு முதலியவர்களும், மற்றும் பூவாளூர் கூத்தப்பெருமான், கே. வி. அழகர்சாமி எஸ். வி. லிங்கம், நாகை காளியப்பன், மாயவரம சி. நடராஜன் அவர்கள் தலைமையில் ஒரு பெரிய கோஷ்டியும், மற்றும் நாகைமணி, திருவாரூர் சாமி சிதம்பரனார், ராஜாராம், மாணிக்கம் ஆகியவர்களும, மற்றும் மன்னார்குடி, சீர்காழி, பட்டுக்கோட்டை, கும்பகோணம் சாக்கோட்டை முதலிய இடங்களிலிருந்தும் பலர் விஜயமாகி யிருந்தார்கள்.

மற்றும திருவாளர்கள் கருப்பணசாமி, பெருமான், கே ஏ. பண்டிதர், இராஜகோபால் ராம-சுப்பிரமணியம், திருமதிகள் எஸ், நீலாவதி, சுப்பையா விசாலாக்ஷி, சிவகாமி சிதம்பரனார், குருசாமி குஞ்சிதம், சகுந்தலா, மரகதவல்லி முருகப்பா, பொன்னம்பலனார் சுலோசனா, திருவாளர்கள் சொ. முருகப்பா, பொன்னமபலனார், எஸ். குருசாமி, எம். நேயல், டி இராஜகோபால், பாரதிதாசன், உடுமலை கனகராஜன், சித்தயன் கோட்டைமணி, அ. இராகவன், வேலாயுதம் திருநெல்வேலி இராமநாதன்; எஸ்'

[தொடர்ச்சி 17ம பக்கம பாரக்க]

விருதுநகர் மூன்றாவது சுயமரியாதை வாலிபர் மகாநாடு.

வரவேற்புக்கழகத்தலைவர் திரு. எஸ். ஜெயராம் பி. ஏ., அவர்களின் வரவேற்பு உபந்யாசம்.

வாலிபப்பிரதிநிதிகளே!

இந்தச்சமதர்ம மண்டபத்தில் ஒரே நோக்கத்துடன் குழுமியிருக்கும் எனது அன்புள்ள சகோதர வாலிபப் பிரதிநிதிகளாகிய உங்கள் எல்லோரையும் வரவேற்கிறேன். நாம் இங்கு கூடியிருப்பதன் நோக்கம் நமது தேசத்தில் சமத்துவம் வளர்ப்பதற்கும், சமதர்மம் ஓங்குவதற்கும் மார்க்கம் எவை என்பதைத் தீர்மானிப்பதற்காகவே கூடியிருக்கிறோம். நேற்றும் இன்று காலையிலும் நடந்த சுயமரியாதை மகாநாடும் பெண்கள் மகாநாடும் இதே இடத்தில்கூடி பல உபாயங்களைப்பற்றி விவாதித்து முடிவு கட்டியிருக்கின்றன. அப்படியிருக்க இவ்வளவு அபிமானத்துடனும், ஆசையுடனும், உற்சாகத்துடனும் கூடியிருக்கும் வாலிபர் மகாநாட்டின் வேலை என்ன? வயது முதிர்ந்தவர்களும், மிக்க அனுபவஸ்தர்களும் நமக்குத் தெரிவித்து, நமது பகுத்தறிவிற்குச் சரிதான் என்று தோன்றிய பிரச்சினைகளைப்பற்றி விவாதம் செய்துகொண்டிருப்பதற்காகவா நாம் இங்குகூடியிருக்கிறோம்? சிலர், வாலிபர் இயக்கம் என்றால், எதையும் ஆராய்ந்து பாராமலும் நிதானமில்லாலும், வீராவேசத்துடன் முடிவு செய்யும் தன்மையுள்ள கூட்டம் என்று கருதுகின்றார்கள். நீங்களும் அவ்விதம் எண்ணுகிறீர்களா? உண்மையில் அவ்வாறு எல்லோரும் கருதினாலும், வாலிபர்கள்தான் பொறுமையுடன் காரியங்கள் செய்யவேண்டியவர்களாக இருக்கின்றார்கள். பழைமையானவர்கள் வழிகளைக் கண்டு பிடித்தால் வாலிபர்கள் அதை நிறைவேற்றி வைக்கும் பொறுப்பையுடையவர்களாகின்றார்கள். ஆகவே நாம் தான் ஆத்திரம் அவசரமில்லாமல், நிதானத்துடன் நமது காரியங்களைச் செய்யவேண்டும்.

நிற்க. உலகில்பல இயக்கங்களும் வாலிபர்களின் ஒத்தாசையையே நாடுகின்றன. தனிப்பட்ட தலைவர்கள் என்பவர்கள்கூட ஓர் வாலிபனுடன் பிணக்குறுவதென்றால் பின்வாங்குகிறார்கள். திரு. காந்தி அவர்கள் பெரிய கக்ஷிகளுடன் போட்டிபோட தயாராயிருந்தாலும் திரு. ஜவஹர்லாலுடன் மனப்பேதம் கொள்ள அஞ்சுகின்றார். அமெரிக்க சர்வாதிகாரியான வாஷிங்டன், தெருவில் செல்லும் குழந்தைகளுக்கெல்லாம் வணக்கம் செய்வாராம். கிரேக்க தேசதத்துவஞானியான சாக்ரடீஸ் முதல், காலஞ்சென்ற நமது சுவாமி விவேகானந்தர் வரை பெரிய ஞானிகள் எல்லாம் வாலிபர்களைப்பற்றிப் பெருமையாக எழுதியிருக்கிறார்கள். இதன் இரகசியமென்ன? வாலிபர்களாகியவர்களிடம் எடுத்தக் காரியத்தை விடாமல் சாதித்து வெற்றிகரமாக நடத்திக் காண்பிக்கும் தன்மையிருப்பதனாலே யாகும். வாலிபர்கள் ஆதரவின்றி உலகில் எந்தக்கிளர்ச்சியும் வெற்றியடைந்ததில்லை யென்பதை மெய்ப்பிப்பதற்கு பலதேச வர்த்தமானங்களிலிருந்தும் அநேக உதாரணங்கள் எடுத்துக்காட்டலாம். அவைகளைப்பற்றி இங்கு பேசப்புகின் பெருகும்.

நமது அரசியல்.

நமது தேசத்தில் வாலிபர்களின் திறமையை எவ்வழியில் செலவுசெய்வது என்பதைக்குறித்து இன்னும் பலமேடைகளில் வாதப்போர்கள் நிகழ்த்தப்பட்டும், நிகழ்ந்துகொண்டுமிருக்கின்றன. ஒரு சாரார் சமுதாயவிடுதலையைவிட அரசியல் விடுதலைக்காகவே முதலில் பாடுபட வேண்டுமென வாதிக்கின்றனர். இன்னொரு சாரார், சமூகவிடுதலையே முதலில் வேண்டியது என அபிப்பிராயப் படுகின்றனர். என்னைப்பொறுத்த மட்டில் சமூக விடுதலையே இந்தியா சம்பந்தப்பட்ட மட்டில், இராஜீய விடுதலையைவிட மிக்க அவசியமானது என நினைக்கிறேன். பல்வேறு மதங்களும், ஜாதிகளும் நிரம்பியிருக்கும் நம் பாரதகண்டத்தில், அடிக்கடி ஏற்படும் குழப்பங்களுக்கும். சச்சரவுகளுக்கும் காரணம் என்னவென்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயமே. அவைகளைப்பற்றி நான் சொல்ல வேண்டியதில்லை. ஹிந்து முஸ்லீம் சச்சரவு ஒரு பெரிய பிரச்சினையாக இருந்துவருகிறது. அது போனாலும் ஜாதிச் சண்டைகளும், வைதீகர்களின் சண்டைகளும், நம் நாட்டில் நூற்றுக்கணக்காக நடந்து வருகின்றன என்பது பத்திரிகை வாசிக்கும் ஒவ்வொருவரும் தெரிந்த விஷயமே. இந்த சச்சரவுகளை யெல்லாம் அரசியல் விடுதலை ஏற்பட்டுவிடின் சீக்கிரத்தில் ஒழித்துவிடலாம். அன்னிய அரசாங்கத்தின் அடிமைகளாய் இருப்பதால் தான் நாம் சமூக விடுதலை செய்ய முடியவில்லை என சில பெரியோர்கள் சொல்வதை நான் ஒப்புக்கொள்ள முடியாது.

நம்பிக்கை இல்லை.

அன்னிய அரசாங்கம் இந்தியாவில் இருக்கும்பொழுதே, தாழ்த்தப்பட்டவர்களுக்கும், தீண்டாதவர்களுக்கும் ஏதாவது கதி மோக்ஷம் ஏற்பட்டால் தான் உண்டு. இல்லாவிடில் அவர்களுக்கு ஒரு காலமும் விடுதலை கிடையாது என்று நான் நிச்சயமாய் சொல்லுவேன். திரு. காந்தியவர்கள் மூலமாக நாம் எதிர்பார்க்கும் "ராம ராஜ்யத்தில்" இவர்களுக்கு ஓர் விடுதலை காலம் வருமென்பதில் எனக்கு நம்பிக்கை கிடையாது. அக்காலத்தில் இதைவிட ஜாதிச்சண்டைகள் அதிகரிக்குமென்பதே என் அபிப்பிராயம். ஜாதி ஹிந்துக்கள் மெஜாரிட்டியாக இருக்கும் ஓர் அரசியல் நிர்வாகத்தில், அவர்களால் தாழ்த்தப்பட்டவர்கள் தீண்டாதவர் என்று கருதப்படுகிறவர்களுடைய முன்னேற்றத்தையும். விடுதலையையும் எவ்விதம் அமுலுக்குக்கொண்டுவர முடியும்? அது பகற் கனவாகவே முடியுமென்பது என் அனுபவ அபிப்பிராயம்.

ஆகவே, நான் தேசிய இயக்கத்தை வெறுக்காவிட்டாலும், தேசிய விடுதலைக்கு முன் சமூக விடுதலை நம் நாட்டுக்கு அதியாவசிய மென்பதை நான் ஞாபக மூட்டுகிறேன். காங்கிரஸ் திட்டத்தில், தீண்டாமை முதலியவற்றை ஒழிப்பது என்பதை எழுத்தளவில் தான் பார்க்கிறோம். அதற்காக, எத்தனை தேசத்தலைவர்கள் இதுவரை பாடுபட்டிருக்கிறார்கள் என்று நான் கேட்கிறேன். அதிலும் நம் தமிழ் நாட்டு வைதீக தேசத் தலைவர்களைப்பற்றி கேட்க வேண்டியதில்லை. ஆனதுபற்றி, தேசிய விடுதலை நமக்குக் கிடைக்குமுன் சமூக விடுதலையும் ஏற்படாவிடில், அத்தேசிய விடுதலை நம் நாட்டுக்கு. விடுதலையாகா தென்பதே என் அபிப்பிராயம். இதே அபிப்பிராயத்தை பச்சையப்பன் கல்லூரியில், தற்பொழுது தென் ஆப்பிரிக்காவில் இந்திய கவர்ன்மெண்ட் கவர்னர் ஜெனரல் ஏஜண்டாயிருக்கும் சர் கே வி. ரெட்டியவர்கள் சொல்லி யிருக்கிறார்கள். (Social reform must precede political reform) ஆகையால் எல்லோருக்கும் சம உரிமை விரும்பும் சுயமரியாதைக்காரராகிய நாம் தேசிய விடுதலையைக்குறித்து போர் நடக்கும் அரசியல் இயக்கங்களுடன் சேர்வதைவிட, சமதர்ம இயக்கத்தை தனியாக நிறுவி வேலை செய்வதே நம்முடைய முதற்கடமை என்பது என் அபிப்பிராயம்.

நமது இயக்கம்.

மேற்கூறிய காரணங்களால் சமுதாயஇயக்கம் வேண்டிய அவசியத்தை உணர்ந்த நமது இயக்கத்தலைவர் கனம் இராமசாமிப் பெரியார் சுயமரியாதை இயக்கத்தை ஆரம்பித்தார். நமது இயக்கம் எவ்வித கட்டுப்பாடுகளையும் கடந்து நிற்பது. நமது பகுத்தறிவு எதைச் சொல்லுகிறதோ, அதைச் செய்யவேண்டுமென்பதுதான் நமது இயக்கத்தின் அடிப்படையான கொள்கை. அவ்விதம் கூறுகையில் போலிக்கடவுள்களும், மதங்களும் சின்னாபின்னமாக்கப்படுவது ஆச்சரியமல்ல. ஆகையால் பகுத்தறிவை அடிப்படையாகக்கொண்ட நம் இயக்கத்தின் லக்ஷியத்தைப் பின்பற்றிச் செல்லும் பொழுது நமது எதிரிகள் நமக்கு நாஸ்திகப்பட்டம் அளிப்பதற்காக நாம் பயப்பட வேண்டியதில்லை. சுயமரியாதை இயக்கம் மனிதசமூகத்தில் புதிதல்ல. அது உலகத்தில் பல்வேறு இடங்களில் பல்வேறு பெயர்களுடன் பரப்பப்பட்டு வருகிறது. மேல்நாடுகளில் நேஷனலிஸ்ட் (Nationalist) அறிஞர்கள் (Free-Thinkers) போன்றஇயக்கங்களும் இத்தாலியில் முசோலோனியின் பாஸிஸ்ட் (Fascist) இயக்கமும், ருஷியாவில் போல்ஷிவிக் Bolshwik) கொள்கைகளும், துருக்கியில் கெமால் இயக்கமும் சுயமரியாதைத் தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டனவே. அவைகளும் தங்கள் போராட்டத்தில் வெற்றியுற்றிருக்கின்றன. பெண்களை அடிமைகொள்வதிலும்; அவர்களுக்கு சொத்துரிமை மறுப்பதிலும் நாம் கண்டிக்கிறோம். பாலியவிவாஹத்தை நாம் பார்த்துக்கொண்டிருக்க முடியாது. கன்னிகை விதவைகள் கணவன் இன்றி கண்ணீர் விட்டு வாடுவதை யார்தான் சகிக்க முடியும்? இவைகளை அடிப்படையாகக் கொண்டிருக்கிற எம்மதமும் நமக்கு வேண்டியதில்லை. பெண்களை மிருகங்களைவிடக் கேவலமாய் நடத்துவதற்கு நான் ஒருக்காலும் சம்மதிக்க மாட்டேன். ஒரு குலத்தான் இன்னொரு குலத்தானை தாழ்த்தி அடிமைப்படுத்திக்கொள்ள, அவன் பிறப்பே காரணமென்று சொல்லும் எம்மதத்தையும் பரவவிட்டுக்கொண்டிருக்க முடியாது. அதைத்தகர்த்தெறிவதில், நம்முன் எவை முட்டுக்கட்டையாயிருப்பினும் நாம் பயப்படப் போவதில்லை. கடவுளானாலும் சரி, சாஸ்திரமானாலும் சரி, வேதமானாலும் சரி, நமக்கு எதிர்ப்பாகவருவது எவையானாலும் அவைகளை லக்ஷியம் செய்யாமலும் ஊக்கம் குன்றாமலும், நமது கொள்கைக்காக போராடவேண்டியது நம் கடமையாகும். அதற்காக நம் தலைவர்கள் சுயமாக மற்ற என்ன உத்திரவிடுகிறார்களோ அவைகளை ஆராய்ந்து செய்ய சித்தமாயிருக்கிறோம். நாம், தலைவர்கள் சொல்வதற்காக போராடுவதாகக் கருதக்கூடாது. நம் புனிதஇயக்கத்தின் தத்துவங்களுக்காகவே நாம் பாடுபடுவதாகக் கருதவேண்டும்.

ஆகையால் என் அன்பார்ந்த வாலிபப் பிரதிநிதிகளே! நித்திரையிலிருந்து விழித்தெழுங்கள்! உங்கள் முன் தோன்றும் எவ்வித பிரச்சினையைப்பற்றியும் உங்கள் மனசாக்ஷிக்கு சில கேள்விகள் போடுங்கள். அவைகள் என்ன முடிவைத் தருகின்

விருதுநகர் மூன்றாவது சுயமரியாதை வாலிபர் மகாநாடு.

திருச்சி பார்ப்பனரல்லாத வாலிபர் சங்க உபதலைவர்

திரு. டி. வி. சோமசுந்திரம் பி. ஏ., பி. எல்., அவர்களின் தலைமையுரை.

விருதுநகரில் நடைபெற்ற மாகாண சுயமரியாதை வாலிபர் மகாநாட்டில், திருச்சி பார்ப்பனரல்லாத வாலிபர் சங்க உபதலைவர் திரு. டி. வி. சோமசுந்தரம் பி. ஏ. பி. எல். அவர்கள் தலைமை வகித்துச் செய்த பிரசங்கத்தின் சுருக்கமாவது:—

எல்லா தேசங்களும்வாலிபர்களின் முயற்சியினால்தான் விடுதலையடைந்தன. அமெரிக்கா, ஜப்பான், துருக்கி, ருஷ்யா முதலிய நாடுகளெல்லாம் இளைஞர்களின் முயற்சியினால் தான் விடுதலை பெற்றன. அமெரிக்காவில் வாஷிங்டனையும், இடாலியில் மாஜினியையும், துருக்கியில் கெமால் பாஷாவையும் தலைவராகக் கொண்டு இளைஞர்கள் தம்தம் நாட்டில் செய்த கிளர்ச்சிகளை உங்களுக்கு ஞாபகமூட்ட விரும்புகிறேன். இன்றையதினம் கெமால் பாஷாவின் ஆளுகைக்குக்கீழ் துருக்கி இருக்கிற நிலைமையைச்சற்று நோக்குங்கள். துருக்கியை இனி 'ஐரோப்பாவின் பிணியாள்' என்றுசொல்லமுடியுமா? முதியோர்கள் தீவிரமான தீர்மானங்களைச் செய்தாலும், அவைகளைச் செய்கையில் நிறைவேற்ற சக்தியற்றவர்கள். நீங்கள் தான் நம் நாட்டின் விடுதலைக்குஉயிர்நாடிபோன்றவர்கள்.

இந்தியாவின் தாழ்மைக்குக் காரணம் சமூகக்கொடுமைகளே. நண்பர் திரு. ஜெயராம் அவர்கள் எடுத்துக் காட்டியதுபோலவே அரசியல் சீர்திருத்தத்தைவிட சமூக சீர்திருத்தத்தையே நம் முக்கிய லக்ஷியமாகக்கொள்ளவேண்டும். அன்னிய ஆட்சியை விடுத்து நாம் விடுதலை அடையவேண்டுமானால் முதலில் மூடப்பழக்க வழக்கங்களை நம் ஜன சமூகத்தைவிட்டு அறவே தொலைக்க வேண்டும். அநேக வருஷங்களாக மதத்தின் பேராலும் சாஸ்திரங்களின்பேராலும், அடிமைப் பட்டுக்கிடக்கும் ஆதிதிராவிட மக்களுக்கு சுயராஜ்ய அரசாங்கம் வந்தவுடன் அவர்களின் உரிமைகள் உடனே வழங்கப்படுமென்று மகாத்மா காந்தியார் சொல்வதை நாம் எங்ஙனம் உண்மையென்று நம்பிவிட முடியும்? நம்மைப்பொறுத்த மட்டில் அரசியல் உலகத்தைப்பற்றிக்கவலைப் படவேண்டுவதில்லை. சமூக சமுதாய சீர்திருத்தமே நம்முடைய கடமை. நம்நாட்டு தேசியத்தலைவர்களாகிய உயர் திரு காந்திஉட்பட பலரும், இன்னும் 'வருணாச்சிரம தர்ம'ப்பிடியினின்றும் விடுபடவில்லை. அவர்களுக்கும் நீங்கள்தான் விடுதலை கொடுக்கவேண்டும். சமத்துவமும், சகோதரத்துவமும் பரவவேண்டுமானால் மதமெல்லாம் மறையவேண்டும் என்று இன்று நிறைவேறிய தீர்மானத்தை நடைமுறையில் வாலிபர்கள் தான் கொண்டுவரவேண்டும். மக்கள் முன்னேற்றத்திற்கு மதம் வந்து தடை செய்தால் அது எந்த மதமாயிருந்தாலும் அதை நாம் ஒழித்துத்தான் ஆகவேண்டும். உங்களுடைய மேலான பகுத்தறிவையும் தன்முயற்சியையும் கொள்ளைகொண்டுகுருட்டுநம்பிக்கையையும், குருட்டுப் பழக்க வழக்கங்களையும் அடிமை மனப்பான்மையையும் உண்டாக்கி உங்களுடைய மேலான பகுத்தறிவையும் தன்மதிப்பையும் தொலைக்கும் மதத்தை உடைத்தெறியச் சிறிதும் அஞ்சாதீர்கள்! ஜாதி வேற்றுமை ஒழியவேண்டும். வைதீகர்களின் கோபத்திற்கும் பத்திரிகைகளின் சீற்றத்திற்கும் நீங்கள் அஞ்சாதீர்கள். மதப்பற்று உள்ளவர்களால் உங்களுக்குத்தீங்கு நேரிடில் அஞ்சாமல் உயிரைக்கொடுக்கத் தயாராயிருங்கள். உங்களைப்பின்பற்றும் வாலிப உலகம் உங்களைப்பெரிதும் போற்றும். மதப்பற்றையும், மதத்தையும் ஒழித்தலே நாம் இந்தியாவிற்குச் செய்யும் சிறந்த தேசியதொண்டாகும்.

இரண்டாவதாக நீங்கள் பெரிதும் கவனிக்க வேண்டிய விஷயம் இந்தியாவின் சமுதாய அமைப்பை ஒரு ஒழுங்குக்கு கொண்டுவரவேண்டிய அவசியமேயாகும். தற்காலம் நம் நாட்டில் மிகவும் வேண்டியது 'சமுதாயப் பொருளாதார சமதர்மம்'. சமதர்மக்கொள்கைகளை நாம் நாடெங்கும் சட்டவரம்புக்குட்பட்ட முறையில் பரப்புதல் வேண்டும். தற்காலம் ஒவ்வொன்றும் பெரிதும் மாறுதலடைந்து வருகிறது. எதனையும் அப்படியே நம்புங்காலம் மலையேறி விட்டது. சுதந்திரம், சொத்து, குடும்பம், நிதி, சட்டம் ஆகியவைகளைப் பற்றிய பழைய எண்ணங்களெல்லாம் தாக்கப்படவேண்டும் நமது இந்திய சமூகத்தின் அடிப்படையான கொள்கைகளில் மாறுதல் செய்தாக வேண்டும். சமதர்மமும், பொதுவுடமையும் தழைத்தோங்கும் ருஷ்யாநாட்டிலிருந்து, நாம் அறிந்துகொள்ளவேண்டிய விஷயங்கள் பல உள. இந்தியாவின் வாலிப உலகம் சமதர்மக்கொள்கைகளை நாடெங்கும் பரவச்செய்யுமாகில் தற்காலம் நமது சுதந்திரத்திற்குத் தடையாக இருக்கும் பல வகுப்புக்களிடையே நிலவும் மகிழ்ச்சியற்ற வேற்றுமைகள் தாமாகவே மறைந்தோடும்.

அடுத்தபடியாக, வாலிபப்பிரதிநிதிகளே! உங்கள் ஊக்கத்தையும் கவனத்தையும் விவசாயிகளின்—தொழிலாளர்களின்—முன்னேற்றத்திற்காகப் பெரிதும் செலுத்துவீர்களாக! இனி வரப்போகின்ற இந்திய அரசாங்கம் தொழிலாள விவசாய சகோதரர்களால்தான் நிறுவப்படவேண்டும். சமுதாயஒழுங்கையும்,சமநிலைமையையும் கொண்டுவர வேண்டுமானால், இவர்களுக்காக நாம் பெரிதும் முயற்சியெடுத்துக்கொள்ளவேண்டும். டிரேட், யூனியன்களெனப்பட்ட தொழிற் சங்கங்கள் நாடெங்கும் நிறுவப்படல் வேண்டும். தற்காலம் நம்நாட்டில் தொழிலாளர்கள் விவசாயிகளின் முன்னேற்றத்திற்குப் பாடுபடுவது தான் உண்மைத் தேசியத்தொண்டு என்பதை எந்த அறிவுள்ள மனிதனும் மறுக்க முடியாது. இவர்கள் விஷயத்தில் காங்கிரஸ் சில சமயங்களில் நல்லெண்ணத்தைத் தெரிவிக்கிறது. ஆனால் வாயளவிலேயே நின்றது. முதலாளிகள், ஜமீன்தாரர்கள் பக்கமே இன்று காங்கிரஸ் பெரிதும் சாய்ந்தது. ஆகையால் காங்கிரஸ் கொள்ளையடிப்பதையும், அநீதியையும் ஆதரிக்கின்றது என்பதில் என்ன சந்தேகம்? முதலாளிகள் ஏழைத் தொழிலாளர்கள் மீது செலுத்தும் ஆதிக்கத்தை பொழிக்க நாம் முயலவேண்டும்.

சுயமரியாதை

தொண்டர் மகாநாடு.

திருவாரூரில் இம்மாதம் 22, 23-8-31தேதிகளில் கூடுவதாக ஏற்பாடு செய்திருந்த சுயமரியாதைத்தொண்டர்களின் மகாநாடு சில காரணங்களால் இம்மாதம் 30ந் தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டிருக்கின்றதென திரு. சி. நடராஜன் அவர்கள் தந்தி மூலம் அறிவிக்கின்றார்.

விருது நகர் இரண்டாவது சுயமரியாதை பெண்கள் மகாநாடு.

நிறைவேறிய தீர்மானங்கள்.

8—8—31ந் தேதி மாலை 3-மணிக்கு சுயமரியாதை மகாநாட்டுப் பந்தலில் ஸ்ரீமதி இந்திராணி பாலசுப்பிரமணியம் அம்மாள் அவர்களின் தலைமையில் கூடிய மாதர்கள் மகாநாட்டில் பின்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன,

1. பெண்களின் கல்வியை 11-வயதிலேயேநிறுத்தி விடாமல்பெண்களை 30 வயது வரை படிக்க வைக்க வேண்டும்.

2. கவர்ன்மெண்டார் சாரதா சட்டத்தைஎல்லாப்பிரதேசங்களிலும்உடனே அமுலுக்குக்கொண்டுவரவேண்டும்.

3. பெண்களைவைத்தியத்தொழிலுக்கும், உபாத்திமைத் தொழிலுக்கும் மாத்திரம் தற்பொழுது எடுப்பது போதாது. அவர்களைப் போலீஸ் இலாகாவிலும், இராணுவத்திலும் சேர்க்கவேண்டும்.

4. விதவாவிவாகத்தை இம்மகாநாடு ஆதரிக்கிறது.

5. பெண்களுக்கு ஆண்களைப் போல் சொத்துரிமையில் சமத்துவமளிக்க வேண்டும்.

6. பெண்களுக்குகணவர்கள்பிடிக்காவிடில் அக் கலியாணத்தை ரத்துச் செய்ய விவாகரத்துச்சட்டம் வேண்டும்

7. தேவதாசிச் சட்டத்தை உடனே அமுலுக்குக் கொண்டுவர வேண்டும். விபசார விடுதிகளை ஒழிக்க வேண்டுமென்று இம்மகாநாடு அபிப்பிராயப்படுகிறது.

8. இராஜதானியில் அநேகமத்திய இடங்களில் மருத்துவப்பயிற்சி கொடுக்கக்கூடிய பள்ளிகள் திறக்கப்பட வேண்டும்.

9. சென்னையில் அனாதை சம்ரக்ஷணாலயம்ஒன்றைஸ்தாபிக்கநிதி வேண்டுமென்று சென்னை விஜிலன்ஸ் சங்கத்தார் கோரியுள்ள வேண்டுகோளை வரவேற்கிறது.

10. கோயில்களில்பொட்டுகட்டுதலை தடுப்பதுடன், அதற்கு உடந்தையாகயிருப்பவர்களை மாஜிஸ்ட்ரேட்டுகளிடம் காட்டிக்கொடுக்க வேண்டுவதுடன், தேவதாசி வழக்கத்தை வைத்துக்கொண்டு

தொடர்ச்சி 16ம் பக்கம் பார்க்க.

ரோஜா முத்தையா
ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

விருதுநகர் மூன்றாவது சுயமரியாதை மகாநாடு.

நிறைவேறிய தீர்மானங்கள்.

மதக்கண்டனம்.

1 (a) மனிதத்தன்மையைத் தடைப்படுத்துவதற்கு மதங்களின் பேரால் ஏற்பட்டுள்ள பழக்க வழக்கங்களே காரணமாயிருப்பதால் அப்படிப்பட்ட எல்லா மதங்களும் மறைந்துபோகவேண்டுமென்றும், மதங்கள் ஒழியுவரை மனிதர்களுக்குள் சகோதரத்துவம் வளராதென்றும் இம்மகாநாடு அபிப்பிராயப்படுகிறது.

(b) இந்தியதேசத்தில் தோன்றியுள்ள மதவேற்றுமைகளும், பகைகளும் அழியவேண்டுமானால் அறிவுள்ள இந்தியர்கள் முதலில் மதஉணர்ச்சியை புறக்கணிக்க வேண்டுமென்று தீர்மானிக்கிறது.

பிரேரேபித்தவர்
திருச்சி திரு. கே. எம். பாலசுப்ரமணியம் பி. ஏ. பி. எல்.,
ஆமோதித்தவர்
டி. வி. சோமசுந்திரம் பி. ஏ. பி. எல்.,

காங்கிரஸ் காந்தி கொள்கை கண்டனம்.

2. தற்கால லௌகிக முன்னேற்றத்திற்கு அனுகூலமாக சட்டசபைகளில் வரும் முக்கியமான சீர்திருத்தச்சட்டங்களையெல்லாம் பிற்போக்காளர்கள் மதத்தின் பேரால் ஆக்ஷேபிப்பதால், இம்மகாநாடு அரசாங்கத்தார் அனுசரித்துவரும் மதநடுநிலைமையை ஆதரிக்கும் எந்த அரசியல் சமுதாயக்கக்ஷிகளேயும் ஒப்புக்கொள்ள முடியாதென்றும், எதிர்கால இந்திய அரசியல் சீர்திருத்தத்தில் "மதநடுநிலைமை" என்னும் கொள்கை நீக்கப்படவேண்டும் என்றும் வற்புறுத்துகின்றது.

பிரேரேபித்தவர்
எஸ். ராமச்சந்திரன் பி.ஏ.பி.எல்.,
ஆமோதித்தவர்
ஈ. வெ. இராமசாமி.

3 (a) இந்திய சமூகத்தில் பிறவியின் காரணமாய் ஏற்படுத்தப்பட்டிருக்கும் வித்தியாசங்களுக்கும் ஏற்றதாழ்வுகளுக்கும் வருணாச்சிரமதர்மக்கொள்கையேகாரணம் என்று இம்மகாநாடு கருதுகின்றமட்டில் வருணாச்சிரம தர்மத்தை ஆதரிக்கும் எந்த இயக்கத்தையும் இம்மகாநாடு எதிர்க்கிறது.

பார்ப்பனீய கண்டனம்.

(b) தீண்டாமை என்பது இந்துசமூகத்திலுள்ள சகல ஜாதிகளேயும் பிடித்த நோயென்றும் தீண்டாமை ஒழியவேண்டுமானால் பிராமனீயம் ஒழியவேண்டுமெனவும் இம்மகாநாடு தீர்மானிக்கிறது.

பிரேரேபித்தவர்
எஸ். இராமநாதன் எம்.ஏ.பி.எல்.,
ஆதரித்தவர்
டி. வி. சுப்ரமணியம், கஞ்சமலை.

இந்தி கொள்கை கண்டனம்.

4 (a) வருணாச்சிரம கொள்கையைவெள்ளைஜாதியின்பற்றுவதால் தான் நிறபேத சண்டை உலகில் வலுத்து வருவதால், கலப்பு மணங்களாலும், அறிவு ஆராய்ச்சி துறைகளில் மக்கள் எல்லோரும் கலந்து ஒத்துழைப்பதின் மூலமும் எல்லாவித வித்தியாசங்களும் நீக்கப்படக்கூடும் என்றும் அதற்காக அன்னியபாஷைகளையும் கற்கவேண்டுமென்றும் இம்மகாநாடு கருதுகின்றது:

(b) தேசீயத்தின் பெயரால் ஹிந்தி பாஷையை கற்கவேண்டுமென்பது வருணாச்சிரமத்திற்கு ஆதரவு கொடுப்பதாய் இருப்பதால் ஹிந்தி கொள்கையை கண்டிக்கின்றது.

பிரேரேபித்தவர்
எஸ். முருகப்பா.
ஆமோதித்தவர்
சாமி சிவநேசன்.

கதர் கண்டனம்.

5. பொருளாதாரத் துறைக்கும், தொழில் அபிவிருத்திக்கும், இயந்திர வளர்ச்சிக்கும், சமதர்ம உணர்ச்சிக்கும் கதர் தத்துவம் விரோதமாய் இருப்பதால் கதர் தேசியப் பொருளாதாரத் தொழில் திட்டம் என்பதை இம்மகாநாடு மறுக்கின்றதுடன் தொழில் முறை இயந்திர வளர்ச்சியை இம்மகாநாடு ஆதரிக்கின்றது.

பிரேரேபித்தவர்
எஸ். இராமநாதன்எம்.ஏ.பி எல்,,
ஆமோதித்தவர்
சாமி சிதம்பரனார்.

6. நமது இயக்க வெளியீடாக "சண்டமாருதம்" என்ற தமிழ் தினசரிப் பத்திரிகை இம்மகாநாடு தினத்தில் வெளி வந்துள்ளதை நல்வரவு கூறி பெரிதும் பாராட்டுவதுடன் ஒவ்வொருவரும் சந்தாதாரராகச் சேர்ந்து போதிய ஆதரவு அளிக்க வேண்டுமாய் இம்மகாநாடு எல்லாப்பிரதிநிதிகளேயும் கேட்டுக் கொள்ளுகிறது.

பிரேரேபித்தவர்
அ. பொன்னம்பலம்,
ஆமோதித்தவர்
டி.வி. சோமசுந்திரம் பி.ஏ.பி.எல்.,

7. பெண்கள் முன்னேற்றத்திற்கு பெண்களுக்குச் சொத்துரிமை, கல்யாண உரிமை, கல்யாணரத்து, விதவைமணம் முதலானவைகளை அமுலுக்குக் கொண்டுவரவேண்டியது அவசியமென்றும், அதற்கேற்ற சட்டசம்பந்தமான காரியமும் செய்யப்படவேண்டும் என்றும் இம்மகாநாடு தீர்மானிக்கின்றது.

பிரேரேபித்தவர்
இந்திராணி பாலசுப்ரமணியம் அம்மாள்,
ஆமோதித்தவர்
கே. எம். பாலசுப்ரமணியம் பி. ஏ. பி. எல்.,

8. தலைச்சங்கத்தை ரிஜிஸ்டர் செய்ய வேண்டுமாய் இம்மகாநாடு தீர்மானிக்கிறது.

நமதியக்கத்தை அகில இந்திய இயக்கமாக்குவதற்கும், நமதுஇயக்கக் கொள்கைகளை அகில இந்திய மக்கள் தெரிந்துகொள்ள வேண்டியும் ஓர் ஆங்கில வாரப் பத்திரிகையை விரைவில் ஆரம்பிக்க வேண்டுமாய் தீர்மானிக்கிறது.

பிரேரேபித்தவர்,
ப. ஜீவானந்தம்.
ஆமோதித்தவர்,
பி. சிதம்பரம் பி. ஏ., பி. எல்.,

9. (a) ரயில்வே, முனிசிபாலிட்டி முதலிய எல்லைகளில்லைசென்ஸ் பெற்று ஜாதி வித்தியாசத்தைக் காண்பிக்கக் கூடியவாறு மக்களுக்குள் பார்ப்பனருக்கு என்றும் பார்ப்பனரல்லாதாருக்கு என்றும் தனித்தனி இடம் ஒதுக்கப்பட்டிருக்கும் சாப்பாடு, காபி கிளப்புகளுக்கு இனிமேல் ரயில்வே போர்டாரும், முனிசிபாலிட்டியாரும்லைசென்ஸ்கொடுக்காமல் இருக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்வதுடன் இதற்கு வேண்டிய சட்டத்தை இயற்ற சட்டசபை அங்கத்தினர்கள் ஊக்கமுடன் சட்டமாக்கி அமுலுக்குக் கொண்டுவரக் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

(b) மேற்கண்ட சமத்துவக் கொள்கையை கையாளும் மதுரை கோவப்பரேட்டிவ் ரெஸ்டாரண்டு உணவுசாலை லிமிடெட்டில் பங்கு எடுத்துக்கொள்ளவும், சொசைட்டி சாப்பாட்டை ஆதரிக்கவும் இம்மகாநாடு சிபார்சு செய்கிறது.

பிரேரேபித்தவர்,
ராமசுபரமணியம்,
ஆமோதித்தவர்,
மதுரை நாராயணன்எம்.ஏ.பி.எல்.

10. இராமநாதபுரம் ஜில்லா தேவகோட்டை டிவிஷனில் உள்ள ஆதிதிராவிடர்களின் துயரங்கள் சம்பந்தமாய் சென்னை சட்டசபையில் 4-8-31ல் நிறைவேற்றி இருக்கும்தீர்மானப்படி விசாரணை க்கமிட்டி ஒன்று சீக்கிரம் நியமிக்கும்படி சென்னை கவர்ன்மெண்டாரை இந்த மகாநாடு கேட்டுக் கொள்ளுகிறது.

அக்கிராசனர்

11. சர்க்கார் விடுமுறை என்று பண்டிகைகளைப் பிரதானமாய் வைத்து லீவுகள் கொடுப்பது என்பது ஒரு வகையில் மூடப் பழக்க வழக்கத்தில் கட்டுபட்டதாய் இருப்பதால் சர்க்காரார் அந்த வழக்கத்தை விட்டுவிட வேண்டுமென்றும் அவசியமிருப்பவர்கள் தனி லீவு எடுத்துக் கொள்ளலாம் என்றும் இம்மகாநாடு தீர்மானிக்கின்றது.

அக்கிராசனர்.

சுயமரியாதை சங்க நிர்வாகக் கமிட்டி அங்கத்தினர்கள்.

ஆர். கே. ஷண்முகம் பி. ஏ., பி. எல்., எம். எல். ஏ. தலைவர்.

ஊ. பு. அ. சௌந்திர பாண்டியன் எம். எல். சி. ஈ. வெ. இராமசாமி, உபதலைவர்கள்.

எஸ். இராமநாதன் எம். ஏ. பி. எல். காரியதரிசி.

வை. சு. ஷண்முகம் பாங்கர் பொக்கிஷதார்.

அங்கத்தினர்கள்.

திருவாளர்கள் பி. சிதம்பரம் பி.ஏ., பி.எல்., நாகர்கோவில் எஸ். இராமச்சந்திரன் பி.ஏ.பி.எல். சிவகங்கை. இந்திராணிபாலசுபரமணியம் இராணிப்பேட்டை. எஸ். நீலாவதி அமராவதி புதூர். வி. வி. இராமசாமி வியாபாரி விருதுநகர். கே. ஏ. பி. விஸ்வநாதம் திருச்சி. சொ. முருகப்பா காரைக்குடி. சி. நடராஜன் மாயவரம். சாமி சிதம்பரனார் திருவாரூர். கே. வி. அழகிரிசாமி மதுரை. டி. வி. சோமசுந்திரம் பி. ஏ., பி. எல்.. எம். டி. பி. திருச்சி. என். சிவராஜ் பி. ஏ., பி. எல்., எம்.எல்.சி. சென்னை. வி. ராஜமாணிக்கம் வியாபாரி தாலுகா போர்டு பிரசிடெண்ட் சேலம்.

பிரேரேபித்தவர்,
ஈ. வெ. இராமசாமி.
ஆமோதித்தவர்,
பி. சிதம்பரம்

ஜா முத்தையா நூலக அறக்கட்டளை

குடி அரசு

ஈரோடு 1931ஹு ஆகஸ்டு 16உ

விருதுநகர் மகாநாடு.

—:0:—

I.

'சுயமரியாதை இயக்கம்' என்பதாக ஒரு இயக்கம் தோன்றி சுமார் 5, 6 வருஷகாலமாகியிருந்தாலும், பொது மகாநாடு என்பதாக இந்த இரண்டு மூன்று வருஷங்களாகப் பெரிய பெரிய மகாநாடுகளும் அதற்கு முன்பிருந்தும் ஜில்லா, தாலூகா மகாநாடு என்பதாகப்பல மகாநாடுகளும்தமிழ்நாட்டில் கூட்டப்பட்டுவருவது யாவருமறிந்ததேயாகும்.

மற்றும் அது சம்பந்தமான பிரசாரங்களும் தமிழ் நாட்டில் ஆங்காங்கு தினந்தோறும் நடைபெற்று வருவதும் யாவருமறிந்ததாகும்.

இவற்றின் பயனாய் இந்துக்களென்று சொல்லிக்கொள்ளப்படும் பெரும்பான்மை மக்களுக்குள் ஒரு தலைகீழான பெரிய மனமாறுதலும் மற்றும் மதசம்பந்தமான சமூக சம்பந்தமான காரியங்களில் செய்கையிலேயுங்கூட ஒரு பெரிய மாறுதலும் ஏற்பட்டு வந்திருக்கின்ற விஷயமும் யாவரும் அறிந்ததேயாகும்.

இந்த இயக்கமும் இதற்கு ஏற்பட்டுள்ள பல அதிதீவிரக்கொள்கைகளும் மதவுணர்ச்சிக்கும் பழக்க வழக்கத்திற்கும் நேர் மாறுதலானதாயிருந்தும் இவ்வளவு சொற்ப நாளில் இவ்வளவு தூரம் பாவியதற்குக் காரணம என்னவென்றால் இவ்வியக்கம் கண்டும் இவ்வியக்கத்திற்கு சேவை புரிந்தும வரும் மக்கள் யாவரும் ஏறக்குறைய எல்லோரும் வெகுகாலமாகவே பொது வாழ்வில் அதாவது, "தேசீய"த் துறை என்பதிலும் 'சமூக'த் துறைஎன்பதிலும்'சமய'த்துறை என்பதிலும ஈடுபட்டு மனப்பூர்த்தியாய் உழைத்து வந்து சிறிதும் பயன் பெறாமல் ஏமாற்றமடைந்தவர்களானதால் இந்தப் புதிய முயற்சியால் அவர்களுக்கு ஏற்பட்ட நம்பிக்கையும் அனுபவமும் மன உறுதியும் தீவிரப்பிரசாரத்திற்கு தூண்டுகோலாகி பொது மக்களின் பகுத்தறிவைப் பிடித்து ஆட்டி அசைத்துப் பலரை சொன்னபடி கேட்கவேண்டியதாய் செய்து வந்ததுடன் ஒவ்வொருவரையும் இணங்கி இதில் இறங்கி வேலைசெய்யும்படியும் செய்து விட்டது.

இதன் பயனேதான் ஆங்காங்கு தனக்குத்தானே பிரசாரங்கள் நடக்கவும் மகாநாடுகள் கூடவும் அதிதீவிர தீர்மானங்கள் செய்யவும் ஏற்பட்டு வருகின்றது என்பது மிகையாகாது.

இந்த முறையிலேயே இம்மாதம் 8, 9 தேதிகளில் விருதுநகரில்மாகாணமூன்றுவது சுயமரியாதைமகாநாடு என்பதாகஒருபெரியமகாநாடு கூடிஏராளமானதமிழ் நாட்டுவாலிபமக்களை அழைத்து வைத்துபல தீர்மானங்களைச்செய்திருக்கின்றது. அதனுடன் கூடவே சுயமரியாதை பெண்கள் இரண்டாவது மகாநாடும், சுயமரியாதை வாலிபர்கள் 3வது மகாநாடும் நடத்தப்பட்டு பல தீர்மானங்களும் செய்யப்பட்டிருக்கின்றன. இம்மகாநாடுகளில் வரவேற்புக்கமிட்டித் தலைவர்கள், தலைவர்கள் ஆகியவர்களின் சொற்பொழிவுகளும் தீர்மானங்களும் பெரிதும் இரண்டு முக்கிய தத்துவங்களையே அடிப்படையாகக் கொண்டிருப்பது கவனித்தவர்களுக்கு விளங்கியிருக்கும்.

அதாவது ஒன்று மதசம்பந்தமாகவும், கடவுள் சம்பந்தமாகவும், சமூக சம்பந்தமாகவும், நமதுதேசத்தில்இருந்துவரும்பல பழையகொள்கைகளையும்,பழக்கவழக்கங்களையும், மனவுணர்ச்சிகளையும் அடியோடு அழிக்கவும், சிலவற்றைப் புதுப்பிக்கவும் வேண்டுமென்பது.

இரண்டாவது:—தேசீயம் சுயராஜியம், சுதந்திரம் என்னும் பேர்களால்மேல்கண்ட அதாவது மதசம்பந்தமாகவும், கடவுள் சம்பந்தமாகவும், பழக்கவழக்க சம்பந்தமாகவும் இருந்து வரும் பழக்கொள்கைகளை நிலைநிறுத்த பாடுபட்டு வரும்படியான ஸ்தாபனங்களையும், முயற்சிகளையும், சூக்ஷிகளையும் வெளியாக்கி எதிர்த்து அவைகளால் நமது முயற்சிகளுக்கு இடையூறு ஏற்படாமல் இருக்கும்படி செய்வது. என்கிறதானஇந்த இரண்டுலக்ஷியங்களையேபெரிதும் முக்கியமாகக் கொண்டதாக இருப்பதுவிளங்கிஇருக்கும்.

ஏனெனில் இந்தியதேசத்து மக்கள் இன்று உலகத்தின் முன்மானத்தோடும், சுதந்திரத்தோடும், அறிவோடும், க்ஷேமத்தோடும் வாழுவதற்கில்லாமல் பெரும்பான்மையானவர்கள் இழிமக்களாய், மூடர்களாய், தரித்திரர்களாய், அடிமைகளாய் விளங்குவதற்கு மேல்கண்ட இரண்டு தத்துவங்களுமே காரணமாய் இருந்துவந்திருக்கின்றது - இருந்தும் வருகின்றது என்றகாரணத்தினாலே யாகும்.

இந்தப்பெரியதும் தலைகீழ புரக்ஷியானதுமான மேல்கண்ட இரண்டு தத்துவபரிகாரங்களுக்கும்எதிர்ப்புகள் பலமானதும்தொல்லைகளை விளைவிக்கும்படியானதுமான எதிரிகளும், எதிர்ப்புகளும் இருந்துதீரும் என்பதை நாம் எடுத்துச்சொல்ல வேண்டியதில்லை. இவ்வித எதிர்ப்புகள் இவ்வித காரியங்களுக்கு உலகம் ஏற்பட்டநாள் முதல் அதுவும் சீர்திருத்த உணர்ச்சி ஏற்பட்டகாலம்முதல் இருந்து வந்ததேயாகும்.

ஏனெனில், எவ்விதமாறுதல் ஏற்படுவதானாலும் பழைமையினால்பயன் அடைந்து வந்தவர்களும், பழைமை நிலைமையையே தமது வாழ்க்கைக்கு நிர்ணயித்துக் கொண்டிருக்கிறவர்களும்,சுயஅறிவற்றுபிடிவாதக்காரர்களாய் இருக்கின்றவர்களும், சார்புக்காரர்களும் சாதாரணத்திலேயே மாறுதலுக்கு விரோதிகளாய்இருக்கவேண்டியவர்களாவார்கள்.

உதாரணமாக,

இன்றைக்கு பல ஆயிரக்கணக்கான வருடங்களுக்கும் பல நூற்றுக்கணக்கான வருடங்களுக்கும் முன்னால் மேல்கண்ட துறைகளில்மாறுதல் செய்யமுன் வந்த சித்தார்த்தர் (புத்தர்) இயேசு(இயேசுகிறிஸ்து) முகமது (முகமது நபி) சாக்ரட்டிஸ்-மார்டின் லூதர் என்னப்பட்ட பெரியார்கள் அடைந்ததாக சொல்லப்படும் எதிர்ப்புகளும் கஷ்டங்களுமே போதுமான அத்தாக்ஷியாகும்.

ஆகவே தான் இத்துறைகளில் இறங்கிய ஒவ்வொருவரும் தங்களுக்கு ஏற்பட்ட, ஏற்படக்கூடிய எதிர்ப்புகளையும், கஷ்டங்களையும், தொல்லைகளையும் சிறிதுகூட லக்ஷியம் செய்யாமல் இறங்கவேண்டியவர்களானதுடன் அவைகளுக்காக ஒரு சிறிதும் கலங்காமலும தங்களது கொள்கைகளை சிறிதும் தளர்த்துவதற்கு இணங்காமலும் இருக்க வேண்டியவர்களானார்கள்.

ஆகையினாலேதான், வரவேற்புக்கமிட்டி தலைவர் திரு. W. P. A. சௌந்திரபாண்டியன் அவர்கள் தமது வரவேற்பு உபந்யாசத்தில்

"காங்கிரசும் சுயமரியாதை இயக்கக் கொள்கையும் ஒன்று என்று சொல்லுகின்றவர்கள் இரண்டையும் சரியாய் உணராதவர்கள் என்றே சொல்லுவேன்' என்றும் "காரச்சி காங்கிரஸ் பிரஜாஉரிமைத்திட்டத்தில்மதநடுநிலைமையும்......... மதஸ்தாபன பாதுகாப்பும் பிரமாதப்படுத்தப்பட்டிருக்கின்றன, இந்த ஒரு பகுதியே காங்கிரசானது சுயமரியாதை இயக்கத்தை அரைகூவி போருக்கழைக்கின்றதாய் இருக்கின்றதே' என்றும் "திருகாந்தியாரின்பிரசாரமும்,உபதேசமும்அவர்அனுஷ்டிக்கும் முறையும் மக்களின் அறிவைக்கெடுத்து மதப்பைத்தியத்தை அதிகரித்து வருகிறது" என்றும்,

"கராச்சிகாங்கிரஸ் தேர்ந்தெடுத்த காரியக்கமிட்டியில் இருந்து விலக்கப்பட்டிருந்த திருவாளர்கள் மாளவியாவையும், ராஜகோபாலாச்சாரியையும் காரியக்கமிட்டி தங்களுடன் சேர்த்துக்கொண்டதின் இரகசியம் என்ன?

"இவர்கள் இருவரும் இந்துக்கலைகளையும் இந்து மதஸ்தாபனங்களையும் விர்த்திசெய்யும் டிரஸ்டிகளல்லவா? ஆகையால் காங்கிரசால்வரும் சுயராஜியம் இந்து ராஜியம்—ராமராஜியமாகத்தான் இருக்கும் என்று உணர்ந்த முஸ்லீம்கள் தனிக்கிளர்ச்சி செய்வது போல்-காங்கிரசின் சமுதாய லக்ஷியம வருணாச்சிரமதர்மத்திற்கு பாதுகாப்பு அளிப்பதாக இருப்பதால் அதன் முயற்சிகளை எதிர்த்துப் போராடவேண்டும்.

"காந்தியின்வாக்கால் வைதீகப் பிரசாரம் செய்துகொண்டு ஜவகர்லாலின் பொதுவுடைமைப் பிரசங்கத்தில் நம்மை மயக்கப்பார்க்கும் காங்கிரஸ் வலையில் சிக்க வேண்டாம் என்று எனது வாலிப நண்பர்களை எச்சரிக்கை செய்கின்றேன்.

"காங்கிரஸ் நமது இயக்கத்தை கொல்லும் வழியில் பிரயோகப்படுத்தப்படுகிறது.

"மேலும் பார்ப்பனர்களால் ஆரம்பிக்கப்பட்டதாகச் சொல்லப்படும் மதக்கொடூரங்களையும் கட்டுப்பாடுகளையும் உடைத்தெறியுங்கள். அவைகளை வேரறுப்பது நமது கடமை"

என்பதாக சிறிதும் தளர்ச்சியும் சந்தேகமும் இல்லாத வலிமையான வார்த்தைகளால் வீரகர்ச்சனை புரிந்திருக்கின்றார்.

மகாநாட்டுக்குத்தலைமைவகித்த திரு R. K. ஷண்முகம் B. A., B L., M. L. A, அவர்களோ அதைவிட வீரமாய் பேசி இருக்கின்றார். அதாவது:

"நமது இயக்கத்தில் தேசியமில்லை என்று சொல்லுவது நமது எதிரிகளின்-போலி தேசியவாதிகளின் சூக்ஷியேயாகும்"

"நமதியக்கத்தில் உள்ள எல்லோரும் உண்மை தேசியவாதிகள்."

"தேசிய இயக்கமென்று சொல்லிக்கொள்ளுகிறவர்கள் வெள்ளைக்காரனை மாத்திரம் வைது விட்டு அதிகாரம் பதவிகளைப் பற்றி மாத்திரம் பேசிவிட்டு தங்கள் சகோதரர்களை யெல்லாம் தாழ்த்தி இழிவுபடுத்தி அடக்கி வைத்திருக்கும் கொடுமைக்கு பரிகாரம செய்யாமல் இருக்கின்றார்கள்."

"ஒரு ஜாதியாரோ, ஒரு வகுப்பாரோ மற்றொரு, ஜாதியாரை விட, வகுப்பாரைவிட உயர்ந்தவர்கள் என்பதான தத்துவம் ஒரு நாட்டில் இருக்குமானால் அந்நாடு எவ்வளவு கொடுமையான தான ஒரு அன்னிய அரசாங்க கொடுமையைவிட மிகப்பெரிய அக்கிரமும் கொடுமையுமான தென்றே சொல்லுவேன்"

"காங்கிரசானது எல்லோருக்கும்மத சுதந்திரம் அளிக்கப்படும் என்றும் மதநடு நிலைமை வகிக்கப்படும் என்றும் மதக்கொள்கைகள் காப்பாற்றப்படும் என்றும் தீர்மானம் செய்துவிட்டது. இதைநாம் ஒப்புக்கொண்டால் நாம் சுயமரியாதையையோ அடிமைத்தனத்திலிருநது விடுதலையையோ அடையமுடியாது"

'மதநடுநிலைமையைக் கொண்ட இயக்கம் எதுவானாலும் அதுதேசீய இயக்கமாகாது.'

"மதபாதுகாப்பை தகர்த்தெறியவேண்டும்."

"காங்கிரஸ் தீர்மானங்கள் சுயமரியாதை இயக்கத்திற்கு கோடரிக்காம்பு."

"அத்தீர்மானங்கள் கொண்ட ஸ்தாபனங்களோடு எதிர்த்துப் போராடவேண்டும்"

என கர்ஜித்திருக்கிறார்.

மற்றும் வாலிப மகாநாட்டு வரவேற்புக் கமிட்டித்தலைவர் திரு. எஸ். ஜயராம் பி. ஏ. அவர்கள் தமது உபன்யாசத்தில் "சமதர்மம் ஓங்கவே நாம் இங்குகூடி இருக்கின்றோம். சமூக விடுதலையே இராஜிய விடுதலையைவிட அவசியமானது."

"அன்னிய அரசாங்கம் இருக்கும் பொழுதே தீண்டாதவர்களுக்கும், தாழ்த்தப்பட்டவர்களும் ஏதாவது கதிமோட்சம் ஏற்பட்டால் தான் உண்டு. இல்லாவிடடால் அவர்களுக்கு ஒரு காலமும் விடுதலை யேற்படாது என்பது நிச்சயம்."

"திரு. காந்தியவர்கள் மூலம் வருமென்று எதிர்பார்க்கும் இராமராஜியத்தில் இவர்களுக்கு விடுதலை ஏற்படும் என்பதில் எனக்கு நம்பிக்கையில்லை. அக்காலத்தில் இதைவிட ஜாதிச் சண்டைகள் அதிகரிக்கும்: ஜாதி இந்துக்கள் அதிகமாக இருக்கும் ஒரு அரசாங்கத்தில் தீண்டாதார் கஷ்டத்தை ஒழித்து விடுதலையை எவ்விதம் அமுலுக்குக் கொண்டுவர முடியும்? சமூக விடுதலை இல்லாத தேசீய விடுதலை தேசீய விடுதலையாகாதென்று சர். கே. வி. ரெட்டி நாயுடு சொல்லி இருக்கிறார். ஆகையால் சம உரிமை விரும்பும் நாம் அரசியல் இயக்கங்களுடன் சேர்வதைவிட்டு சமதர்ம இயக்கத்தை தனியாக நிறுவி வேலை செய்யவேண்டும்."

"பகுத்தறிவைக்கொண்ட நமது இயக்கத்தில் போலிக் கடவுள்களும, மதங்களும் சின்னா பின்னப்படுவது ஆச்சரியமல்ல. நாஸ்திகப்பட்டத்திற்குப்பயப்படக் கூடாது."

"விதவைகள் கண்ணீர் விடுவதையும், பெண்களை மிருகங்களை விடக் கேவலமாய் நடத்துவதையும்இனிப் பொறுக்கமுடியாது."

"கடவுளோ, சாஸ்திரமோ, வேதமோ எதுவானாலும் அவற்றின் எதிர்ப்புக் கஞ்சாமல் போராடவேண்டியது இளைஞர் கடமை."

என்பதாக வீரமுழக்கம் செய்திருக்கின்றார்.

அது போலவே வாலிப மகாநாட்டுத் தலைவரான, உயர்திரு. டி. வி. சோமசுந்திரம் பி.ஏ., பி எல்., அவர்களும் தமது தலைமை உரையில்.

'சுயராஜியம் வந்தவுடன் அடிமைப்பட்டுக் கிடக்கும் ஆதிதிராவிட மக்களுக்கு அவர்கள் உரிமைகள் வழங்கப்படுமென்று காந்தியார் சொல்வதை உண்மையென்று எப்படி நம்பமுடியும்?

"நம் நாட்டுத்தலைவர்கள் திரு. காந்தி உள்பட ஒருவரும் வருணாச்சிரமப் பிடியிலிருந்து வழுவவில்லை.

"சமத்துமுவம், சகோதரத்துவமும் பரவவேண்டுமானால் மதமெல்லாம் மறையவேண்டும்.

"சமதர்மக் கொள்கைகளை நாடெங்கும் பரப்பவேண்டும்.

"சொத்து, குடும்பம், நிதி, சட்டம், ஆகியவற்றில்உள்ள பழைய எண்ணங்கள் தாக்கப்படவேண்டும்.

"சுருங்கக் கூறுமிடத்துக் காங்கிரஸ் முதலாளிகள் ஜமீன்தாரர்கள் பக்கமே சாய்ந்திருககிறது."

என்று முழங்கி இருக்கிறார்,

சுயமரியாதைப் பெண்கள் மகாநாட்டு வரவேற்புத் தலைவி திருமதி பத்மாவதி திருவண்ணாமலை அம்மாள் அவர்கள் வரவேற்பு உபன்யாசத்தில்,

"எப்படியோ நமக்கு விழிப்பு ஏற்பட்டு விட்டது. இனிமேல் நம்மை ஏமாற்ற முடியாது"

"கடவுள்கள் காலம்வேறு,இப்போதைய நிலைமைவேறு."

"ஆண்கள் எவ்வித சுதந்திரத்துடன் வாழ்கின்றார்களோ அவ்வித சுதந்திரத்துடன் நாமும் வாழவேண்டும்."

"கல்யாண விஷயங்களில் நமக்கு சுதந்திரம், சொத்து சுதந்திரம் வேண்டும்."

"நாம் கூசாமல் கிளர்ச்சி செய்யவேண்டும் "உதவிக்கு சுயமரியாதை இயக்கம் இருக்கிறது"

"சுயமரியாதை இயக்கத்தைப் பலப்படுத்துவதே நமது விடுதலையின் அஸ்திவாரமாகும்"

என்று முழங்கி இருக்கிறார்கள்.

பெண்கள் மகாநாட்டுத் தலைவி திருமதி இந்திராணி பாலசுப்பிரமணியம் அம்மாள் அவர்கள் செய்த தலைமை உபன்யாசமோ மிக அருமையானது. சற்று நீண்டதாயிருந்தாலும், ஒவ்வொருவரும் படித்துப் பார்க்க வேண்டியதொன்றாகும். அநேக விஷயங்களைப் புள்ளி விவரங்களுடன் எடுத்தாண்டிருக்கின்றார்கள்: அவையாவன.

"இந்நாடு அடிமைப் பட்டதற்கு முக்கிய காரணங்களில் ஒன்று பெண்களை அடிமைகளாக்கினது. இரண்டு பிறப்பால் ஜாதி வகுத்தது. மூன்று மனிதனுக்கு மனிதன் தீண்டாதவனாக்கினது. நான்கு மூடபழக்க வழக்கங்கள் சடங்குகள்."

'விதவைகளை மக்கள் செய்யும் கொடுமைகளாலேயேபெண்மணிகளின் உயிர் நாடிகள் நசுக்கப்பட்டுவிட்டது. சாரதா சட்டத்திற்குப் பயந்து பால் குடிக்கும் குழந்தைகளுக்கு மணம் முடித்துவிட்ட பாதகர்கள் நம் நாட்டில் பி.ஏ., யம்.ஏ., படித்த மனிதர்களாய் விளங்குகிறார்கள்.'

"கற்பு நாயகிக்கு மாத்திரந்தானா? நாயகனுக்கு இல்லையா?"

"மறுமணம் வேண்டுமானால் இருபாலருக்கும் வேண்டும்."

"ஒரு பிறவிக்கு ஒரு நீதி கொண்ட கற்பு அடிமைப் படுத்துவதில் ஆசை கொண்ட மூர்க்கத்தனமேயொழிய அதில் யோக்கியமும், நாணயமும் இல்லை."

"வானத்தில் மேகம் தவழ்வது போலவும், கடலில் அலை எழும்புவதுபோலவும், பறவை தனது அழகிய சிறகை விரித்துப் பறப்பதுபோலவும் பெண் மக்களுக்கு தங்களுடைய உள்ளத்திலெழும் விருப்பப்படி நடக்கும் உரிமை இருக்கவேண்டும்."

"வலுத்தவன் இளைத்தவனை அடக்கி ஆள்வதற்கு அத்தாட்சி ஜாதிவித்தியாசமேயாகும்.

"இதனால் நமது நாடு மிருகத் தன்மையில் இருந்து மனிதத் தன்மைக்கு இன்னமும் வரவில்லை என்பது புலனாகிறது."

"ஜாதிவேற்றுமை ஒழிவதில் தான் நமது நாட்டுவிடுதலை யிருக்கிறது"

"சிலர் சுயநலத்திற்காகவே ஜாதிவேற்றுமை காப்பாற்றப்படுகிறது"

"நம்சகோதரர்களுக்கு நாம் சகோதரத்தனம் காட்டவில்லையானால் பிறநாட்டார் இடம் நாம் எந்த முகத்துடன் சகோதரத்துவம் கேட்பது?'

"பிறநாட்டார் எண்ணை இல்லாமல் மோட்டார் விடலாமா? மார்ஸ்நக்ஷத்திர மண்டலத்தில் மக்கள் இருக்கின்றார்களா? என்பதுபோன்ற ஆராய்ச்சி செய்கிறார்கள். நம்நாட்டார் கோவிலுக்குள் இன்னாரை விடலாமா? வேண்டாமா? குளத்தில் தண்ணீர் எடுக்க இன்னாரை விடலாமா? வேண்டாமா? பொதுரஸ்தாவில் இன்னார் நடக்கலாமா? வேண்டாமா? என்கின்ற ஆராய்ச்சிக்கு நம்நாட்டுப் பணம், நேரம் ஆராய்ச்சி ஆகியவைசெலவழிக்கப்படுகின்றன"

"இது ஒரு பைத்தியக்காரர்கள் வாழும் நாடாயிருக்கிறது"

"கோவிலுக்காக பல்ஜாதியாரால் செலுத்தப்படும் பணம் பல ஜாதியாருக்கும் பயன்பட வேண்டாமா?"

"பிரார்த்தனை, காணிக்கை முதலிய விஷயங்களில் ஆண்களைவிடப் பெண்களே அதிக நம்பிக்கை வைத்திருக்கின்றார்கள்"

கடைசியாக 'சென்னைமாகாணத்தில் ஆண்களைவிட 6-லக்ஷம் பேர்கள் எண்ணிக்கையில் அதிகமாக உள்ள 23641936 பெண்களுக்கு சென்னை சட்டசபையில் ஒரேஒரு பிரதிநிதித்துவம் கொடுத்திருப்பதானது எவ்வளவு வருந்தத்தக்க விஷயமாகும்' என்றுபேசி இரத்தக்கண்

முத்தையா
லக அறக்கட்டளை

ணீர் வடித்துப்பேசியிருக்கின்றார்கள். ஆகவேஇந்தஅபிப்பிராயங்கள்எல்லாம் உலகஞானமும் கல்வியறிவும் உள்ள பெரியோர்களால் மிகவும் பிரத்தியக்ஷ அனுபோகத்தின் மீதும் ஆழ்ந்து யோசித்த நடுநிலைமை முடிவின் மீதுமே பேசப்பட்டவைகளேயொழிய வெறும் மூட நம்பிக்கைகளின் மீதும் இவ்வித அபிப்பிராயங்களுக்கு செல்வாக்கிருக்கின்றதென்கின்றகண்மூடித்தனமான தைரியத்தின் மீதும் கிளிப்பிள்ளை தன்மைபோலும், வயிற்றுப்பாட்டை உத்தேசித்தும் பேசப்பட்டவைகள் அல்ல என்பது உலக அனுபவமும் நடுநிலைமைஞானமும் சிறிதாவதுமுள்ள எவருக்கும் விளங்கும்.

இன்றையதினம்சுயமரியாதை இயக்கத்தின் மீது சிலரால் சொல்லப்படும் குற்றமெல்லாம் 'இவ்விடக்கத்தில் 'தேசியம் இல்லை' என்பதும் 'காங்கிரசைக்கண்டிக்கின்றது'என்பதும் 'திரு காந்தி அவர்கள் அபிப்பிராயத்தை மறுக்கின்றதே'என்பதும் ஆகியவைகளே முக்கியமான குற்றங்களாக சொல்லப்பட்டு வருகின்றன. 35-கோடி மக்கள் கொண்ட ஒரு பெரியதும் சகலவித வளமும் கொண்டதுமான ஒரு புராதன தேசம் ஆயிரக்கணக்கான வருடங்களாக அடிமைப்பட்டு கல்வியறிவில்லாமல் சிறிதும் முற்போக்குமில்லாமல் மிருகடபிராயத்தில் இருந்து கொண்டு எச்சிலைக்கு மானத்தையும் மனிதத்தன்மையையும் விற்றுக்கொண்டு மனிதனுக்கு மனிதன் இழிவு என்று கருதும்படியாகவும் நாட்டு செல்வங்கள் எல்லாம் நாட்டு மக்கள் யாவரும் சமமாயும் அனுபவிக்காமலும் பாட்டுக்குத்தகுந்தபடியும் அனுபவிக்க முடியாமல் கடவுளென்றும் மதம்என்றும்பழக்கவழக்கமென்றும்சமூகக்கட்டுப்பாடு என்றும் சொல்லிக்கொண்டு வீணாக்கப்பட்டுவருகின்றஒருநிலைமையைப்பற்றியோசியாமலும்அதற்குக்காரணங்கண்டுபிடிக்க முயலாமலும், உண்மையான விடுதலைக்கு முயற்சியாமலும் மற்றும் மக்கள் எண்ணத்தையும் முயற்சியையும், உபயோகமற்றக்காரியங்களில் திருப்பிவிட்டுக்கொண்டிருந்தால் அறிவுள்ள யார்தான் சகித்துக்கொண்டிருக்க முடியும்? இந்த நாட்டுக்கு விடுதலையையோஞானத்தையையோ உண்டாக்க முயற்சிகள் செய்யப்பட்ட காலங்களில் எல்லாம் மதத்தின் போராலும் வேறு ஏதாவது ஒரு போலியான சூக்ஷிவிஷயத்தின் போராலுமே டார்ப்பனர்கள் அவ்வப்போது பார்ப்பனரல்லாத கூலிகளைப் பிடித்து முட்டுக்கட்டைபோட்டே வந்திருக்கின்றார்கள்.

அதுபோலவேதான் இந்தசமயமும் உலகமே விழித்தெழுந்து கொண்டிருக்கின்ற இந்த நூற்றாண்டில் இந்தியாவுக்கு மாத்திரம் விழிப்பு ஏற்படுவதற்கு வகையில்லாமல் பார்ப்பனரும் பார்ப்பனீயமும் தேசியத்தின் பேரால் முட்டுக்கட்டையாகத்தோன்றி பின்னால் இழுத்துப்பிடித்துக்கொண்டிருக்க நேர்ந்தது மிகவும் வருந்தத்தக்க சம்பவமேயாகும். உலகிலுள்ள எல்லா நாட்டாருக்கும் எல்லா சமூகத்தாருக்கும் புதியபுதிய சீர்திருத்தக்காரர்கள்தோன்றி பழைமைகளை உடைத்தெறிந்து காட்டுமிராண்டித்தனத்திலிருந்து ஆச்சரியப்படத்தகுந்த மனிதத்தன்மைக்கு கொண்டுவந்து எவ்வளவோ முற்போக்குகளை உண்டாக்கி மக்களை மானமுடையவர்களாகவும். சுதந்திரமாகவும், அறிவாளிகளாகவும் வாழும்படி செய்துவிட்டார்கள்.

சைனா, ஜப்பான், துருக்கி, பிரஞ்சு, இங்கிலாந்து, ருஷியா, ஜர்மனிமுதலிய ஒவ்வொரு தேசத்திலும் தோன்றிய சீர்திருத்தக்காரர்கள் எல்லாம் முதலில் பழைமையை அழிப்திலேயே கண்ணுங்கருத்துமாயிருந்து வந்திருக்க நமது தேசத்தில் மாத்திரம் சீர்திருத்தக்காரராய் விடுதலைக்கு உழைப்பவராகத்தோன்றின திரு. திலகரும், திரு. காந்தியும் முதலிய யாவருமே பழைமையைக்காப்பாற்றுவதிலும் புதுமையை உள்ளே நுழைய விடாமல் தடுப்பதிலுமே கண்ணுங்கருத்துமாய் இருந்து விட்டார்கள். இன்னும் இருந்தும் வருகின்றார்கள்.

'லோகமான்யர்'என்னும் திலகருக்கு வர்ணாச்சிரம தர்மமும்; கீதையின் தத்துவ உபதேசமும் எவ்வளவு தேசியமாய் இருந்ததோ அதைவிட ஒருபடி அதிகமாகத்தான் திரு காந்தியும் அவற்றை தேசியமாய் உபதேசிக்கின்றார்- நிலை நிறுத்தவும்பாடுபடுகின்றார் என்பதல்லாமல் மற்றபடி திலகரைவிட காந்தியார் எந்த விதத்தில் மேலானவர் அல்லது சமத்துவத்திற்கு சமதர்மத்திற்கு அனுகூலமான காரியம் செய்தவர் அல்லது திட்டம் கையில் வைத்திருப்பவர் என்பதை யோசித்தால் உண்மைவிளங்கும். திலகர் காலத்திலாவது அவருக்கு புராண ராஜ்ய தர்மத்தைப்பற்றி பேச பயமிருந்தது. திரு காந்திகாலத்திலோ புராண தர்மம் மிகவும் வலிவும் செல்வாக்கும் பெற்றுவிட்டன. போதாக்குறைக்குதிரு மாளவியாவுக்கு விடுதலை ஸ்தாபனத்தில் கௌரவமான உச்சஸ்தானம் கிடைக்கப்பட்டுவிட்டது.

ஆகவே, விடுதலைக்கு தேசிய திட்டம் வகுக்க வேண்டியது திருவாளர்கள் மாளவியா, இராஜகோபாலாச்சாரி, சத்தியமூர்த்தி போன்றவர்களாகவும், அதைவெளிப்படுத்த வேண்டியது காந்தி ரசாகவும், நிறைவேற்றிவைக்க வேண்டியது திரு. காந்தியாகவும் ஏற்பட்டு விட்டது. வாலிபர்களை மயக்க திரு. ஜவஹர்லாலை விட்டு ஏதாவது சொல்லச்செய்து விட வேண்டியது என்கின்ற இந்த முறையில் வருணாசிரமமும், இந்து மதமும், புராண தர்மமும் அரசியலின்பேரால், விடுதலையின் பேரால் இந்த நாட்டில் இந்தக்காலத்தில் தாண்டவமாடுவதானது மக்களின் எவ்வளவு பாமரத்தன்மையைக் காட்டுகின்றது என்பதற்காகத்தான் இவைகளை எடுத்துக் காட்டுகின்றோம்.

இந்தக்காரணங்களால் தான் தேசிய இயக்கம் என்கின்ற போர்வையைப்போற்றிக்கொண்டிருக்கும் வருணாசிரம-பார்ப்பனீய-முதலாளித் தத்துவக்கொள்கைகளைக் கொண்டகாந்தீயத்தை வெட்டிப்புதைக்கும் வேலையை இப்போது சுயமரியாதை இயக்கம் கைகொண்டு வேலை செய்ய வேண்டியதாகி விட்டது. இதைச்செய்யாமல் சுயமரியாதை இயக்கம் மற்றத்துறைகளில் செய்யும் வேலைகள் எல்லாம் நதிக்கரையில் ஆற்றோரத்தில் கட்டுகின்றகட்டிடங்களைப் போலத்தான் முடியும். ஏனெனில் சமய சமூகத்துறையில் சுயமரியாதை இயக்கம் எவ்வளவு வேலை செய்து வைத்திருந்தாலும் பார்ப்பனீய காந்தியரசியல் ஆதிக்கம் வரும்போது ஒரே அடியில் அவைகவிழ்க்கப்பட்டதாகி விடும். பெருவெள்ளம்வந்தால்நதிக்கரையில் இருக்கும் வீடுகளுக்கு எப்படி ஆபத்தோ அது போலவே ஆகிவிடும். இந்தக்காரணத்தால் தான் அரசியல்என்பதுடனும், காந்தீயம்என்பதுடனும்போராட வேண்டியிருக்கின்றதேயொழிய வேறில்லை.

இதைப்பற்றித் தப்பர்த்தம் கொள்கின்றவர்களுக்கு மாத்திரம திரு காந்தியார்உரைத்த ஒரேயொரு விஷயத்தை மாத்திரம் எடுத்துக் காட்டிவிட்டு இதை முடிக்கின்றோம்.

அதாவது, 'மனித சமூகத்தில் வீதி கூட்டுவது ஒருவனது தர்மம் என்றும் கணக்கு எழுதுவது மற்றொருவனது தர்மம் என்றும் ஏற்பாடு செய்யப் பட்டிருக்கின்றது. இதில் குப்பை அள்ளுவது இழிவு-கணக்கு எழுதுவது மேன்மை என்று கருதப்பட்டாலும் குப்பை அள்ளுகின்றவன் தனது தர்மத்தை விட்டு விட்டு மற்றவன் தர்மத்தில் பிரவேசிக்க நினைத்தாலும் அவன் தர்மமிழந்தவனாகிறான். இவனால் சமூகத்திற்கும் கேடுவிளையும்' [காந்தி] என்பதே திரு. காந்தியவர்களின் சமூக சீர்திருத்தமும் அரசியலில் அவர் ஏற்றுக்கொண்ட ஜவாப்தாரித் தனமுமாகும். இதுவே சுயராஜ்யத்தில் ஜீவாதாரஉரிமைத் திட்டமுமாகும். பற்ற விஷயங்களைப்பற்றி மறுமுறை எழுதுவோம்

தமிழ் தினசரி.

"சண்டமாருதம்"என்னும்தமிழ்தினசரிப் பத்திரிகை திருச்சியில் இருந்து சுயமரியாதை இயக்கத்திற்கு ஆக சுயமரியாதை சங்கத்தலைவர்களுடைய முயற்சியின் மீது ஆரம்பிக்கப் பட்டு இம்மாதம் 7ந்தேதி முதல் வெளியாகி இருக்கின்றது. அதை ஒரு லிமிடெட் கம்பெனிமூலம் வெளியாக்கக் கருதி இருந்த விஷயம் பத்திரிகைகள் மூலம் ஏற்கனவே வாசகர்களுக்குத் தெரிந்ததாகும். லிமிடெட் கம்பெனி ரிஜிஸ்டர் செய்து பங்கு சேர்ந்த பிறகே பத்திரிகை வெளிவருவதென்றால் சற்று நாளாகும் ஆதலால் மகாநாடு நடைபெறும் நாளிலேயே எப்படியாவது பத்திரிகை வெளியானால் அதற்கு அதிக ஆதரவு கிடைக்கும் என்கின்ற ஆசையின் மீது உயர் திரு. சௌந்திரபாண்டியன் அவர்கள் தற்கால சாந்தியாக சொந்தத்தில் ஏற்பாடு செய்து திரு. முருகப்பா அவர்கள் ஆசிரியததன்மையில் வெளிப்படுத்தப்பட்டதானது மிகுதியும் பாராட்டத்தக்கதும் நன்றி செலுத்தத் தக்கதுமாகும்.

கூடிய சீக்கிரத்தில் கம்பெனி ரிஜிஸ்டர் செய்யப்பட்டு உயர் திரு. பாண்டியன் முதலியவர்கள் பங்கு சேர்க்க வருவார்கள். அந்தச்சமயம பொதுமக்களும் சிறப்பாக இயக்கத்தில் ஆவமுள்ள கனவான்களும ஆதரவளித்து பங்குதாராகளாகச் சேர்ந்து ,"சண்டமாருத"த்தை

தையா
அறக்கட்டளை

என்றும் நிலையானதும், மேலானதுமான ஒரு முக்கிய பத்திரிகையாய் நின்று நமது இயக்கத்திற்கு உழைக்க தங்கள் தங்களாலான உதவிகளைச் செய்யவேண்டியது பொதுமக்கள் கடமையாகும். பத்திரிகை நடத்துவது என்பது லேசான காரியம் அல்லவென்பதும் அதிலும் ஒரு இயக்கத்திற்குப் பிரசார பத்திரிகையாய் ஒரு தினசரியை நடத்துவது என்பது சுலபமான காரியமல்லவென்பதும் நண்பர்கள் உணர்ந்ததேயாகும். ஆதலால் கனவான்கள் எவ்வித யோசனையுமின்றி ஆதரவளிக்க வேண்டுகின்றோம். ஆங்காங்குள்ள நமது இயக்க நண்பர்கள் "சண்டமாருத"த்திற்கு ஒவ்வொரு வருஷ சந்தாதாரர்களாக அநேக சந்தாதாரர்களை சேர்த்துக் கொடுத்து தாங்களும் சந்தாதாரராய் சேரவேண்டுமாய் வேண்டிக்கொள்கின்றோம். ஒருவாறு முயற்சியில் தினசரிப் பத்திரிகை வெளிவருவதற்கும், போதிய அளவு முன்பணம் உதவிசெய்ததுமல்லாமல் மற்ற முயற்சிகளுடன் மகாநாட்டு வேலைத்தொந்திரவையும் எடுத்துக் கொண்ட உயர் திருவாளர்கள் சௌந்திரபாண்டியன், முருகப்பா, விஸ்வநாதன், முதலிய கனவான்களின் ஊக்கத்தையும் உதவியையும் போற்றுகின்றோம்.

விருதுநகர் சுயமரியாதை மகாநாடு.

மூன்றாவது மாகாண சுயமரியாதை மகாநாடு விருதுநகரில் 8—8—31-லும், 9—8—31லும் கூடி அநேக தீர்மானங்களை நிறைவேற்றி யிருக்கின்றது. அவ்வமயம் இரண்டாவது சுயமரியாதை பெண்கள் மகாநாடும், வாலிபர்கள் மகாநாடும் கூடி பல்வேறு தீர்மானங்களை நிறைவேற்றி யிருப்பதானது குறிப்பிடத்தக்கதாகும்.

ஷை மகாநாடானது சீருஞ் சிறப்புடனும், வெற்றிகரமாகவும் நடந்தேறுவதற்கு கீழ்கண்ட கனவான்களின் சிரத்தையும், ஊக்கமும், முயற்சியும் இயக்கத் தலைவர்களுக் கேற்பட்டிருக்கும் அன்பும், அபிமானமுமே காரணமாகுமெனக் கூறுவது மிகையாகாதெனக்கருதுகின்றோம். அவையாவன;—

திருவாளர்கள் ஊ. பு. அ. சௌந்திரபாண்டியன், வி. வி. இராமசாமி, எம். எஸ். பி. செந்தில்குமார், சிதம்பரநாடார் வைஸ்சேர்மன் விருதுநகர், மன்னன் பழனியப்பன், மாரியப்பா, மாரிமுத்து, வெயில் முத்துசாமி, திருவண்ணாமலை, உத்தண்டன், வி. வி. ஷண்முகம், வி. வி. தனுஷ்கோடி பி. ஏ., முதலியவர்களும் மற்றும் பல வெளியூர்கனவான்களுமாவார்கள்.

"இந்துமதம்"

வாணியர் சூத்திரரில் சேர்ந்தவரானாலும், வாணியர் தாழ்ந்த ஜாதியாராம்!

"வாணிய வகுப்பார்" என்று தங்களைச் சொல்லிக்கொள்ளும் ஒரு வகுப்பார் இந்தியாவில் எங்கும் ஒவ்வொரு பட்டணங்களிலும் தாராளமாய் இருந்துவருகிறார்கள். அவர்கள் வியாபாரத்துறையில் மிகுதியும் ஈடுபட்டு பல இடங்களில் மிக செல்வவந்தர்களாகவும், பிரபலஸ்தர்களாகவும், நாகரீகமுடையவர்களாகவும் இருந்து வருகின்றார்கள். பலர் ஆங்கிலக்கல்வியில் தேற்சியடைந்து உத்தியோகத்திலும், வக்கீல் தொழிலும் ஈடுபட்டு மிகப்பிரக்கியாதியாகவும் இருந்துவருகின்றார்கள்.

அப்படிப்பட்ட ஒரு நாகரீகமான சமூகம் இந்தியாவில் பிறந்ததினாலும் இந்து மதத்தைச்சேர்ந்தவர்கள் என்று சொல்லிக்கொள்வதாலும் இந்த 20 வது நூற்றாண்டிலும் தீண்டாதவர்களாகப் பாவிக்கப்படவேண்டிய வர்களாகஇருந்து வருகின்றார்கள். எப்படியெனில் திருவனந்தபுரம் ராஜ்யஎல்லைக்குள் அவர்கள் "அவர்ணஸ்தர்கள்" என்றே, "ஈன ஜாதியர்" என்றே அரசியல் சமுதாய இயல்களில் எல்லாம் பதிவுசெய்யப்பட்டு கோவில் பிரவேசமும், குளப்பிரவேசமும் தடுக்கப்பட்டு இருக்கின்றது. சென்னைமாகாணத்திலும், திருச்செந்தூரில் அவர்களுக்கு ஆலயப்பிரவேச உரிமை இல்லை என்று, தீர்மானிக்கப்பட்டு விட்டது. இப்போது சமீபத்தில் இந்த வாரத்திலேயே தஞ்சாவூர் ஜில்லாவிலுள்ள வேதாரண்யம் கோவில் சம்பந்தமாய் அக்கோவிலுக்குள் வாணியர்கள் பிரவேசிக்கக்கூடாது என்று தீர்ப்பு ஆகி அப்பீலிலும் உறுதி ஆகிவிட்டது. அத்தீர்ப்பில் ஜட்ஜு குறிப்பிட்டு இருக்கும் விஷயம் மிகவும் மோசமானதேயாகும். அதன் சாரமாவது, "வாணியர்கள் தங்களை வைசியர்கள் என்று சொல்லிக்கொள்வது ஆதாரமற்றதாகும்.

"அவர்கள் எண்ணெய் பிழிந்து எண்ணெய் எடுப்பதாகிய இழிவான தொழிலைச் செய்வதால் அவர்கள் தாழ்ந்த ஜாதி, இந்துவாக கருதப்படுகிறார்கள்.

"சூத்திரர்"களுக்கு ஆலயப்பிரவேச உரிமை உண்டு என்றாலும் வாணியர்கள் இந்த கோவிலுக்குள் பிரவேசிக்க முயற்சி செய்தபோதெல்லாம் தடுக்கப்பட்டிருக்கிறார்கள். ஆதலால் அவர்களுக்குக் கோவில்பிரவேச உரிமை கிடையாது" என்பதாக தீர்ப்புச் செய்து அப்பீலை தள்ளி விட்டார். இந்தப்படி ஜட்ஜு தீர்ப்பு சொன்னதற்கு ஆதாரமாக தனது தீர்ப்பில் மனுதர்ம சாஸ்திரத்தை எடுத்துக்காட்டி இருக்கிறார். எனவே இந்தத் தீர்ப்பின்படி இனி "சூத்திரர்"கள் என்று சொல்லப்படும் மக்கள் அதாவது, பார்ப்பனர் தவிர ஏனையோர் விஷயத்திலும், கோர்ட்டு நடவடிக்கைகளுக்கு மனுதர்ம சாஸ்திரம் தான் ஆதாரமாய் இருந்து தீர்மானிக்கப்போகின்றது என்பதில் ஆக்ஷேபனை இல்லை. கோவில் நிர்வாகிகளுக்கும், உள்ளூர் கலகக்காரர்களுக்கும் காசு பணம் கொடுத்து சரிசெய்துகொள்ள முடியாமல் கோர்ட்டுக்கு போகும் இன்னும்சில சமூகங்களுக்கும் இந்தக் கதிதான் நேரக்கூடும். அதாவது கீழ்ஜாதி என்று தீர்ப்புப்பெறவேண்டியதாகிவிடும் என்பது ஒருபுறமிருந்தாலும் இனி வரப்போகும் 'சுயராஜிய'த்தில் இம்மாதிரி நடவடிக்கைகளுக்கு மனுதர்ம சாஸ்திரம்கூட தேவையில்லாமல் போய்விட்டது. மற்றென்னவெனில், இதற்குக் காங்கிரஸ் காரியக்கமிட்டியின் பிரஜா உரிமைத் தீர்மானமே போதுமானதாகும்.

1930 வருஷம்மே மாதத்தில நடந்த

ஈரோடு இரண்டாவது சுயமரியாதை மகாநாட்டின் கணக்கு.

		ரூ. அ. பை.
1. நன்கொடை வரவு.	...	5035— 0—0.
2. டிக்கட் விற்பனை, வெளியூர்களிலும் கொட்டகையிலும் விற்பனை வரவு.	...	3788—11—0.
3. செலவு. பந்தல், மகாநாட்டுக் கொட்டாய் மற்றும் பல இடங்களில் தனித் தனியே போட்ட கொட்டாய், கொட்டாய் அலங்காரம், தண்ணீர் சப்ளை, ரோட்டு, இடம்ரிப்பேர் முதலியவைகளுக்கு செலவு விற்பனை சாமான்களின் கிரையம் நீக்கிசெலவு.	...	2167—1—9
4. சாப்பாட்டுச் செலவு மொத்தம்	...	2811—10—11.
5. ஸ்டேஷனரி சாமான், அச்சுக் கூலி, டைப்பு சார்ஜ், தபால் தந்தி சார்ஜ், வண்டி வாடகை, போக்கு வரத்துச் செலவு, ஆள் போய் வர செலவு, சில்லரை செலவு, தொண்டர்களுக்குஉடுப்பு வகையறா செலவு லைட்வாடகை செலவு வகையறா மொத்தம்.	...	1954—7—9
ஆகமொத்தம் வரவு.	...	8823—11—0.
ஆகமொத்தம் செலவு.	...	6933— 4—5.
மீதி.	...	1890— 6—7.

இத்தொகையிலிருந்து சுசீந்திரம் சத்தியாக்கிரகம், "திராவிடன்" சம்பந்தம் முதலியவைகளுக்கு 1000 ரூபாயிக்கு மேல்பட்டு செலவு செய்யப்பட்டிருக்கும் விபரம் பின்னால் தெரிவிக்கப்படும் சில இடங்களிலிருந்து டிக்கட்டு விற்பனைத்தொகையும், நன்கொடை கையொப்பமிட்ட தொகையும், சில சாமான்கள் விற்ற தொகையும் கணக்கும்வரவேண்டியிருக்கிறது. நன்கொடை வரவு பேர்வாரியாய் அடுத்த இதழில் வெளிவரும். பெயர் விபரம் அடுத்த இதழில் வரும்.

சென்னை மாகாண

சுயமரியாதைத் தொண்டர்

இரண்டாவது மகாநாடு.

திருவாரூரில் ஆகஸ்ட் 30 தேதியில் நடைபெறும்.

மகாநாட்டின் தலைவர். பட்டுக்கோட்டை உயர் திரு

கே. வி. அழகர்சாமி அவர்கள்.

மகாநாட்டை திறந்துவைப்பவர்,

ஸ்ரீமதி நீலாவதி ராமசுப்ரமணியம் அவர்கள்.

வரவேற்புக்கழகத்தலைவர், திரு.

கே. ஏ. எம். மாணிக்கம் அவர்கள்.

காரியதரிசிகள், திருவாளர்கள்.

கே. ராமய்யா, வி. ஜி. ஆர். ராஜு,

ஆர். சதாசிவம்.

ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

(10-ம் பக்கத்தொடர்ச்சி)

ள்ள கோயில்களை பகிஷ்கரிக்க வேண்டும்,

11. பள்ளிக்கூடங்களில் சேரும் மாணவர்களுக்கு மனுபாரங்களில் ஜாதி முதலானவைகளைக்காட்ட வேண்டுமென்ற வழக்கத்தை நிறுத்திவிட வேண்டுமென்று அதிகாரிகளைக்கேட்டுக் கொள்கிறது.

12. வர்ணம் அல்லது ஜாதி ஹாஸ்டல்கள் இருந்து வரும் வழக்கத்தை ஆக்ஷேபிப்பதுடன், அத்தகையவைகள் உள்ள பள்ளிக்கூடங்களுக்கு கிராண்டு முதலானவைகள் கொடுப்பதை மறுக்க வேண்டுமென்று கல்வி அதிகாரிகளைக் கேட்டுக்கொள்கிறது.

13. பொதுவாக தங்கும் அறைகள் உள்ள எல்லா ரயில்வே ஸ்டேஷன்களிலும், ஸ்திரீகளுக்கென்று பிரத்தியேகமான அறைகள் ஒதுக்கிவைக்கப் படுவதுடன் பகலிலும் இரவிலும் ஸ்திரீ வேலைக்காரிகள் அங்கு தயாராக யிருந்து வர வேண்டுமென்று வற்புறுத்துகிறது.

கர்ப்ப ஆட்சி விஷயமாய் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இத்தீர்மானங்களை ஆதரித்து திருமதிகள் நீலாவதி, சிவகாமி, குஞ்சிதம், மரகதவல்லி, நாகம்மாள், ரங்கம்மாள், ஈ. வெ. ராமசாமி முதலியவர்கள பேசினார்கள். அப்பால் ஸ்ரீமதி நீலாவதி அம்மையாரால் வந்தனோபசாரங்கள் கூறப்பட்டு கூட்டம் முடிவடைந்தது

குறிப்பு:— இம்மகா நாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களின் சரியான நகல் நமக்குக் கிடைக்காததினால் ஏதாவது திருத்தங்கள் இத்தீர்மானங்களிலிருக்குமாயின் அவை அடுத்த வாரம் பிரசுரிக்கப்படும். ப—ர்

பஞ்சமா பாதகங்கள்

எவை?

ஏன் நிகழ்கின்றன?

அவற்றை நிறுத்தக் சமய, சமூக, அரசாங்கச் சட்டங்கள் ஆதரவளிக்கின்றனவா?

இதைப்பற்றி நீங்கள் எப்போதாவது யோசித்தீர்களா? இல்லையானால் இன்றே எழுதுங்கள். 52 பக்கங்கொண்ட புஸ்தகம் 0—2—6 அணா ஸ்டாம்புக்கு அனுப்பப்படும். விலாசம்:—

கோவை அ. அய்யாமுத்து
புஞ்சைப்புளியம்பட்டி,
(கோயமுத்தூர் ஜில்லா)

மதிப்புரைகள்.

"புதுவை முரசு"
வருஷ அனுபந்தம்.
(மகாநாட்டு மலர்.)

"புதுவை முரசு" பத்திரிகாலயத்திலிருந்து விஷேச அனுபந்தமாக மகாநாட்டு மலர் ஒன்று வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றது.

இம்மலரில் திருவாளர்கள் ஆர். கே. ஷண்முகம், சௌந்திரபாண்டியன், நாகம்மாள், குஞ்சிதம், குருசாமி, நோயல், லக்ஷ், கைவல்யம், நீலாவதி, ராமசுப்பிரமணியம் அருணகிரி, சுந்தரி, முருகப்பா, அருளாநந்தம், பெருமாள், மரியசூசை, எஸ். இராமச்சந்திரன், எ ஆர். சிவானந்தம், ஈ. வெ. இராமசாமி, ஏ. பீ. ஆதித்தர், பி. சிதம்பரம், சவுரிநாதன் ஆகியவர்கள் உருவப்படங்களும், குஞ்சிதம் பி. ஏ. ருக்கவான பெண்கள் கைதியிலும் கேடா? என்றும், நீலாவதி, பெண் மக்கள் அடிமையும், ஆண் மக்கள் கொடுமையும் என்றும், தி. அ. சு. இராமசாமி ஆச்சாரி ஜப்பானைப்பற்றிய குறிப்பு என்றும், மௌண்ட்ரோட் என்பவர் திராவிடனுக்கும், இந்தியாவுக்கும் சம்பாஷணை என்றும், ஈ. வெ. இராமசாமி கல்யாண விடுதலை என்றும், சயமரியாதைக்காரருக்கு அமெரிக்காக்காரரின் கடிதம் என்கின்ற சில பத்திராதிபர் குறிப்புகளும், இண்டற்காரன் என்பவர் மனிதரா? சாமியாரா? என்றும், லண்டன் அறிவு இயக்கத்துண்டுப் பிரசுர மொழிபெயர்ப்பும், பி. சிதம்பரம் பி.ஏ.பி.எல்., அவர்களால் விவாக சீர்திருத்தமென்றும், சாமி சிதம்பரனாரால் மக்களுக்குமதம் அவசியமா? என்றும், சிவகாமி சிதம்பரனாரால் மாதர் விடுதலை யென்றும், ஏ. பி. ஆதித்தரால் யாரைச்சேர்ந்தோம்? ஏன்? என்றும் எஸ் லக்ஷிமிரதன் எம்.ஏ.,பி.எல்., அவர்களால் சாதியும், இந்திய சமூக ஒற்றுமையும் என்றும், கோவை. ஏ. ஆர். சிவானந்தம் அவர்களால் சங்கீத உலகத்தில் பார்ப்பனீய மென்றும், தமிழ் மகன் என்பவரால் சுயமரியாதை இயக்கம் என்றும், எஸ். பி. அருணகிரியால் இராமசாமியாரும், சுயமரியாதை இயக்கமும் என்றும், மனோகரம் அவர்களால் மாதரும், சுயமரியாதையும் என்றும், மரகதவல்லி அவர்களால் பெண்களுக்கு சொத்துரிமை என்றும், ஆதித்தரால் அடிமைத்தமிழகம் என்றும், தொண்ட மண்டலம் என்பவரால் ஒரு சிறு கதையும், புதுவை அ. ஹூத்தர் அவர்களால் மாதரசியும், மரகதவல்லியும் என்றும், அய்யாமுத்து அவர்களால் சமத்துவம் என்றும். ஆ. தே. சௌரிநாதன் அவர்களால் நமது குடி மக்களின் ஏழ்மையின் காரணமென்றும், இண்டற்காரன் என்னும் பேரால் பல துக்கடாக்களும், சம்பாஷணைகளும், கற்பனை கவிகளும் ஆசிரியர் எஸ். குருசாமியாரால் பல பாட்டுகளும், பல வேடிக்கை சித்திரங்களும், பல கட்டுரைகளும் கொண்ட ஒரு அருமையானதும், 130 பக்கம் கொண்ட பெரிய சைஸ் புஸ்தகமுமாகும். ஒவ்வொரு கட்டுரையும் அறிவு உணவு போன்றது. பல அறிய விஷயமும், வேடிக்கையும் நிறைந்தது.

விலை அணா 0-6-0 தான்.

கண்டிப்பாய் ஒவ்வொருவரும் தருவித்துப் பார்க்க வேண்டியதாகும்.

விலாசம்:-
"புதுவை முரசு"
4 லல்லிதோலாந்தால் வீதி,
புதுவை, (பாண்டிச்சேரி)

நோட்டீஸ்.

உடுமலைப்பேட்டை
டி. மு. கோர்ட்டு.
கோவாப்ரேட்டிவ் சொசைட்டி அசிஸ்டெண்டு ரிஜிஸ்டார் ஆபீஸ்.

Claim No 901 of 1925
E. P. R. No 25 of 1931.

பொன்னேரி கோவாப்ரேட்டிவ் சொசைட்டி பிரசிடெண்டு கருப்பண முதலியார்—வாதி.

பொன்னேரி சாந்தக்கவுண்டன் மகன் ஷை சொசைட்டி 33 நெம்பர் இராமசாமிக் கவுண்டன்—பிரதி வாதி.

ஷை பிரதிவாதிக்குத் தெரியப் படுத்துவது என்னவென்றால்,

ஷை நெம்பரில் வாதிக்கு ஷை சொசைட்டியில் அடமான டிக்கிரிப்படி பிரதிவாதியால் சுமார் ரூ. 346-15-0 வரவேணுமாய் ஷை டிக்கிரியை நிறைவேற்ற வேணுமாயும் ஷை அடமான சொத்தை ஏலத்திற்கு கொண்டுவர வேணுமாயும் மனுக்கொடுத்து அதற்காக 21-8-31ல் வாய்தா போட்டிருக்கிறது. ஷை தேதியில் ஏதாவது ஆக்ஷேபணையிருந்தால் தெரிவித்துக்கொள்ளவும். அல்லாத வரையில் ஒரு கக்ஷியாய் தீர்ப்பாகிவிடும்.

N. Mounaguruswami Naidu, வாதியின் அட்வகேட்.
உடுமல்பேட்டை, 13-8-31,

சண்டமாருதம்.

சுயமரியாதை இயக்கத்தின் சார்பாய் திரு. சொ. முருகப்ப அவர்களை ஆசிரியாராகக் கொண்டு திருச்சியில் இருந்து வெளியாகும் "சண்டமாருதம்" என்னும் தினசரிப் பத்திரிகையின் முதல் இதழ்வரப் பெற்றோம்.

அது சுயமரியாதைக் கொள்கையை முக்கிய நோக்கமாகக் கொண்டு பிரசுரிக்கப்படுவதாகும். அதை ஒவ்வொருவரும் அவசியம் வாங்கிப் படிக்க வேண்டுமென்று வேண்டிக் கொள்ளுகின்றோம். தனிப்பிரதி விலை 6 பை.

மாதாச் சந்தா 1—2—0
வருஷ சந்தா 13—8—0

விலாசம்:-
"சண்டமாருதம்"
திருச்சி.

ஜனநாயகம்.

ஜனநாயகம் என்ற தேசீய வார வெளியீட்டின் முதல் இரண்டு இதழ்கள் வரப்பெற்றோம். இதன் ஆசிரியர் திரு. எம். கோதண்டராமன் அவர்களாகும். இதில் பல தேசீய செய்திகள் காணப்படுகின்றன.

இதன் வருட சந்தா ரூ. 2-2-0.
தனிப்பிரதி 9 பை.

கிடைக்குமிடம்:—
ஜனநாயகம் ஆபீஸ்,
மிட்டாய்க் கடைவீதி,
வேலூர்.

குடி அரசு எஜண்ட்
ஈரோடு,
ஈ. வி. ஜெயராம்
புஸ்தக ஷாப், கடைவீதி.

அறிவிப்பு.

பிரம்ம முடி என்பது குடும்ப, பொதுப்பெயராக உபயோகித்து வந்ததை பிரம்ம முடி வைத்திய சாலை என, பெயர் வைத்து நடத்திவருவதை, சுமார் 25-வருஷங்களுக்கு முன்பே, விலகிக்கொண்ட விபக்த, சகோதரர்களும், பிரம்ம முடி வைத்திய சாலை என்னும் விலாசத்தையே வைத்து நடத்த யோசித்து வருவதாக தெரியவந்ததினால், பிரம்முடி என்னும் வாக்கியத்திற்கு மாற்றுப்பெயராக கோஷாயி வைத்திய சாலை என பெயரிட்டிருப்பதை சமஸ்த ஜனங்களுக்கும் இதனால் தெருவித்துக்கொள்ளுகிறேன்.

டாக்டர், பி. ஏ. எதிராஜ்.
(கால்ருபைரி)
கோஷாயி வைத்திய சாலை,
தென்னூர், திருச்சி,

(8ம் பக்கத்தொடர்ச்சி)

இராமநாதன், ப. ஜீவானந்தம், மெய்யப்பா; பட்டிவீரன்பட்டி ஊ. பு. அ. சௌந்திரபாண்டியன்; பெரியதம்பி நாடார்; நடராஜன்; அருணாசலம்; இரங்கசாமி; விருதுநகர் வி. வி. இராமசாமி, எம். எஸ் செந்தில்குமார்; எம். எஸ். பி. எஸ். பெரியசாமி; சேர்மன் சங்கரலிங்கநாடார் வைஸ்சேர்மன் சிதம்பரநாடார்; மன்னன்; பழனியப்பன்: மாரியப்ப; மாரிமுத்து; வெயில் முத்துசாமி; திருவண்ணாமலை உத்தண்டன்; வி. வி சண்முகம். வி. வி. தனுஷ்கோடி; மதுரை ஆர். எஸ். நாயடு, இரங்கசாமிநாயடு, ஜயாதுரை, நாராயணன், சிவகுருநாதன், ஜே. என். இராமநாதன், டி. வி. சுப்ரமணியம், அருப்புக்கோட்டை கோபாலகிருஷ்ணன், சோமசுந்திரம், அய்யாமுத்து, மல்லய்யா, வீரய்யா, கருப்பய்யா, சுப்ரமணிய முதலியார், முத்துநாடார். சங்கரலிங்கபாண்டியன், முத்துராமலிங்கபுரம் வெங்கிடுசாமி பாவலர், திண்டுக்கல் மாஜிசேர்மன் இராமசாமி நாயடு பி ஏ., பி எல்., சோலை நாடார், முருகேசன், சோளவந்தான் வெங்கிடுசாமி, சுப்ரமணியம், கோட்டாறு இராமலிங்கம். திரவியம், இராமசாமி, ஸ்ரீவில்லிப்புத்தூர் பாலய்யா அவர்களும் சகோதரரும், பால்வண்ணன், திருநெல்வேலி சாவடிப்பிள்ளை, வேலாயுதம், சுப்பையா, நாங்குனேரி வெங்கிடுசாமி, உத்தமபாளையம் பி டி. ராமையா, பண்ணைபுரம் கிருஷ்ணசாமி, சின்னமனூர் ஆர். கே. பழனிசாமி, ஆர். பி. எம். இரத்தினசாமி, எம். கே. நல்லமுத்து அ. சா. முருகய்யா, காமாக்ஷிபுரம் கே. தேவதாஸ், தாழைமுத்து, சிவமுருகன், துரைசாமி, மதுரை எஸ். இலக்ஷ்மிரதன் பாரதி, சென்னை அருணகிரி, சிவகங்கை இராமச்சந்திரன் சேர்வை, பி. ஏ. ஜயம்பெருமாள், ராஜமகேந்திரம், எம். கே. பாலசுப்ரமண்யம், திருமதி இந்திராணி பாலசுப்ரமண்யம், திருவாளர்கள் எல். பி. எஸ். சண்முகநாடார், எஸ். வி. பி. எஸ். தங்கமணிநாடார், பி. சி. கே. கருப்பையா நாடார், அண்ணாமலை நாடார், மா க. மா. அண்ணாமலை நாடார், பச்சைகண்ணுநாடார், மாடசாமி, முத்துசாமி. செகலையா, எம். பலவேஷம், எஸ். கே. வரதராஜலு, பி. சுப்பண்ணன், தி. ரா. இரங்கசாமி, ஆபிரகாம், பால்ராஜ், ஏ. ஆதித்தன், சாமுவேல், வெற்றிவேல், மலையரசு, வைகுண்டம் ஆகியவர்களும் இன்னும் முசிரி கந்தசாமி துறையூர் இராமசாமி, பட்டுக்கோட்டை சிதம்பரம், புதுவை ஜெ. சௌரிநாதன், காஞ்சிபுரம் கலியாணசுந்தரம், நால்திகம் சி. கே. குப்புசாமி ஆகியவர்களும், இன்னும் ஆண்களும் பெண்களுமாக சுமார் 5000 பிரதிநிதிகளும், 2000 விசிட்டர்களுமாக மகாநாட்டு பந்தலில் சுமார் 7000 பேர்கள்வரை விஜயம் செய்திருந்தானது குறிப்பிடத்தக்கது.

மகாநாடு துவக்கப்பட்டதும் நாகபட்டணம் வாலிபர்களால் சுயமரியாதைப்பாடல்கள் பாடப்பட்டதும், வரவேற்புக்கழகத்தலைவர் திருசௌந்திரபாண்டியன் அவர்கள் தமது வரவேற்புப் பிரசங்கத்தைப்படித்தார். (அதுமற்றொருபக்கம் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது) அதுமுடிந்ததும், அவர் தலைவரைபிரேரேபித்தார். பிறகு திருவாளர்கள். விருதுநகர் சேர்மென் சங்கரலிங்க நாடார், எஸ். இராமச்சந்திரன் பி. ஏ., பி. எல்., கரூர் வைஸ் சேர்மென் தாண்டவஞ் செட்டியார், பி. சிதம்பரம் பி.ஏ., பி.எல்., எஸ். லக்ஷிமிரதன் பாரதி எம்.ஏ., பி.எல்., நீலாவதி, விருதுநகர் மாஜி முனிசிபல் சேர்மென் எம். எஸ். பி. செந்தில்குமார், ஜெ. என். இராமநாதன், கே. வி. அழகர்சாமி, ஆதிதிராவிட வேதமாணிக்கம், அனுப்பபாளையம் குமாரசாமி செட்டியார் முதலியவர்கள் ஆமோதித்தார்கள்.

பிறகு பெருத்த கரகோஷத்துடனும், ஜே! சப்தத்துடனும் திருவாளர் ஆர். கே. ஷண்முகம் அவர்கள் எழுந்து தலைமை ஆசனத்தமர்ந்தார். பிறகு சரிகை மாலையும், ரோஜா மாலையும் சூட்டப்பட்டதும் அவர் எழுந்து நின்று பேச, முடியாததால் மண்டபத்தின் முன்பாகம் ஒரு மேஜை போடப்பட்டு அதன்மீது உட்கார்ந்து சிறிது நேரமே முகவுரையாகப் பேசினர். (அதுமற்றொருபக்கம் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றது.) மற்றதை முடிவுரையில் கூறுவதாகச் சொல்லி ஆசனத்தமர்ந்தார்.

இவை முடிந்தவுடன் தீர்மானங்களை மறுநாட் காலையில் வைத்துக் கொள்ளுவதாயும், சாப்பாட்டிற்கு மேல் பகல் 3 மணிக்கு பெண்கள் மகாநாடு நடைபெறும் என்றும் காரியதரிசி திரு. வி. வி, இராமசாமி அவர்கள் சொல்லிய பிறகு சாப்பாட்டிற்காக மகாநாடு கலைந்தது.

சாப்பாடு முடிந்தவுடன் பந்தலில் 1 மணிக்கே கூட்டம் கூடி பல உபன்யாசங்கள் நடத்தப்பட்டன.

முதல் நாள் பிற்பகல் கூட்டம்.

பெண்கள் மகாநாடு.

8உ மாலை 3மணிக்கே மகாநாட்டுப் பந்தலில் பெண்கள் மகாநாடு துவக்கப்பட்டது. என்றாலும் 1 மணி முதலே பெண்கள் கும்பல் கும்பலாய் வர ஆரம்பித்து 4 மணிவரை பெண்கள் வந்துகொண்டே இருந்தார்கள். எவ்வளவுதான் குறைத்துக் கணக்கிட்ட போதிலுங்கூட 3000 பேர்களுக்குக் குறைவில்லாமலேயே பெண்கள் வந்திருந்தார்களெனக்கூறு மிகையாகாது.

முதலில் வரவேற்புத் தலைவி திருமதி பத்மாவதி திருவண்ணாமலை அம்மாள் அவர்கள் வரவேற்பு உபன்யாசம் செய்ததும், (வரவேற்பு உபன்யாசம் பிரிதொருபக்கம் காண்க) திருமதி இந்திராணி பாலசுப்பிரமணியம் அம்மாளை தலைவராக திருமதிகள் மரகதவல்லி, இரங்கம்மாள், குஞ்சிதம் பி ஏ., நீலாவதி ஆகியவர்களால் முறையே பிரேரேபிக்கப்பட்டு ஆமோதித்து ஆதரித்து பெரிய கரகோஷத்தினிடையே அக்கிராசனம் வகித்தவுடன் திருமதி பத்மாவதி அவர்களால் மாலை சூட்டப்பட்டதும் திருமதி இந்திராணி பாலசுப்பிரமணியம் அம்மாள் அவர்கள் எழுந்து சுமார் 1½ மணி நேரம் தலைமைப் பேருரை உபன்யாசம் செய்தார்கள். (பிரிதொருபக்கம் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றது)

பிறகு இரவு 8 மணிவரை சில தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. மகாநாட்டுத் தலைவர் திரு. ஆர். கே. ஷண்முகம் அவர்களுக்கு உடல் அசௌக்கியம் ஏற்பட்டதால் அவரை ஊருக்கு வழியனுப்ப வேண்டியதை முன்னிட்டு மகாநாட்டை 8-மணிக்கு முடிவு செய்து தலைவரை அனுப்பிக்கொடுக்க திருவாளர்கள் ஈ. வெ. இராமசாமி, சௌந்திரபாண்டியன், வி. வி. இராமசாமி முதலியவர்கள் ரயிலுக்குச்சென்று அனுப்பிக்கொடுத்துவிட்டு வந்தார்கள். இரவு சாப்பாட்டிற்கு பிறகு விஷயாலோசனைக்கூட்டம் மகாநாட்டுப் பந்தலில் திருவாளர் பாண்டியன் அவர்கள் தலைமையில் இரவு 10-30 மணிக்கு துவக்கப்பட்டு இரவு 3.30 மணிவரை நடந்தது. விஷயாலோசனைக்கமிட்டி ஆரம்பமானதும் சோளவந்தான் திரு. வெங்கிடுசாமி அய்யர் அவர்கள் விஷயாலோசனை கமிட்டிக்கு பிரதிநிதிகளை தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்று சொன்னர். இதற்குத்தலைவர் அவர்கள் அகாலமாகிவிட்டதால் இனி தேர்தல் நடத்துவது சிரமமென்றும் இருந்தபோதிலும் கூட்டத்தின் அபிப்பிராயத்தை தெரிய ஆசைப்பட்டு சபையின் அபிப்பிராயம் கேட்டார். பெரும்பான்மையானவர்கள் பொதுக்கூட்டமே முழுமையுமே விஷயாலோசனைக்கமிட்டியாக எடுத்துக்கொள்ளவேண்டும் என்று சொன்னார்கள். பிறகு அந்தப்படியே தீர்மானிக்கப்பட்டது.

முதன் முதலாக மதங்கள் கண்டனத்தீர்மானம் விவாதிக்கப்பட்டது அதில்சிறிதுகாரமான விவாதம் நடந்ததென்றாலும் முடிவில் ஒரே ஒரு ஓட்டுதான் விரோதமாய் இருந்தது. பிறகு கதர் தத்துவ கண்டனத்தீர்மானத்திலும் சிறிது விவாதங்கள் நடந்தது. எனினும் அதற்கு 3 ஓட்டுகள் மாத்திரம் விரோதமாகவும் மற்ற தீர்மானங்கள் எல்லாம் ஏகமனதாகவுமே நிறைவேற்றப்பட்டது

மறுநாள் நடவடிக்கை.

மறுநாள் காலையில் சுயமரியாதை மகாநாடு கூட சற்றுநேரமாகிவிட்டதால் திருவாளர் SK. நாயர் அவர்கள் சுயமரியாதை இயக்கம் செய்துள்ள வேலையையும், செய்ய வேண்டியதையும் பற்றி 1மணி நேரம் ஆங்கிலத்தில் பேசினர், மதுரை திரு நாராயணன் M.A B.L.. அவர்கள் தமிழில் மொழிபெயர்த்தார். பிறகு 10-30 மணிக்கு மகாநாடுகூடியதும் தீர்மானங்கள் எல்லாம் மகாநாட்டில ஏகமனதாகவே நிறைவேறின. கதர் கண்டனத்துக்கு மாத்திரம் ஒரே ஒருவர் எதிரிடையாய் கைதூக்கினர். எனினும் யாரும் எதிர்த்துப் பேசவேயில்லை.

கதர் கட்டலாமா? வேண்டாமா?

கதர் தீர்மானம் ஓட்டுக்கு விடுமுன் ஒருநண்பர் அதாவது நாச்சியார்புரம்திரு ப.ஜீவானந்தம் அவர்கள் எழுந்து கதர் கட்டலாமா? அல்லதுவேண்டாமா? என்று ஒரு கேள்விகேட்டார். அதற்கு திரு எஸ். இராமநாதன் அவர்கள் திரு. காந்தியார் அன்னிய துணியை கொளுத்துவது, கிழித்தெறிவது என்பது போன்ற அராஜக பலாத்கார உணர்ச்சியும், துவேஷ உணர்ச்சியும் நமக்கு இல்லையென்றும், கதர் துணி இடத்தில் நமக்கு எவ்வித விரோதமும் இல்லை என்றும், கதர் சுயராஜியத்தைக் கொடுக்கும் என்பதிலும், கதர் ஒரு தேசீய முற்போக்குக்கு ஆனது என்பதிலும், அது ஒரு தேசியத்தொழில் என்பதிலும், கதர் பொருளாதாரத் திட்டம் என்பதிலும், தமக்கு சிறிதும் நம்பிக்கை இல்லை என்றும், கதர் தத்துவ உணர்ச்சி மக்களின் சமதர்மக் கொள்கைக்கும், கூட்டுறவுக்கும், தொழில் முற்போக்குக்கும் விரோதமென்றுமேதான் தாம் கருதுவதாகவும், இதற்காக இப்பொழுது கட்

டி இருக்கும் கதரை கொளுத்தவோ, வாங்கி இருக்கும் கதரை கிழித்தெறியவோ வேண்டியதில்லை என்றும், கதர் வாங்குவதால் தாங்கள் பொருளாதார நஷ்டத்தால் பாதிக்கப்படுவதில்லையென்றும் கருதுகின்றவர்கள் வாங்கி உபயோகிப்பதற்கு இத் தீர்மானம் விரோதமில்லை என்றும் சொன்னார்.

கடைசியாக,சுயமரியாதை சங்கத்திற்கு நிர்வாக சபை அங்கத்தினர்கள் தேர்ந்தெடுத்ததில் அவர்களுக்குயோக்கியதா பட்சம் இன்ன இன்னது இருக்கவேண்டுமென்பதில் சிறிது வாதப்பிரதிவாதம் ஏற்பட்டது. முடிவில்இப்பொழுது வழக்கம்போல் தேர்ந்தெடுப்பது என்றும், இனி சங்கத்திற்கு விதிகள் ஏற்படுத்துவதில் யோக்கியதா பட்சம் இன்னது என்பதாக நிர்ணயித்து அந்தப்படி செய்யலாம் என்றும் சொல்லப்பட்டு, பிறகு நிர்வாக சபை அங்கத்தினர்கள் நியமனம் செய்யப்பட்டது. அடுத்தவருஷ அதாவதுசுயமரியாதை நான்காவதுமகாநாடு திருவிதாங்கூருக்கும், தஞ்சைக்கும்,திருச்சிக்கும்,கோயமுத்தூருக்கும் அழைக்கப்பட்டதென்றாலும், திருவிதாங்கூர் அழைப்பையேஏற்றுக்கொண்டுமற்றவர்கள் விஷயம் அடுத்த வருஷ மகாநாட்டில் கவனிக்கப்படும் என்று தீர்மானிக்கப்பட்டது மகாநாட்டை திருவிதாங்கூருக்கு அழைத்த பி. சிதம்பரம் பி. ஏ., பி. எல். அவர்கள் திருவிதாங்கூர் இராஜியத்தின் இராஜியபாரத்தை சமீபத்தில் ஏற்றுக்கொள்ளப் போகும் மகாராஜா அவர்களும் ஜூனியர் மகாராணி அவர்களும் சீர்திருத்த விஷயத்தில் சீனியர் மகாராணியைவிட அதிக முற்போக்கான நோக்கம் கொண்டவர்கள் என்றும், தங்கள் இராஜியத்தில் அடுத்த வருஷம் கூட்டினால் ஜூனியர் மகாராணி அவர்களின் ஆதரவு அதிகம் கிடைக்குமென்றும், ஆதலால் இந்தத்தடவை தங்களுக்கே கொடுக்கவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார். இதுமுடிந்ததும்,முறைப்படிதலைவருக்குவந்தனம்சொல்லி மாலையிடப்பட்டது.

பிறகு திரு. வி. வி. இராமசாமி அவர்கள் வாலண்டியர்களுக்கும், சமையல்சிப்பாகிகளுக்கும், அதாவது திருவாளர்கள் வைஸ் சேர்மென் சிதம்பரநாடார், மாரியப்பன், மாரிமுத்து ஆகியவர்களுக்கும், கூட்டுக்காரியதரிசி வெயில் முத்துசாமி அவர்களுக்கும், பள்ளிக்கூட கமிட்டிக்கும், முனிசிபல் சபையாருக்கும், பிரத்தியேகமாய் சேர்மென் அவர்களுக்கும், எலக்ட்ரிக் லைட் இலவசமாய் போட்ட கள்ளிக்குடி ரெட்டியாருக்கும், மோட்டார் பஸ்கள் இலவசமாய் உதவிய அருப்புக்கோட்டை மைனர் என வழங்கும் கோபால கிருஷ்ணசாமி அவர்களுக்கும், மகாநாட்டு பந்தலுக்கு இடம் உதவிய திரு. செந்தில்குமார் அவர்களுக்கும், விளம்பர அதிகாரி திரு. உத்தண்டன் அவர்களுக்கும், யானைகள் குதிரைகள் உதவியவர்களுக்கும், மற்றும் நந்தவனங்கள் உதவியவர்களுக்கும், ஜாகைகள் உதவியவர்களுக்கும், மற்றும்ரயில்,தந்தி, தபாலாபீசர்கள், டாக்டர்கள் முதலியவர்களுக்கும் நன்றியறிதல் வந்தனோபசாரம் சொல்லப்பட்டது. கடைசியாக,

திரு. பாண்டியன் அவர்களுக்கு இவ்வளவு காரியத்திற்கும்அடிப்படையாயிருந்து, தன்னுடைய பல ஜோலிகளையும் லட்சியம் செய்யாமல், தேக அசௌகரியத்தையும் பாராமல், விருதுநகரிலேயே தங்கியிருந்ததுடன்,டிக்கட்டு விற்கும் வேலை முதலியவைகளையெல்லாம்கூட கவனித்து கலகம், கட்சிப்பிரதிகட்சிகளுக்கெல்லாம் எதிர்த்து நின்று, தலை கொடுத்து, தனதுசொந்த ஆள் மாகாணங்களுடன் இருந்த மகாநாட்டின் இவ்வளவு சீருக்கும் சிறப்புக்கும் காரணஸ்தராயிருந்த திரு. சௌந்திரபாண்டியன் அவர்களுக்கு விருதுநகர் மக்கள் சார்பாக மனமார்ந்த நன்றியறிதலைக்காட்டுவதாகச் சொல்லி ஒரு பெரிய மாலையை யணிந்தார்.

பிறகு திரு. பாண்டியனவர்கள் எழுந்து தன்னை வேண்டுமென்றே புகழ்ந்து பேசியிருப்பதாகவும், திருவாளர்கள் வி. வி. இராமசாமி, வி. வி. ஷண்முகம், வி. வி. தனுஷ்கோடி பி ஏ, செந்தில்குமார், சிதம்பரம் முதலிய அநேக கனவான்களுக்கு நமதியக்கத்திலுள்ள உண்மையான அன்பும் ஊக்கமுமே இவ்வளவு பெருமைக்கும் காரணமென்றும், தான் இவர்கள் இட்ட பணியையே தன்னால் கூடிய அளவு செய்ததாகவும், உண்மையிலேயே தான்தான் விருதுநகர் கனவான்களுக்கு நன்றி செலுத்தக்கடமைப்பட்டதாகவும்சொல்லி திரு. வி. வி இராமசாமி அவர்களுக்கு மாலையிட்டார்.

பிறகு திரு. ஈ. வெ. இராமசாமி எழுந்து வரவேற்புக்கமிட்டியாருக்கு நன்றி செலுத்துகையில், திருவாளர்கள் பாண்டியன், வி. வி. இராமசாமி அவர்கள் குடும்பம், செந்தில்குமார் முதலாகிய கனவான்கள் செய்த உதவி மறக்கக்கூடியதல்லவென்றும், பல விதத்திலும் நெருக்கடியான இந்தச் சந்தர்ப்பத்தில் இப்படி ஒரு மகாநாடு கூட்டி பதினாயிரக்கணக்கான மக்களை வரவழைத்து அவர்களுக்கு வேண்டிய சௌகரியமெல்லாம் செய்து பெருமைப்படுத்தியது சாதாரணமான காரியமல்லவென்றும், தமிழ் நாட்டில் இதுவரை நடந்த மகாநாடுகளையெல்லாம்விட இது மேலாகவே நடந்து விட்டதென்றும், இதைப்பார்த்தவர்கள் இனி மகாநாடு நடத்தவே பயப்படுவார்கள் என்றும், பெரிய பிரசாரத்திற்கு இடமாயிருந்தாலும் கூட இனிஇவ்வித ஆடம்பரங்களில்லாமலேயே நடத்தப்பார்க்க வேண்டுமென்றும், சாப்பாடு சௌகரியமும் தண்ணீர் சௌகரியமும் மக்களை பிரமிக்கச்செய்து விட்டதென்றும், இந்த மகாநாடானது பிரதிநிதிகளுடையமனதையே அடியோடு மாற்றிவிட்டதென்றும், புதிய உணர்ச்சியோடு செல்லும்படி செய்திருக்கின்றதென்றும், இவ்வளவு ஆயிரக்கணக்கான பெண்மணிகள்வெளியூர்களிலிருந்து வந்ததற்கும், இவ்வளவு ஆயிரக்கணக்கான வாலிபர்கள் வெளியூர்களிலிருந்துவந்ததற்கும்திரு. பாண்டியன் அவர்களுடையவும், திரு வி. வி. இராமசாமி அவர்களுடையவும் உழைப்பும் பிரசாரமுமே காரணமென்றும், எடுத்துக்கொண்ட காரியத்தை வெற்றிகரமாய் முடிப்பதில் தமிழ் நாட்டில் இந்த சமூகமே முன்னணியில் நிற்கக்கூடியதென்றும், ஆகவே வரவேற்புக் கமிட்டிக்கும் விருதுநகர் கனவான்களுக்கும் குறிப்பாக திருவாளர்கள் பாண்டியன் அவர்களுக்கும், வி. வி. இராமசாமி அவர்களுக்கும் தனக்காகவும் பிரதிநிதிகளுக்காகவும் தமிழ்மக்களுக்காகவும் உண்மையான நன்றி செலுத்துவதாகவும் கூறினார். பிறகு பகல் 1மணிக்கு சுயமரியாதை மகாநாடு முடிவு பெற்றது.

பிற்பகல் 5மணிக்கு வாலிபர் மகாநாடு நடக்கும் என்று அறிவிக்கப்பட்டது.

பிறகு சாப்பாடு முடிந்தவுடன் 2மணிக்கு எல்லோரும் ஆண்களும் பெண்களும் கொட்டகைக்கு வந்து விட்டார்கள். திரு. ஈ வெ. இராமசாமி அவர்கள் பிரதிநிதிகளுக்கு சுயமரியாதை மகாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களைப் பற்றி 2மணி நேரம் பேசினார். சந்தேகப்பட்டவர்களுக்கெல்லாம் விளங்கும்படி 'கேள்வி' சமாதானம் என்கின்ற முறையில் பேசினார். மணி 5-30 ஆனதும்,

வாலிபர் மகாநாடு.

வாலிபர் மகாநாடு ஆரம்பிக்கப்பட்டது. மகாநாட்டுத் தலைவர் திரு. நாராயணப்பெருமாள் B.A., M.L.C., (திருவிதாங்கூர்) அவர்கள் சட்டசபையில் முக்கியவிஷயத்தில்ஈடுபட்டுக்கொண்டதால் வரமுடியாமல் போகவே திருச்சி T. V. சோமசுந்திரமவர்களைக் கேட்டுக் கொள்ள அவரும் சம்மதித்தார்- ஆகவே, வாலிபர் மகாநாடு வரவேற்புத்தலைவர் திரு. ஜயராம் B. A., அவர்கள் வரவேற்பு உபன்யாசம் செய்ததும் திரு. டி. வி. சோமசுந்திரம் அவர்கள் தலைமை வகிக்க வேண்டுமென்று திருவாளர்கள் வி. வி. இராமசாமி, கி. ஆ. பெ. விஸ்வநாதன், ஈ. வெ. இராமசாமி ஆகியவர்கள் முறையே பிரேரேபித்து ஆமோதித்து ஆதரிக்க திரு. சோமசுந்திரமவர்கள் அக்கிராசனம் வகித்து நீண்டதொரு தலைமை உபன்யாசம் செய்தார். (மற்றொரு பக்கம் காண்க)

பிறகு பல தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன. அவற்றுள் முக்கியமானது'சுயமரியாதை வாலிபர் சங்கத்தின் கடைசி லக்ஷியம் 'மக்களின்சமதர்மமும் பொதுவுடைமைத் தத்துவ'முமே என்பதாகத் தீர்மானித்ததாகும்.

பிறகு தலைவர் முடிவுரையானதும் வந்தனோபசாரம் கூறப்பட்டு வாலிபர் மகாநாடு இரவு 9மணிக்கு கலைந்தது.

(வாலிபர் மகாநாட்டுத் தீர்மானங்கள் அடுத்தவாரம் வெளிவரும்.)

நாடகம்.

அன்று இரவு சாப்பாட்டிற்குப்பிறகு 11மணிக்கு "சுயமரியாதை அல்லது மூன்றுநண்பர்கள்" என்னும் நாடகம் திருச்சி முருகானந்த சபையாரால் நடத்தப்பட்டது. திரு. வாசு அவர்களும்திரு. விஸ்வநாதம் அவர்களும் முக்கியஸ்தர்களாக இருந்தார்கள். ஜாமம் 3மணிக்கே கூட்டம் முடிவு பெற்றது. மறுநாள் காலை முதல் எல்லோரும் தங்கள் தங்கள் ஊருக்குப் பிரயாணமாகி விட்டார்கள்.

சுயராஜியமென்பது பார்ப்பன ராஜியம்.

(5ம் பக்கத் தொடர்ச்சி)

வருணாசிரமத்தை ஆதரிப்பவர்களே தேசீய சுயமரியாதை வீரர்கள்.

உதாரணமாக, தேசிய இயக்கமென்று சொல்லிக்கொள்ளுபவர்கள் எல்லாம் வெள்ளைக்காரனை மாத்திரம் திட்டிவிட்டு அதிகாரம், பதவி முதலியவைகளைப்பற்றிமாத்திரம்பேசிவிட்டு மற்ற தங்கள் சகோதரர்களை யெல்லாம் தாழ்த்தி, இழிவுபடுத்தி, அடக்கி வைத்து, கொடுமைப்படுத்தி வருவதைப்பற்றி சிறிதும் காரியத்தில் கவலை செலுத்த விரும்பாதவர்களாகவேயிருக்கிறார்கள். ஒரு ஜாதியாரோ ஒரு வகுப்பாரோ மற்றொரு ஜாதியாரைவிட, வகுப்பாரைவிட உயர்ந்தவர்களென்பதான தத்துவமானது ஒரு நாட்டிலிருக்குமேயானால் அது எவ்வளவு கொடுமையானதான ஒரு அன்னிய அரசாங்கக் கொடுமையைவிட மிகப்பெரிய அக்கிரமமும், கொடுமையுமென்றே சொல்லுவேன்: ஒரு சமூகத்தை அடக்கியாண்டு கொண்டிருக்கும் மற்றொரு சமூகத்தை வேறொரு சமூகம் அடக்கியாண்டுகொண்டிருப்பது எந்த விதத்திலும் தப்பிதமென்று சொல்லிவிடமுடியாது.

'தேசிய' இயக்கமென சொல்லிக்கொள்ளுவது உண்மையான 'விடுதலை இயக்கமானால்' அந்த இயக்கத்தைச்சார்ந்த மக்கள் தங்கட்தேசத்து சகோதரமக்களை தாழ்த்தி, இழிவுபடுத்தி, அடிமைப்படுத்திக் கொண்டிருப்பதை விட்டுவிட்டார்களா? விட்டுவிட்டோமா?? என்று தங்கள் நெஞ்சில் கையைவைத்துப்பார்த்து, சத்தியத்தை யுணர்ந்தபிறகுதான் தங்களை மற்றவர்கள் அடிமைப்படுத்திக்கொண்டிருப்பதைப்பற்றி நினைப்பதற்கு அருகதையுள்ளவர்களாவார்கள். இந்த போக்கியதையுள்ள தேசியம் நம்மிடமிருக்கிறதா? தேசிய இயக்கமென சொல்லிக்கொள்ளும் காங்கிரசினிடம் இருக்கின்றதா? யென்பதை யோசித்துப்பாருங்கள். ஆகவே,

பிரிவினை எதிரிகளின் சூக்ஷியே யாகும்.

'தேசிய சுயமரியாதை' யென்றும் 'தேசியமற்ற சுயமரியாதை'யென்றும் பாகுபடுத்திப்பேசயேற்பட்டது நமது இயக்கத்தின் எதிரிகளின் சூக்ஷியேயாகும். சுயமரியாதையென்று சொல்லிவிட்டால் அதில் தேசியமென்றும் தேசியமற்றதென்றும் சொல்லிப்பிரிப்பதற்கிடமே கிடையாது. நமது நாட்டில் எந்த இயக்கமானாலும் எந்த கக்ஷியானாலும், எந்த மகாத்மாக்களானாலும் முதலில் நமது நாட்டு மக்களை நமது நாட்டு மக்கள் அடிமைப்படுத்திக்கொண்டிருப்பதை விடுதலை செய்யாமல் வாயில், 'தேசியம் தேசிய' மென்று பேசிக்கொண்டிருந்தால் அப்படிப்பட்ட கக்ஷிகளின்-மகாத்மாக்களின செயலை எடுத்துச்சொல்லி, வெளிப்படையாய் எதிர்த்தேதீருவோம்: நமது சுயமரியாதை இயக்கத்தின் உண்மைக்கொள்கைகளி விதுவுமொன்றாகும்.

நமதியக்கம் சாதித்ததென்ன?

நம்மவர்களில் சிலர், 'தேசிய' மென்கின்ற பெயரை சொல்லிக்கொண்டு ஒரு கூட்டத்தாருடனும், 'சீர்திருத்த' மென்ற பெயரை சொல்லிக்கொண்டு நம்முடனுமாயிருந்துகொண்டு அளவளாவி வருவது நமது கட்சியை பலவீனப்படுத்துவதேயாகும். நமது நண்பர்களும், நமது எதிரிகளும் நம்மைப்பார்த்து "உங்கள் சுயமரியாதை இயக்கம் என்ன காரியத்தை சாதித்து விட்ட" தென கேட்கின்றார்கள். நாம், நமதியக்கத்தின் மூலம் செய்ய வேண்டுமென்று கருதியிருக்கும் காரியங்களில் பல நமது இந்த சொற்பகாலத்திலேயே மக்களின் மனதைக் கவர்ந்து, காரியத்தில் செய்யும்படியாகவும், செய்துவரும்படியாகவும் செய்துவிட்டது. இனியும் அநேக காரியங்கள் சர்க்காராலும், சட்டங்களினுதவியாலும் செய்யப்படவேண்டும்.

நமக்கு முட்டுக்கட்டையாயிருப்பவர்கள் யார்?

அவற்றிற்கு, நமது ஜனங்களே முட்டுக்கட்டையாயிருந்துவருகின்றார்கள். அவ்வித முட்டுக்கட்டைக்கு "தேசிய" இயக்கமென்று சொல்லப்படுவது ஆதரவளித்துக் கொண்டு வருகின்றது. உதாரணமாக, ஜாதி வித்தியாசங்களை யொழிப்பதென்பது நமதியக்கத்தின் முக்கியக்கொள்கை. அதற்கு, என்னென்ன செய்யப்படவேண்டு மென்கின்ற விஷயத்தில் யோசித்து, வேலை செய்துவருகிறோம். என்றாலும், பெரும்பான்மையாய் அவைகள் பிரத்தியட்ச நடவடிக்கையில் வருவதற்கு நம்மால் செய்யப்பட்டு வரும் காரியங்களுக்கு நமது ஜனப்பிரதிநிதிகளென்பவர்களால் செய்யப்பட்ட சட்டங்கள் இடையூறாகயிருந்து வருகின்றது. அவற்றை நாம் மாற்றியாகவேண்டும். ஆனால், கடந்த 150 வருஷங்களாக நம தேசத்தில் நமக்காக பேற்பட்ட சட்டங்களெல்லாம் மிகவும் ஆபாசமானவைகளாகவே ஏற்படுத்தப்பட்டுவிட்டன.

ஏனெனில், விக்டோரியா மகாராணி அவர்களின் விளம்பரத்தில் "கவர்ன்மெண்டார் மதவிஷயத்தில் நடுநிலைமை வகிப்ப"தாக சொல்லும்படி செய்யப்பட்டபோதே, நமது சமூக சீர்திருத்தத்திற்கு சாவுமணி அடித்தாய்விட்டது. மத நடுநிலைமைக்கு விரோதமாக போகமாட்டோமென்று கவர்ன்மெண்டாரை எப்பொழுது சொல்லச் செய்தோமோ அதுமுதலே நமது நாட்டு விடுதலைக்கு பெருத்த கேடும், இடையூறும் செய்ததாக ஆகிவிட்டது.

மதநடுநிலைமை தேசீயமாகாது.

ஆகவே, நமது "தேசிய" மென்பதில், "தேசிய விடுதலை" யென்பதில் இந்த மத நடுநிலைமை யென்பது இருக்கவே கூடாது. மத நடுநிலைமையைக் கொண்ட இயக்கம் எதுவானாலும், 'தேசிய' இயக்கமாகவே யாகாது. (கேளுங்கள்! கேளுங்கள்!!) தேசிய இயக்கமென்னும் காங்கிரசின் மூலம் இவ்விஷயத்தில் நமக்கு அநேக கேடுகள் செய்யப்பட்டாகிவிட்டது. நமதியக்கத்தை 'தேசிய' இயக்கமல்லவென்று சொல்லுகிறவர்களும், நம்மைக் குறுகியநோக்க முடையவர்கள், வகுப்புவாதிகளென்று சொல்லுகின்றவர்களுமான 'தேசிய வாதிகள்' சேர்ந்த காங்கிரசின் கமிட்டியானது, சமீபத்தில் பம்பாயில் கூடி 'எல்லோருக்கும் மத சுதந்திரம் அளிக்கப்படு' மென்றும், "மத நடுநிலைமை வகிக்கப்படு'மென்றும் 'மதக்கொள்கைகள் காப்பாற்றப்படு" மென்றும் தீர்மானம் செய்து விட்டது.

மதபாதுகாப்பை தகர்த்தெறிய வேண்டும்.

இதை நாம் இப்படியே ஒப்புக்கொண்டால், ஒருநாளும் நாம்சுயமரியாதையையோ, அடிமைத்தனத்திலிருந்து விடுதலையையோ அடைய முடியவே முடியாது. இந்த நிலைமையில் நம்மை 'என்னசெய்து விட்டீர்கள்?' என்று கேட்கின்றவர்களுக்கு, நாம் சொல்லுகின்ற பதிலானது, 'தேசியத்தின்பேரால், மத நடுநிலைமை யென்னும் திட்டத்தால் போடும் முட்டுக்கட்டையை முதலில் தகர்த்தெறியுங்க'ளென்று சொல்ல வேண்டியதாகத் தானிருக்கின்றது. காங்கிரஸ் காரியக்கமிட்டித் தீர்மானமானது இரண்டு வருடங்களுக்கு முன்னாலேயே "சர்வ கட்சி மகா நாட்டில் முசம்மதியர்களைத் திருப்தி செய்ய"தென்னும் தீர்மானத்தின்பேரில் கொண்டுவரப்பட்டது. அது சமயம் யாருமே இதை ஆட்சேபிக்கவில்லை. நான் ஒருவன் மாத்திரமே இதற்கு இரண்டு வருஷங்களுக்கு முன்னாலேயே ஆட்சேபணை சொல்லிக் கண்டித்துப் பேசி எதிர்த்திருக்கின்றேன். ஏனெனில், ஒவ்வொரு மதத்தையும் பாதுகாக்கவேண்டுமென்று தீர்மானித்துக் கொண்டோமேயானால் மதத்தின் பெயரால் அழுத்தப்பட்டு, இழிவு படுத்தப்பட்டிருக்கும் மக்களுக்கு விமோசனமெங்கே? யென்றுதான் கேட்கின்றேன். ஆகவே சுயமரியாதை இயக்கம் மத நடு நிலைமைகொண்ட, மதப் பாதுகாப்புக் கொண்ட "தேசிய" இயக்கத்தை எதிர்த்துப் போராடுவதில் என்ன தப்பிதமிருக்கின்றதென்பதெனக்கு விளங்கவில்லை. இன்று கேட்கும் அரசியல் அதிகாரம் நமது கைக்கு வந்துவிட்டால் எந்தச் சமூக சீர்திருத்தம் செய்யவேண்டுமானாலும் சட்டங்கள் மூலமாய்த்தான் முடியும். சட்டங்கள் செய்வதென்பதி லா மதநடுநிலைமையும், மதபாதுகாப்பும் காப்பாற்றப்பட்டு, அவற்றிற்கு விரோதமில்லாத அளவில் தானே எந்தச் சட்டமும் செய்ய முடியும். உதாரணமாக,

பெண்களைப் பதினெட்டு வயதிற்கு மேற்பட்டுஅவர்களிஷ்டப்படிகல்யாணம் செய்து கொடுக்கவேண்டுமென்றால் நமது சீர்திருத்த விரோதிகள், நமது சுயராஜ்ய நிபந்தனைப்படி 'மத சம்பந்தமாக சட்டங்கள்செய்யக்கூடா'தென சொல்லுவார்களா? அல்லது இல்லையா? என்று கேட்கிறேன். நமது பெண்களுக்குச் சொத்துரிமை அளிக்கப்படவேண்டுமென்று சட்டம் கொண்டுவந்தோமேயானால், நமது சீர்திருத்தவிரோதிகள் "தகப்பனுடைய சொத்திற்குத்தகப்பனுக்குப் பிண்டம் போடுகின்றவனெவனோ அவன் தான் சொத்துக்குப் பாத்தியஸ்தனாக வரமுடியுமேயொழிய, பிண்டம் போட உரிமை யில்லாத பெண்களுக்குச் சொத்துரிமைஇல்லை"யென்று இந்த மத சாஸ்திரத்தை யெடுத்துக் காட்டி மதநடு நிலைமை நிபந்தனையை வலியுறுத்தினால் அப்படிப்பட்ட நிலைமையில் எந்தவித சீர்திருத்தத்தைச் செய்யமுடியுமென்பதைச் சற்று நடுநிலைமையிலிருந்து யோசித்துப் பாருங்கள்.

தேசீய இயக்கம், சுயமரியாதையின் கோடரிக்காம்பே.

ஆகவே தேசிய இயக்கமென்னும் காங்கிரஸ் தீர்மானம் சுயமரியாதை இயக்கத்திற்கு ஒரு பெரிய கோடரிக்காம்பாக இருக்கின்றதா? அல்லது இல்லையா? என்பதை உங்களைக் கேட்கின்றேன். எனவே,

நமது கடமை.

நண்பர்களே! நமது நாட்டிற்கு என்னவிதமான சுயராஜியம் வேண்டுமென்று ஆலோசனையும், தர்க்கமும் நடந்து கொண்டிருக்கின்ற இந்தச் சமயத்தில் சுயமரியாதை இயக்கத்தைச் சேர்ந்தவர்களாகிய நாம் மேற்கூறப்பட்ட கெடுதிகளேற்படவிடாமல் நமது தேசத்தை சுயமரியாதையைக்காப்பாற்றிக் கொள்ளும் பொருட்டு இவ்விதத் தீர்மானங்கள் கொண்டஸ்தாபனங்களோடு எதிர்த்துப்போராடவேண்டுமா? அல்லது வேண்டாமா? என்று கேட்கின்றேன்.

தேசீய சுயமரியாதை வீரர்களின் பதில் என்ன?

இந்நிலைமையில் நாம் "சுயமரியாதை இயக்க'மென்றும், "தேசியமற்ற சுயமரியாதை இயக்க"மென்றும், எந்தக் காரியத்திற்காக வேண்டி பிரிவினை செய்வதென்பதெனக்குப் புரியவில்லை. தேசிய சுயமரியாதைக்காரர்களென்பவர்கள் அத்தகைய கொள்கைகள்கொண்ட தேசிய இயக்கத்தை ஒப்புக்கொள்ளுகின்றார்களா? அல்லது எதிர்க்கின்றார்களா? வென்பதும் எனக்குப்புரியவில்லை. ஆகவே, பிரிவினைக்கு மாத்திரந்தான் இவ்வித உணர்ச்சிகள் பயன்படுமே தவிர, காரியத்திற்குச் சிறிதுமுதவாதென்றே தான் கருதுகின்றேன்.

சுயமரியாதை இயக்கம், அகில இந்திய இயக்கமே யாகும்.

சகோதர, சகோதரிகளே! சுயமரியாதை இயக்கமென்பது நமது தென்னாட்டில்மட்டுந்தானிருக்கின்றதென நினைத்துவிடாதீர்கள், வடஇந்தியாவில், பஞ்சாப் மாகாணத்தில் "ஜாதியை யொழிப்ப" தற்கென்று ஒரு ஸ்தாபனமிருக்கின்றது. அது அநேகமாக நமது கொள்கைகளையே அடிப்

படையாகக்கொண்டது. அவர்கள் என்னைச் சந்தித்தபொழுது நமதியக்கத்தைப்பற்றிப் பேசினேன். அவர்கள் மிகுதியும் சந்தோஷப்பட்டார்கள். மற்றும் பஞ்சாபிலேயே "புரோகித மொழிப்புச்சங்க" மென்பதாக ஒன்று இருக்கின்றது. "மத சம்பந்தமான மூடப்பழக்கவழக்கங்களை யொழிப்ப" தற்கென்றும், "அறிவு இயக்க"மென்றும் பலவாருக மற்றும் பல இடங்களில் சங்கங்கள் ஏற்படுத்தப் பட்டிருக்கின்றன. இவற்றை யனுசரித்து பல பத்திரிகைகளும் நடந்து வருகின்றன.

சுயமரியாதை இயக்கத்தில்நான் மனிதத்தன்மை யேற்படும்

நமதியக்கமானது நமது உற்சாகத்தினுலும், உறுதியினுலும், ஊக்கத்தினுலும் இந்தியாவிலுள்ள எல்லா மக்களுடையவும் அரசியல் விடுதலையையும், சமூகவிடுதலையையும் உண்டாக்கியேத்தீருமென்பதில் எனக்குச் சந்தேகமில்லை. சுயமரியாதை இயக்கத்தில் பிரிவினைக்கு இடமேயில்லை. பல ஆயிரக்கணக்கான வருஷங்களாக நமது மக்களிடையில் புகுத்தப்பட்ட பாமரத்தன்மையையும், அறிவுத்தடையையும், இழிவுகளையும்,நம்மில் ஒருவரையொருவர் அடக்கி ஆளும் கொடுமையையும் அடியோடொழித்துவிட்டு, "நாம் மனிதத்தன்மையைப்பெற்றுவிட்டோ" மென்று உலகத்திலுள்ள மற்ற தேசமக்களுக்கெடுத்துக் காட்டக்கூடிய ஒரு பாக்கியமதையை அடைவதையே நான் "தேசியவிடுதலை"யென்று அவ்வித விடுதலையையடையவோன் ஆசைப்படுகின்றேன். எப்படிப்பட்ட "தேசியவாதி" என்று சொல்லிக்கொள்ளுகின்றவர்களும் இதைத்தான் எண்ணுவார்களென்று நான்கருதுகின்றேன். ஆகவே, இந்தக்காரியத்திற்கு நமது சுயமரியதை இயக்கமேசிறந்தகருவியாகும். இத்துடன் எனது வார்த்தையை முடித்துக் கொள்ளுகின்றேன்.

கீழ்வேளூரில் பார்ப்பனரல்லாத கும்பாபிஷேகம்.

நாகபட்டணம் தாலுகா ஈசானியத்திலுள்ள தொண்டமான்குளத்து மேல்கரையில் வீற்றிருக்கும் ஸ்ரீ மகிழவிநாயகருக்கு ஆவணி 3ம் நாள் பகல் 9 55 நாழிகைக்கு பிராமணரல்லாத நம்திராவிட குருக்களைக்கொண்டு மகாகும்பாபிஷேகம் செய்யப்படுமென கே. சிவசாமிஎழுதுகிறார்.

குவின் மேரி பட்டுப் புடவை.

இது விலையுயர்ந்த பட்டில் உடல் முழுவதும் 2," 3" அளவுள்ள தங்கச் சரிகைப் புட்டாக்கள் நிறைந்ததும், கரை, முகதலை தங்கச் சரிகையினுல் கொடி, செடி வேலைப்பாடுள்ளது. பல அழகிய விருப்பமுள்ள கலர்களில் செய்யப்பட்டது.

18 முழம் X 45" புடவை ஒன்றுக்கு விலை ரூ. 75, 85.

மற்றும் உடல் சாதா கரை, முகதலை சரிகை வேலைப்பாடுள்ளதும், பட்டு வேஷ்டிகள், துப்பட்டாக்கள், பச்காஞக்கள். சில்க் ஷர்டிங் பீஸ், கோட்டிங் பீஸ் முதலானதுகள் விலை நயமாய்க் கிடைக்கும்.

ஆர்டர்களை கவனித்து வி. பி மூலமாய் அனுப்பப்படும்.

எமது விலாசம்:—

V. Raja Ram & Co., Silk Merchants,
38|203 Ramapura, Benares City. (India.

தயவு செய்து எமது விலாசத்தை ஆங்கிலத்தில் எழுதவும்.
வியாபாரிகளுக்கு விலை பிரத்தியேகமாய் கொடுக்கப்படும்.

இரத்தமே உயிர்.

திருவாரூர், ஷண்முகானந்த வைத்தியசாலையின்
இணையற்ற இரத்தவிர்த்தி மருந்து.

சுவர்ண காந்தம்.

அயம், காந்தம், அப்ரகம், தங்கம், மண்டூரம் 5-ம் சேர்ந்தது.

பாண்டு, சோகை, காமாலை, பித்தப்பாண்டு, விஷப்பாண்டு, சூதகபாண்டு, நீர்ப்பாண்டு, பித்தவெட்டை, ஜுரக்கட்டி, சூதகக்கட்டி, குன்மம், பித்தவாயு, மதுமேகம், க்ஷயம், காசம், கைவீக்கம், கால்வீக்கம், வயறுவீக்கம், கிருணி, அதிசாரம், உஷ்ணவாயு, சூதகவாயு, முதலிய அசாத்திய நோய்களும் ஆச்சரியப்படும்படி குணமாகி நல்லஇரத்தவிர்த்தியுண்டாகும்.

1-நெ. 20 நாள் மருந்து விலை ரூ 10—8—0 வி. பி. வேறு.

டாக்டர் கண்ணுசாமி,
சென்னை மாகாண சித்த வைதத்திய பிரச்சாரம், திருவாரூர்.

N. B:—குணமில்லாவிடில் பணம் வாபீஸ்,

கோடையிலே இளைப்பாறிக் கொள்ளும் குளிர்தரு எது?

எஸ். தருமாம்பாள் தயாரிக்கும்

சித்தர் மகா சந்தனுதித் தைலம்

கொடிய வெயிலாலும், அதிக வேலையாலும், இன்பநுகர்ச்சியாலும், மூளைகொதிப்புற்று அழல்கண்ட தேகங்கட்கு இரண்டு, மூன்று ஸ்நானங்களில் உடனே குணமில்லாவிடில்பணம் வாபீஸ். வழுக்கைத்தலையிலும் கூந்தல் வளரும், கை கண்டது.

ஈ. வெ. இராமசாமிப்பெரியார் கூறுவதாவது:—

"சித்தர் மகா சந்தனுதித்தைலம் என்பது மிகவும் வாசனை பொருந்தியதாகவும், ஸ்நானம் செய்துகொண்டால் மிக்க குளிர்ச்சியைத் தரக்கூடியதாகவும், கூந்தல் வளரவும், கூந்தல் உதிர் வதைத் தடுக்கவும், தலைவலி, கண்ணோய் முதலிய சூட்டினுல் உண்டாகும் வியாதிகளைத் தடுக்கவும், மிகவும் உபயோகபடக் கூடியதாயிருக்கின்றது. தலைவாரிக் கொள்ளவும், ஸ்நானம் செய்யவும் இரண்டிற்கும் உதவும்படியான சிறந்ததைலம் இதுவே"

6 அவுன்சு 1—0—0, 12 அவுன்சு 1—14—0,
24 அவுன்சு 3—12—0

சித்தானந்த வைத்தியசாலை,
35, அண்ணு பிள்ளை தெரு, சென்னை.

ராஜசித்தாதி லேகியம்.

ரிஜிஸ்தர் செய்யப்பட்டது.

இந்த லேகியத்தைச் சுண்டைக்காய் பிரமாணம் காலை, மாலை இரு வேளையும் சாப்பிட்டு வந்தால் தாதுபுஷ்டி, ஜீரணசக்தி இவைகளைக் கொடுத்து நரம்புகளுக்குப் பலத்தைத் தரும். நெஞ்சுக்கரிப்பு, வயிற்றுப்போக்கு, வயிற்றுவலி, வயிற்றில் சட்டி, மலச்சிக்கல், பாலியருக்குண்டாகும் சொப்பனஸ்கலிதம் இவைகளைக் குணப்படுத்தும்.

1-நெ. ஒரு சேர்	ரூ. 4-0-0,	அரை சேர்	ரூ. 2-0-0
கால் சேர்	ரூ. 1-0-0,	அரைக்கால் சேர்	ரூ. 0-8-0.
2-நெ. ஒரு சேர்	ரூ. 3-0-0,	அரை சேர்	ரூ. 1-8-0,
கால் சேர்	ரூ. 0-12-0,	அரைக்கால் சேர்	ரூ. 0-6-0,

T. A. ராமலிங்க முதலியார், ஷண்முகானந்த வைத்தியசாலை.
அங்காளம்மன் கோவில் தெரு, செவ்வாய்ப்பேட்டை, சேலம்.

மலாய்நாடு பூராவுக்கும் சோல் ஏஜண்டு:—

P. M. வெள்ளைச்சாமி,
நெ. 616 டத்தோகிராமட் ரோடு, பினுங்கு. S. S.

(4ம் பக்கத் தொடர்ச்சி)

மையிலும் ஆழ்ந்து கிடப்பதற்குக் காரணமென்று சொல்லுவேன்.

நமது தென்னாட்டை எடுத்துக் கொள்வோம். இங்கேபல கோவில்களிருக்கின்றன. அதற்கு வரும்படி என்ன? லக்ஷக்கணக்கான வரும்படி என்று சொல்லலாம். இந்தப்பணமெல்லாம் மனித வர்க்கத்தின் முன்னேற்றத்திற்கு இன்றியமையா சாதனங்களாயுள்ள, பள்ளிககூடங்கள், தொழிற்சாலைகள், வைத்தியசாலைகள், சிசுசம்ரக்ஷணைசாலைகள் முதலியவைகளை ஏற்படுத்தி யிருக்கின்றார்களா? இல்லவே இல்லை! அதோடு இந்தக் கோவில்களில் கிடைக்கும் லக்ஷக்கணக்கான வரும்படி எங்கே போகிறது என்பதைப்பற்றி நீங்கள் விசாரணை பண்ணாதது தான் மிகவும் வருந்தத் தக்கது. நீங்கள் என்னமோ கடவுளுக்குக் காணிக்கையாகக் கொடுத்து வந்ததைப்பற்றி மிகவும் சந்தோஷப்பட்டுக்கொண்டு, அதனால் ஒருவிதமான ஆறுதல் அடைவதாக நினைத்துக்கொள்கிறீர்கள். நான் கேட்டுக்கொள்வ தென்னவென்றால் அந்த ஆறுதலோடு நிற்காது நம்மைப் போல் காணிக்கை போடுபவரின் பணமெல்லாம் எங்கேபோகிறது என்பதைப்பற்றி தயவுசெய்து ஆராய்ச்சி செய்யவேணுமாய்க் கேட்டுக்கொள்ளுகிறேன்.

பலஜாதியினரால் செலுத்தப்படும் பணம் பல ஜாதியினருக்கும் உபயோகப்படுகிறதா? என்றால் இல்லை.

பிரார்த்தனை காணிக்கை முதலிய விஷயங்களில் ஆடவரைவிடப் பெண்கள் தான் அதிக நம்பிக்கை வைத்திருக்கிறார்கள். ஆடவர் கண்டித்தும் கேளாமல் மற்றவர்களுக்குத் தெரிந்தும் தெரியாமலும் விரதங்கள் அனுஷ்டிப்பதிலும்,காணிக்கைகள் செலுத்துவதிலும் பெண்கள் அஞ்சுவதில்லை. சிறு தலைவலி யுண்டானாலும் ஒரு வேளை மருந்தில் தீர்த்துக்கொள்ளாது நூறுநூறாக பணத்தை வீணாக காணிக்கையாகச் செலுத்துகிறார்கள்.

சகோதரிகளே! உங்களுக்குக் கடவுளிடம் உண்மை பக்தியிருந்து காணிக்கைகள், பிரார்த்தனைகள் செலுத்தினால் உங்கள் பிணி தீருமென்ற நம்பிக்கை உங்களுக்கிருந்தால் நீங்கள் வேண்டிக்கொள்ளும் பிரார்த்தனைகள் எப்படியிருக்க வேண்டுமென்றால்,

“கடவுளே! என்குழந்தை பிழைக்க வேண்டுமானால் ஏழைக்குழந்தை களுக்கு வயிறுநிறைய பால் கொடுக்கின்றேன். என் வயிற்றுவலிநீங்குமானால் ஏழைகளுக்கு வயிற்றுநிறைய சாப்பாடுபோடுகிறேன். எனக்குப்பிள்ளை பிறந்தால் (தங்கத்தில் பிள்ளையும் தொட்டிலும் செலுத்துவதற்குப் பதிலாக) ஏழைக்குழந்தைகளுக்குப் படிக்கையும்,உடையும் தருகிறேன். ஏழைகளுக்குத் தரும வைத்தியசாலைகள் வீடு கட்டித்தருகிறேன். வாடகையில்லாது வீடுகட்டித்தருகிறே”னென்று இது மாதிரி வேண்டுதல்கள் வேண்டிக்கொண்டால் கடவுள் கருணைகூர்ந்து அவரவர் வேண்டும் வரத்தைக் கொடுப்பார்.

அப்படிக்கில்லாமல்‘கடவுளே!உனக்குப் பால், பஞ்சாமிருத அபிஷேகம் செய்கிறேன், சொம்பு சொம்பாக உண்டிப்பணமும், தங்கக்குடையும் வயிரமாலையும் செலுத்துகிறே’னென்று செலுத்துவதை காருண்ணிய கடவுள் உங்கள் முறையையும் கேளாது உங்கள் காணிக்கைகளை மூக்கினாலும் முகராது இருக்கிறார். நமது பெண்களின் இன்னுமொரு அறியாமையைப் பாருங்கள்!

குழந்தைகளுக்குப் பழநிமலைமீது ஆண்டவர் முன்னிலையிலோ, திருப்பதிமலையில் வெங்கடேசப்பெருமாள் சன்னிதானத்திலோ போய்த்தான் குழந்தைகளுக்கும் காதுகுத்தி முடி எடுக்கவேணுமென்று சொல்லுகிறார்கள். அப்படிச்சொல்லுகிறவர்களை சுயமரியாதைக்காரர்கள், ‘சரி அந்த ஆண்டவன் பெருமாள் பேரைச்சொல்லி வீட்டிலேயே, அல்லது இந்த ஊர்களிலிருக்கும் ஆண்டவன் பெருமாள் கோவில்களில் நீங்கள் செய்கிற சடங்குசெய்து, காதுகுத்தித் தலைமயிர் எடுக்கக்கூடாதா? இதற்காக அவ்வளவுதூரம் போய்க் கஷ்டப்பட வேண்டுமா?” என்று கேட்டால், “ஐயோ! அப்படிச்செய்தால் கடவுளுக்குக் கோபம்வந்து ஏதாவது கெடுதல் செய்வார், மலைமேல் போய்ச் சுவாமி சன்னிதானத்தில் அவருக்கு முன்பாகத்தான் செய்யவேண்டு”மென்று சொல்லுகிறார்கள். உடனே கடவுள் ஓர் குறித்தயிடத்திற்றான் இருப்பவரென்றால், கடவுள் சர்வசக்தியும், சர்வவல்லமையும் உடையவர், எங்கும் உள்ளவர். தூணிலுமுளார், துரும்பிலுமுளார், அங்குமுளார், இங்குமுளார், என்று கூறுவது மெய்யா? பொய்யா? அன்பே சிவம், சிவமே அன்பு என்பீர், கடவுள் கருணையற்றவரா யிருக்க மாட்டார். அப்படியிருந்தால் அப்படியாயின் அவருக்குக் கோபம் வருவானேன்? என்று கேட்டால் நீங்கள் சொல்வதெல்லாம் நிஜந்தான், யோசித்துப்பார்த்தால் இவையெல்லாம் நாமாக ஏற்படுத்திக் கொண்டதே தவிர வேறில்லை என்று நன்றாகப் புலனாகிறது. தெரிந்தும் என்னசெய்வது? எங்கள் பெரியோர்கள் செய்த பழக்கம், பெரியோர் பழக்கத்தை மீறுவதற்கில்லையென்று சொல்லுகிறார்கள்.

சகோதரிகளே! நான் சொல்லுவது என்னவென்றால், அப்பேர்ப்பட்ட கடவுளைத்தான் நமக்கு வேண்டுவதில்லை யென்று நான் கூறுகின்றேன். சிறிதுநேரம் உங்கள் கவனத்தைச் செலுத்தி யோசிப்பீரானால் நாம் செயயும் காரியங்களில் முன்னுக்குப்பின்முரணாயிருப்பதும்அர்த்தமில்லாதிருப்பதும உங்களுக்கேபுலனாகும். இம்மூடப்பழக்க வழக்கங்களை விட்டுக்கடைத்தேற வேண்டுமானால் பலதுறையிலும் துன்பத்தையே அனுபவிக்கும் நீங்கள்தான் தைரியமாக முன்வந்து வேலைசெய்ய வேண்டும். பெண்கள் முயற்சித்தால் எக்காரியத்தையும் ஜெயிக்க முடியும் என்பதைத் தற்காலம் பார்த்திருக்கிறீர்கள்.

குடி

இந்தக்குடி விஷயம்ஸ்திரீகளாகிய நமக்கு நேரே சம்பந்த மில்லாவிட்டாலும், நன்மைச்சார்ந்த அண்ணன், தம்பி. புருஷன், மைந்தன் ஆகியவர்கள் குடிப்பதினாலேதான் சர்க்காருக்கு வருமானமும், பெண்களுக்குக் கஷ்டமும் ஏற்படுகின்றன வென்று யூகித்துக்கொள்ளலாம். ஆண் பிள்ளைகளின் குடியை யொழிக்க பெண் பிள்ளைகள்தான் முயற்சி செய்ய வேண்டும்.

கல்வியில்லாதநாட்டில்பாமரஜனங்கள் அறியாமையில் மூழ்கி இருக்கும் நாட்டில் ஒரு காந்தியல்ல நூறுகாந்தி வேலை செய்தாலும் மதுவிலக்குச்சாத்தியப்படாது என்று மரியாதையாய் தெரிவித்துக்கொள்ளுகிறேன். இராமர்காலத்திலிருந்து குடித்து வந்த ஜனங்கள் திடீரென்று கள்கடையை மூடிவிட்டால் — திருட்டுத்தனமாய் கள், சாராயம் செய்யத்தொடங்குவார்கள் என்பது திண்ணம். இதைத்தடுப்பதற்கு உத்திபோகஸ்தர்கள் (Preventive Officers) நியமித்தால் அதன் செலவு வரி செலுத்துவோருக்கு கஷ்டம் அல்லவா? ஆனதுபற்றி இது விஷயமாக கவர்ன்மெண்டாரை குறைகூறிக்கொண்டிருப்பதில் பிரயோஜனம் இல்லை. பாமரமக்களுக்கு கல்வி பரப்புவதினாலேயும், சாத்வீக பிரசாரம் செய்வதினாலேயும் குடியைகுறைத்துக்கொண்டுவரலாம்

சுதேசியம்.

நமது குறைபாடுகளைத் தீர்ப்பதுடன் சுதேசியத்தையும் வளர்த்து வருவது சாலச்சிறப்பு. அப்படிச்செய்தால் நம்நாடு பொன்னாடாகுமென்பதிற் சந்தேகமில்லை. நமது நாட்டுப் பொருள்களை கூடியவரையில் நாம் வாங்கி உபயோகித்தல்வேண்டும். இந்தியாவில் காந்தியடிகள் நாட்டுடையில் கவனஞ்செலுத்தி வருவது உங்கட்குத்தெரியும். நம் நாட்டுப் பொருள்களை நாம் வாங்காமலிருந்துகொண்டு ‘நாட்டிற்கு உரிமை வேண்டும்’ என்று சத்திக்கொண்டிருந்தால் மாத்திரம் என்னபலன்; ‘நாட்டுரிமை நாட்டுப்பொருள் காப்பதில் உண்டாம்’ என்று நினைபுங்கள்.

பெண்களின் வேலை.

நமது தேசத்தில் பெண்களின் குறைகள் பலவுள. அவைகளை தெரிந்துகொள்வதற்கும், அக்குறைகளை நீக்க வழிதேடுவதற்கும் சென்ற 5 வருஷங்களாக அகில இந்தியப்பெண்கள் மகாநாடு கூட்டப்பட்டு வருகிறது. ஐந்தாம் அகில இந்தியப் பெண்கள் மகாநாடு இந்த ஜனவரி மாதத்தில் லாகூரில் நடத்தப்பட்டது அகில இந்தியப்பெண்கள் மகாநாடு மாத்திரங்கூட ஆலோசிப்பது போதாதென்று அகில ஆசியா பெண்கள் மகாநாடு கூட்டவேண்டுமென்று தீர்மானித்து இவ்வருஷம் ஜனவரி மாதத்திலேயே லாகூரில் அகில ஆசியபெண்கள் மகாநாடும் கூடினது. இதிலிருந்து தெரிவதென்னவென்றால் முன்னேற்றத்தில் பெண்களுக்கிருக்கும் ஊக்கம் நான் சொல்லாமலே உங்களுக்கு விளங்கும்.

மகாநாட்டில் கல்வி விஷயமாகவும், சமூக சீர்திருத்த விஷயமாகவும் பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. அதில் முக்கியமாகப் பெண்களுக்குக்கட்டாயக்கல்வி இருக்கவேண்டுமென்றும், கல்வி முறையானது பெண்களுக்கு ஏற்றவாக இருத்தல் வேண்டுமென்றும், பெண்களுக்குச் சொத்துரிமை வேண்டுமென்றும், பெண்கள் அநேகர்சமூதாய சீர்திருத்ததில் ஈடுபடவேண்டுமென்றும், சாரதா சட்டம் சரியான அமுலுக்கு வரவேண்டுமென்றும், பலதாரங்கொள்ளல் என்பதைத்தடுக்கவேண்டுமென்றும், சட்டசபைகளிலும், நகர சபைகளிலும், சரியான பிரதிநிதித்துவம் வேண்டுமென்றும் மைனர் குற்றவாளிகளை விசாரணை செய்வதற்கு பெண் மாஜிஸ்ட்ரேட் இருக்கவேண்டுமென்றும் இன்னும் இதைப்போன்ற பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

முடிவுரை.

பெண்களுக்குச்சமத்துவம், சம உரிமை வேண்டுமென்று மகாநாடுகள் கூட்டுவதும், உபந்யாசங்கள் செய்வதுமாகவிருக்கும் இந்த நாளையில் சட்டசபை எலக்ஷன் வந்த காலத்தில் சில பெண்களையும் தம்மோடு சேர்த்து அங்கத்தினர்களாக நிற்கும் படிச் செய்யாமலும், நியமனகாலத்தில் அந்த சமூகத்திற்கு ஸ்தானம் வேண்டும். இந்த சமூகத்திற்கு ஸ்தானம் வேண்டும் என்று கேட்டும் எழுதியும் வந்தார்களே தவிர பெண்களை பற்றிக்கனவிலாவதுசிந்தித்தனரா? இல்லை. ஜனத்தொகையில் அதிகமாக இருப்பவர்கள் பெண்கள் தான். இந்த 1931 வருஷத்து சென்சஸ் கணக்கில் நமது சென்னை ராஜதானியில்--23089914 ஆண்களும் 23641936 பெண்களுமிருக்கிறார்கள். ஆடவரைவிட ஐந்தரை லட்சம் அதிகமாயிருக்கும் பெண்மணிகளின் சார்பாக ஓர்பெண்மணியை நியமித்திருக்கிறது எவ்வளவு வருந்தத்தக்க விஷயமென்று பாருங்கள். இந்த இருபதாம் நூற்றாண்டில் இவ்வளவு வித்தியாசமிருந்தால் இதற்கு முன்எப்படியிருந்திருக்குமென்பதை நீங்களே யோசித்துப் பாருங்கள். ஆகையினால், சகோதரிகளே! நமது முன்னேற்றத்திற்குப் பெண்களாகிய நாம்தான் முன்வந்து வேலை செய்ய வேண்டுமே தவிர, பிறருடைய உதவியை நாடுவதெல்லாம் தாமதமாகத்தான் கிடைக்கும்.

சகோதரர்களே! நீங்கள் உங்களுக்குப் பிறக்கும் பிள்ளைகள் சற்புத்திரர்களாயும், வீரர்களாயும், சுயமரியாதையுடையவர்களாகவு மிருக்கவேண்டுமென்றுகருதுகிறீர்களல்லவா? அப்படியானால் அன்னையை அடிமைக்குழியில் அழுத்திவிட்டு, அடிமை அன்னை வயிற்றில் உதிக்கும் மக்கள் மாத்திரம் எங்ஙனம் அடிமைப்புத்தியிலிருந்து மீளப்பட்டார்

(3-ம் பக்கத்தொடர்ச்சி)

திற்கு போட்டி ஏற்பட்ட சமயங்களில் எல்லாம் அதன் கர்த்தாக்கள் இந்த மதத்தில் எல்லாக் கொள்கைகளும் உண்டு என்று கூறி போட்டிகளை மண்டையில் அடித்து வந்தார்கள். இடைக்காலத்தில் தோன்றிய புத்தர் இயக்கமும் இவ்வாறே நசுக்கப்பட்டு வெளிநாட்டுக்குத் துரத்தி அடிக்கப்பட்டது. அதுபோலவே நமது மாபெருந்தலைவர் உயர்திரு ஈ. வெ. இராமசாமி அவர்களால் தோற்றுவிக்கப்பட்ட நமது சமதர்ம இயக்கத்தையும், சில விஷமிகளும், கூலிகளும், நிலையற்ற கொள்கை உடையவர்களும் கராச்சி காங்கிரசின் பேரால் கொலை செய்ய முயல்கிறார்கள். ஆனால் அவர்கள் சூழ்ச்சி மூக்காலும் பலிக்காது. ஏமாறும் வாலிபர்கள் இன்னும் நம் நாட்டில் இல்லை. ஏமாற்றுபவர்கள் உய்யும் மார்க்கமும் இல்லை. காங்கிரசின் தீர்மானங்களும், லக்ஷியங்களும் எவ்வளவு உன்னதமாக இருப்பதாக எந்த மகாத்மா சொன்னாலும், அதன் தலைவர்களும், அவர்கள் நடைமுறைகளும் நமது இயக்கத்தைக் கொல்லும் வழியில் பிரயோகமாகி வருகின்றன. ஆகையால் நாம் தற்கால காங்கிரஸ் தலைவர்கள்மீதும் நடத்தைகளின்மீதும்பகிரங்கமாக எதிர்த்துப்போராடவேண்டியதுதான். அதற்காகபிற்காலவாலிபர்களே! ஊக்கங்கொண்டுதயாராகுங்கள்.

ஊக்கங்கொண்டு தயாராகுங்கள்.

நமதுவேலை.

நாம் எடுத்துக் கொண்டிருக்கும் வேலை மிகவும் மகத்தானது. உலகம் தோன்றிய காலம் முதல் பல மகான்களால் ஆரம்பிக்கப்பட்டதாகச் சொல்லப்படும் மதக் கொடூரங்களையும் கட்டுப்பாட்டையும் உடைத்தெறிய முயலுகின்றோம். 'சித்தர்களால்' ஆரம்பிக்கப்பட்ட 'புனித' இயக்கங்களை ஒழிக்க நம்மிடம் மந்திரம் இல்லை. ஆனால் அவைகளையே வேரறுப்பது நமது கடமை. இக்கடமையைப் பூர்த்திசெய்ய பல நூற்றாண்டுவரை பொறுத்திருக்கும் பொறுமையும் நம்மிடம் இல்லை. ஆகையால் நம்முடைய ஆசையைச் சீக்கிரம் நிறைவேற்ற மார்க்கம் உண்டா? உறுதியாக உண்டு என்று நான் திடமாகக்கூறுவேன். அமெரிக்காவில் வாஷிங்டனும், ஐரோப்பாவில் மார்டின்லூதரும், ஆசியாவில் அலெக்சாந்தரும் முறையே தங்கள் லட்சியங்களை அடைந்தார்கள் என்று சரித்திரம் கூறவில்லையா? ருஷியாவில் லெனினும், துருக்கியில் கமாலும், சைனாவில் சன்யெட்சென்னும் தங்கள் ஆயுள் காலங்களில் தங்கள் உழைப்பின் பலனை அனுபவிப்பதை நாம் நிதர்சனமாகக்காண்கிறோமே! அதுபோல நாமும் மனோதிடத்துடன் நமது இயக்கத்திற்காகப் பாடுபட்டால் நாம் கோறிய காரியத்தை உறுதியாக முடிக்கலாம் என்று கூறுகிறேன். ஆனால்

இப்போது அனுசரிக்கப்பட்டு வரும் முறைகள் தக்கனவல்ல.

நம்முடைய கிளர்ச்சிகளைக் காட்டுவதற்கு நாம் இப்போது அனுசரித்துவரும் முறைகள் தக்கனவென்று நான் கருதவில்லை. நம்மினும் கடுமையான மத ஆதிக்கத்தில் ஆழ்த்தப்பட்டு சமீப காலத்தில் விடுதலை பெற்ற பிறநாடுகள் எம்முறையில் தங்கள் இயக்கங்களை நடத்தினவென்பதைத் தெரிந்து கொண்டோமேயானால் நாமும் ஓர் நூதனத் திட்டத்தைத் தயாரிக்கலாம். ஆகையால் நம்மில் ஒருவர் இருவரை அன்னிய நாடுகளுக்கு அனுப்பி சமதர்மக் கொள்கைகளைப் பயின்றுவரச் செய்யவேண்டும் என்று அபிப்பிராயப்படுகிறேன்.

நமது கடமை.

இது ஒரு புறம் யோசனையில் இருக்க. நாம் உடனே கையாளவேண்டிய சில முறைகள் இருக்கின்றன. அதாவது நமது மத்திய சங்கத்தை ரிஜிஸ்டர் செய்து, பல ஜில்லாக்கிளைகளாகப்பிரித்து, ஜில்லாக் கமிட்டிகளும், நகரக்கமிட்டிகளும் ஏற்படுத்தி நகரக்கமிட்டி ஜில்லாக் கமிட்டிக்கும், ஜில்லாக் கமிட்டி மத்திய சபைக்கும், பொருளாதாரம் உள்பட எல்லா வகைக்கும் ஜவாப்தாரியாக இருக்கும்படி செய்யவேண்டும். சில ஜில்லாக்கள் சேர்ந்த பல சர்க்கிள்களை உண்டாக்கி சர்க்கிள்தோறும் பிரசாரகர் நியமித்துப் பிரசாரஞ்செய்யவேண்டும். இவ்வாறு நாம் செய்வோமானால் நமது பிரசாரம் எல்லா இடங்களிலும் ஏக காலத்தில் நடத்த ஹேதுவாக இருக்கும். நமது இயக்கமும் நாலுபக்கங்களிலும் வளர்ந்து கொண்டேவரும்.

இதற்கேற்ப நமது பிரசாரங்களை வெளிப்படுத்தி, பொது ஜனங்களிடையில் பரப்புவதற்காக கொடைக்கானலில் கூடிய நமது காரியக் கமிட்டின் தீர்மானப்படி "சண்டமாருதம்" என்ற தினசரிப் பத்திரிகை ஆரம்பித்து விட்டோம். அதைவரவேற்று அதன் நிர்வாகத்தில் பங்கெடுத்தும், சந்தாதார்களாகச் சேர்ந்தும் ஆதரிப்பீர்களென்று நம்புகிறேன்.

பெண்கள் விடுதலையை ஆதரிக்க வேண்டும்,

இத்துடன் நமது மற்றோர் பகுதியான பெண்கள் விடுதலைக் கிளர்ச்சியை நாம் ஆதரித்து அவர்களையும் நம்முடன் சமமாக்கி சம அந்தஸ்து அளிக்கவேண்டும். பெண்கள் ஒத்துழைப்பின்றி நமது லட்சியம் நிறைவேறுவது மிகவும் தாமதப்படக்கூடும். பெண்கள் இயக்கமும் பலப்பட்டு அவர்களும் சொத்துரிமை, விவாகரத்து, கலப்பு மணம்; இளமை மண மறுப்பு, விதவா விவாஹம் முதலிய முக்கிய திட்டங்களை வற்புறுத்தி வருகின்றனர். அவைகளை ஏற்று நமது மகாநாட்டுத் தலைவர் போன்ற பல சட்ட அங்கத்தினர்கள் அரசாங்கச் சட்டம் வகுக்கப் பிரயத்தனம் செய்கின்றனர். அவர்களின் முயற்சிக்கு ஆக்கம் கொடுத்துச் சீர்திருத்தச் சட்டங்கள் சீக்கிரம் உருவாக்கி உடனே அமுலுக்கு வரவேண்டிய கிளர்ச்சிகளை நாம் செய்யவேண்டும். இதுபோல பல முக்கிய பிரச்சினைகளைப்பற்றி முடிவு கட்டவேண்டியிருப்பதால் எல்லாப் பிரதிநிதிகளும் தங்கள் மேன்மையான ஆலோசனைகளைக்கூற விரும்புகிறேன்.

நமது இயக்கம் அகில இந்திய இயக்கமாகவேண்டும்.

நமது தலைவரும், இயக்க முக்கியஸ்தர்களில் ஒருவரும், உலக செல்வாக்குப் படைத்தவருமான உயர்திரு. ஆர். கே. ஷண்முகம் பி. ஏ. பி. எல்., எம். எல். ஏ, அவர்களின் அக்கிராசனத்தின்கீழ் இம்மகாநாடு வெற்றியுடன் நடைபெறுவதுடன், அவர் நமது கட்சித் தலைவராக விளங்கும் அடுத்த ஆண்டில், நமது இயக்கம் பலதுறைகளிலும் வளர்ச்சி அடையும் என்று உறுதியாக நம்புகிறேன். நமது தலைவர் அவர்கள் நினைத்தால் நமது இயக்கம் அடுத்த நிமிடத்திலேயே ஓர் அகில இந்திய இயக்கமாக விளங்கும். பாஞ்சால ஜாதி ஒழிப்புச்சங்கமும் நமது கொள்கைகளை ஏற்று நம்முடன் ஒத்துழைக்கத் தயாராக இருக்கின்றன. அவைகளின் கர்த்தாக்களுடன் கலந்தாலோசித்து நமக்கும் அவர்களுக்கும் ஓர் ஐக்கியத்தை உண்டு பண்ணவேண்டுமாய்த் தலைவர் அவர்களை உங்கள் சார்பாகக் கேட்டுக்கொள்ளுகிறேன். எங்கள் வேண்டுகோளுக்கிணங்கி இங்கு குழுமியிருக்கும் உங்கள் எல்லோரையும் மறுமுறையும் வரவேற்கிறேன்.

ளாக இருக்கக்கூடும்? 'தாயைப்போல் பிள்ளை' 'நூலைப்போல் சேலை' என்று சொல்வதை கேட்டதில்லையா?

உங்களைப் பெற்றவள் பெண், உங்களை வளர்க்கின்றவள் பெண் உங்களோடு வாழ்பவள் பெண், உங்கள் நாட்டைத் தாய்நாடென்று சொல்லுகிறீர்கள். உங்கள் மொழியைத் தாய்மொழியென்று சொல்லுகிறீர்கள். இவ்வளவு பெருமைவாய்ந்த பெண்களின் கல்வி விஷயத்தில் கருத்தைச் செலுத்துங்கள். "நாங்கள் என்ன செய்வது? வீட்டில் பெண்கள்தான் 12 வயதானதும் வெளியில் போகக்கூடாதென்று நிருத்தி விடுகிறார்கள்" என்று சொல்வது சரியான பதிலல்ல. நீங்கள் சொன்னால் உங்கள் பெண்கள் கேட்பார்கள். கணவன், பெற்றோர் வார்த்தை மீறும் பெண்கள் நமது நாட்டுப் பெண்களல்ல.

பெண் கல்வி பரவ வேண்டும், தாய்மை வளரவேண்டும், சமத்துவம் உண்டாகவேண்டும், சுயமரியாதை ஜோதி உலகெங்கும் பரவ வேண்டும், தீண்டாமை ஒழிய வேண்டும், ஜாதி மதமென்னும் பேய் அழிய வேண்டும். இந்த சுயமரியாதைப் பெண்கள் மகாநாடு சந்தோஷமாக முடிவு பெறவேண்டும்.

ஜோதிமுத்து.

டாக்டர் B. A. எதிராஜுலுவினால் தயாரித்து 31 ஆண்டுகளாக அனுபவித்து கைகண்ட, கோஷாயி மேக எண்ணை

(கோஷாயி ஒருவரால் அனுக்கிரகிக்கப்பெற்றது.)

சகோதர, சகோதரிகளே, வெட்டவாய்வு (அஷ்ட) எட்டுவிதங்களாக, கர்ப்ப,—விந்து ஸ்தானங்களில் தங்கி, வெளியாகிக்கொண்டிருப்பதை அக்காலங்களில் கண்டித்து நீக்காமல் விட்டு நீடித்து நின்று மேகவாய்வு என்று பெயர் பெற்ற கொடியோன் கபாலத்தில் தங்கி, கபால இடி, குத்தல் நேத்திரத்தில் பார்வை மங்கல், பல குற்றங்களும், நாசி, செவி, தந்தங்கள், கண்டம் இவைகளில் குற்றங்களும், நெஞ்சில் தங்கி, மாரடைப்பு, தமரகவாய்வு, திணரல், கொக்கிருமல், காசமாகவும், கீல்களில் தங்கி, சூலைகளாகவும் நரம்புகளில் தங்கி முன்-பின் (வீச்சுகள்) பலவித இழுப்புகளாகவும் வயற்றில் தங்கி, சகலவித குன்மங்கள் வாய்வு, சூதககட்டிகள், பக்கவிலா இழுப்பு குத்தல் கெர்ப குற்றங்கள் நித்திரை அற்ற நீர்தாரை ரோகங்கள், மூலங்கள், திமிர், மத மதப்பு, சகலவித மேகங்கள், சிட்டைகள் ரண குஷ்டங்களாகவும், மலப்போக்கு அல்லது சிக்கல் பட்டு ஜெனிக்கும் (விரிம்பிர்ப் பெருகும்) அனந்த வெட்டவாய்வு ரோகிகளும், 3 நேரம் ஈம், கோஷாயி மேக எண்ணை சாப்பிட்ட 7வது நாளே, எல்லா உபத்திரவத்திலிருந்து விலகி15வது நாள்பாலியதேஜசுடன்,விருத்தரும் பாலிய உணர்ச்சி பெற்றுவருவது பிரத்தியக்ஷம்

யோகாப்பியாசிகளுக்கு சடலத்திலுள்ள துர்நீர்களை அகற்றி எல்லா அவயவங்களிலும் சுத்த இரத்தத்தை ஊட்டி, அறிவு இடத்தில் புத்தியை நிறுத்தி (ஜோதியாகிய) தன்னை தெரிசிக்க, காயத்தை இருகச்செய்து காக்கும் காயகர்ப்பம். 3 நேரம் உபயோகிக்கும் கோஷாயி மேக எண்ணை கொண்ட சீசா 1க்கு ரூ. 7—0—0.

பத்திய விபரம் மருந்துடன். பாக்கிங்தபால் செலவு பிரத்தியேகம். மலாய் வாசிகள் ஆர்டருடன் பணம் அனுப்பவேண்டும்.

கோஷாயி வைத்தியசாலை,

தென்னூர், திருச்சி.

குடி அரசு புத்தகாலயம்.

கைவல்யம் அல்லது கலைக்கியானம். இது கைவல்யசாமியார் கட்டுரைத்தொகுதி. ...	0—8—0
மனு நீதி மருமம் ...	0—2—0
இராமலிங்க சுவாமி பாடல் திரட்டு. ...	0—2—0
சுயமரியாதைத் தாலாட்டு. ...	0—2—0
சோதிடப் புரட்டு. ...	0—2—0
திரு ஈ. வெ ராமசாமியின் சீர்திருத்தமகாநாட்டு சொற்பொழிவு (2-பதிப்பு) ...	0—2—0
சுயமரியாதைப் பாடல் ...	0—2—0
தர்ம பரீக்ஷை அல்லது புராண ஆபாசம். ...	0—3—0
பங்கஜம் அல்லது பார்ப்பனக்கொடுமை ...	0—4—0
ஞானசூரியன் ...	0—4—0
இராமாயணத்தின் ஆராய்ச்சி பாலகாண்டம்	0—4—0
ஷை 2-ம் பாகம் அயோத்தியாகாண்டம் ...	0—8—0
யேசுயோ கூற்று மெய்யா பொய்யா (2-பதிப்பு)	0—3—0
அகத்தியர் ஆராய்ச்சி ...	0—2—0
கடவுளை நிந்திக்கும் கயவர்கள் யார்? ...	0—2—0
*குறள் ...	0—8—0
* இயற்கைமதம் ...	0—8—0
* சிதம்பர ரகசியம் ...	0—8—0
*—சுதந்திரப் போர் அல்லது உப்பள முற்றுகை.	0—4—0
* சுயமரியாதைத்தத்துவகீதங்கள் ...	0—4—0
* பகுத்தறிவே விடுதலை அல்லது ஜீவாத்மா இல்லை—[சித்ரப்படங்களுடன் 100 பக்கங்களுக்கு மேல் கொண்டது] ...	0—6—0
* ஆராய்ச்சி அணிகலம்	0--12--0
* சென்னை லோகல் போர்டு ஆக்ட் ...	2—0—0

* மோட்டார்கார் இயந்திரசாஸ்திரமும் அதன் அனுபோகப் பயிர்ச்சியும் 50படங்களுடன் 200 பக்கங்களடங்கிய பெரிய புத்தகம் விலை ரூ. 2—0—0. ஆர்டருடன் 4 அணா ஸ்டாம்பு அனுப்பவேண்டும்.

* இந்தப்புள்ளி உள்ளபுத்தகங்கள் விற்பனைக்காக நமக்கு அனுப்பப்பட்டவைகள்.

புஸ்தகங்களுக்கு ஸ்டாம்பு வைத்து அனுப்புகின்றவர்கள் புஸ்தக கிறயத்துக்கு மேலாக புஸ்தகம் ஒன்றுக்கு ஒன்றரை அணா ஸ்டாம்பு அனுப்பவேண்டும். 8 அணாவுக்குக் குறைந்த ஆர்டருக்கு வி. பி. அனுப்பப்படமாட்டாது, ஆர்டர்களுக்கு பாதித்தொகையாவது முன்பணம் அனுப்ப வேண்டும்.

ஏனெனில் புதிய உத்திரவுப்படி வி. பி. கள் 3 நாள்களில் வாப்பீஸ் செய்யப்படுவதால் அநேக வி. பி, கள் வாப்பீசாகிவிடுகின்றன. ஆதலால்தான் ஆர்டருடன் பகுதியாவது முன்பணம் அனுப்பி ஆர்டர் செய்யவேண்டும் என்று விரும்புகிறோம்.

'குடி அரசு' 'ரிவோல்ட்' மாலைகள்.

குடி அரசு மாலைகள் கோர்வையாக முதல் வருஷத்திலிருந்து சென்ற வருஷம் வரை 5 வருஷகாலம் வெளியான மலர்களைத் தனித்தனி வருஷமாக பைண்ட் செய்து புஸ்தகமாக வைக்கப்பட்டிருக்கிறது.

ஒவ்வொரு வருஷமாலை கிரயம் ரூ. 4—0—0
ரிவோல்ட்டு ஒரு வருஷமாலை பைண்ட் செய்தது கிரயம் ரூ. 4—0—0

ஆர்டருடன் 1 ரூபாய் முன்பணமனுப்பவேண்டும்.

மானேஜர், குடி அரசு புத்தகாலயம்,
ஈரோடு

"குடி அரசு" ஏஜண்டுகள்.

R. ராமலிங்கம், வியாபாரம்
கோட்டார்.
*ராஜரத்னம், தமிழன் ஆபீஸ்,
ஆண்டர்சன் பேட்டை.
*கான்மாபாலிட்டன் கிளப்
விருதுநகர்.
*A. V. பாலசுப்ரமணியம்
23, எடய தெரு,
திருவாரூர்.
பி. சாமுவேல் பிள்ளை,
ஜெனரல் நியூஸ் ஏஜண்ட்
..ந்துக்குடி.
*எஸ். மாசிலாமணி பிள்ளை
நியூஸ் ஏஜண்ட்,
பாலக்கரை திருச்சி.
S. குற்றாலலிங்கம் பிள்ளை
நியூஸ் ஏஜண்ட்
மீனாச்சிபுரம் திருநெல்வேலி.
S. P. கிருஷ்ணசாமி,
நாகப்பட்டணம்.
P. பழனியாண்டி செட்டியார்,
நாகூர்.
T. சேத்துநாயடு
சித்திரக்காரத் தெரு,
மதுரை.
K. கணபதி, சாக்கோட்டை
கும்பகோணம்.
மானேஜர், 'புதுவைமுரசு'
புதுச்சேரி.
P. R. C. எல்லப்பன்,
மரக்கடை வியாபாரம்,
கொசதெரு, காஞ்சீபுரம்:
A. S. முருகேசம, பஜார்
திண்டுக்கல்.
*T. சுப்ரமணியபிள்ளை,
3, செங்கல்வராய முதலி தெரு,
திருவல்லிக்கேணி,
சென்னை.
A. R. M. சுந்திர பாண்டியன்
கடை வீதி,
அருப்புக்கோட்டை,
G: V. ராமசாமி
பெரிய கடைவீதி,
கரூர்
*B. ரங்கசாமி, டைலர்
பெரிய கடைவீதி,
கோயமுத்தூர்.
ஹாஜி முகமது ஷேக் உசேன்,
57. சுண்ணாம்புக்காரத்தெரு,
காரைக்கால்.
*M. ரத்னம்,
கிரோசினாயில் டிபோ,
நெல்லிக்குப்பம்.
K. N. தங்கவேலு,
காரியதரிசி
சமூகசீர்திருத்த சங்கம்
கல்லிடைக்குறிச்சி.
C. S. ஜோசப்
159 கேவல்ரி ரோடு,
பெங்களூர் Cant.
M. N. M. பாவலர்
நியூஸ் ஏஜண்ட், விழுப்புரம்.
S. ராமசாமி
செங்குந்தர் தெரு,
..ரையூர்,
முத்துசாமி
நாடார் ஹைஸ்கூல்,
பொறையார்,
P. S. ஜீவரத்னம் பிள்ளை,
2. மலாய்வீதி, ஸ்லேவ்ஐலண்டு,
கொழும்பு.
A. S. பரமசிவம்
நியூஸ் ஏஜண்ட்,
பம்பலபிட்டியா,
கொழும்பு
எட்வர்ட்பால்
திருமலாபுரம்
செல்வராய கவுண்டர்
திருப்பத்தூர்.
*S. அப்பாதுரை
மண்டி, ராசிபுரம்
M. N. M. பாவலர்
நியூஸ் ஏஜண்ட்.
திருப்பாபுலியூர்
S. C. கந்தசாமி,
26, குமாரசாமி செட்டி வீதி
செவ்வாய்ப்பேட்டை, சேலம்.
சிதம்பரம்.
எம். கலியாணசுந்திர முதலியார்
கதர்ஸ்டோர் மேலவீதி
சாத்தான் குளம்.
பெரியசாமி நாடார்
ஷாப் வியாபாரம்
பட்டுக்கோட்டை.
கே. சாரங்கபாணி
கொண்டப்பநாயடுபாளையம்
ஸ்ரீவில்லிப்புத்தூர்.
பி. ஞானதேசிகம்
மாயவரம். எம். கலியாணசுந்திர
முதலியார் கதர்ஸ்டோர்,

* இந்த புள்ளியுள்ள ஏஜண்டுதார்களிடம் குடி அரசு பதிப்பக புஸ்தகங்களும் கிடைக்கும்.

கீழ்கண்ட நகரங்களிலுள்ள ஹிகின்பாதம் புஸ்தகசாலைகளில் குடி அரசு பிரதிகள் கிடைக்கும்.

காட்பாடி.
திருநெல்வேலி.
அரக்கோணம்.
சென்ரல் ஸ்டேஷன்.
மதுரை.
மாயவரம்.
நாகபட்டணம்,
சேலம்.
தஞ்சாவூர்.
பௌரிங்பேட்டை.
எக்மூர்.
ஜோலார்பேட்டை.
திருச்சி.
போத்தனூர்.
ஈரோடு.

குடி அரசு வெளிநாட்டு ஏஜண்டுகள்

சிங்கப்பூர்,

Mhd. Dulfakir & Co.,
34, North Bridge Rd.

India Novel depot
73, Serangoon Road.

கோலாலம்பூர்.

R. . Naidu,
86, Ampang St.

●. M. Ali Saiboo & Co,
27, Java Stree

The Selanger Stamp Co.,
Market Street

S. S. Abdulkadir,

South Indian Boookstcre,
122, Pitty street, penang

Sorojini Vilas Coffee Club,
85: Paul Street,
Seramban N. S.

The Central stores
61, Jalan Ibrahim,
Johore Bharu

C. Kandiah,
85, Sultan street, Klang.

S. G. Sami Agency,
3, Jalan roya,
Sungei Pattani
Kedah, F. M S

சுயமரியாதை இயக்கப் பத்திரிகைகள்.

——:0:——

'குமரன்'

வாரப்பதிப்பு

உள்நாடு வருடசந்தா 5—0—0
வெளிநாடு வருடசந்தா 6—0—0

மாதப்பதிப்பு.

உள்நாடு வருடசந்தா 0—12—0
வெளிநாடுவருடசந்தா 1—0—0

ஆசிரியர்: சோ. முருகப்பா.

விலாசம்:—
மானேஜர், "குமரன்" காரைக்குடி
ராமநாதபுரம் ஜில்லா

'முன்னேற்றம்'

வாரப்பதிப்பு

சிங்கப்பூரிலிருந்து வெளிவருவது
உள்நாடு சந்தா $. 3—0—0
இந்தியாவுக்கு ரூ. 5—0—0

ஆசிரியர்: கோ. சாரங்கபாணி

விலாசம்:—
மானேஜர், "முன்னேற்றம்"
152 சிலிகிரோட், சிங்கப்பூர்

'புதுவைமுரசு'

வாரப்பதிப்பு

உள்நாடு வருடசந்தா 3—0—0
வெளிநாடு „ 4—0—0

மானேஜர், "புதுவைமுரசு"
4 லல்லிதொலாந்தால் வீதி
புதுச்சேரி.

'நாடார் குலமித்திரன்'

வாரப்பதிப்பு

உள்நாடு வருடசந்தா 4—0—0
வெளிநாடு „ 5—0—0

ஆசிரியர்: சு. அ. முத்துநாடார்

விலாசம்:— மானேஜர்,
"நாடார்குல மித்திரன்"
அருப்புக்கோட்டை
ராமநாதபுரம் ஜில்லா.

'தமிழன்'

வாரப்பதிப்பு

உள்நாடு வருடசந்தா 3—0—0
வெளிநாடு „ 4—0—0

ஆசிரியர்: ஜி. அப்பாதுரையார்

விலாசம்:—
மானேஜர் "தமிழன்"
ஆண்டர்சன் பேட்டை P.O.
கோலார் தங்கவயல் (S. I.)

'சண்டமாருதம்'

வாரப்பதிப்பு

உள்நாடு வருடசந்தா 3—0—0
வெளிநாடு „ 4—0—0

ஆசிரியர்: அ. பொன்னம்பலம்

மானேஜர், "சண்டமாருதம்"
கோட்டையூர்,
ராமனுதபுரம் ஜில்லா

சிங்கப்பூரில் குடி அரசு பதிப்பகப்புஸ்தகங்கள் கிடைக்குமிடம்.

"முன்னேற்றம்" ஆபீஸ்,
152, சிலிகி ரோட்,
சிங்கப்பூர்

குடி அரசு கிடைக்குமிடம்.

திருப்பூர்.
ஆர். கருப்புசாமி,
பல்லடம் ஈரோடு.

சாத்தூர்.
எம். ஏ. முத்துசாமி பிள்ளை,
சுப்பிரமணியசாமி கோயில் வீதி.

கொளும்பு.
S. M. மீராமொய்தீன்,
80—பார்க் வீதி.
போர்ட் கொளும்பு

முசிரி.
N. S. கந்தசாமி,
திராவிடன் ஏஜண்ட்

ஏழு தலைமுறைகளாய் கையாண்டனுபவம் வாய்ந்ததும், வைத்திய மகாநாடுகளிலும், கண்காட்சிகளிலும் மதிப்பு பெற்றதுமான சிறந்த ஔஷதங்கள் எங்களுடையது. எவ்வகை வியாதிக்கும் ஏற்றது. எல்லோராலும் புகழ்பெற்றது. உண்மையும் உத்திரவாதமுமான மருந்து.

நீங்கள் என்றுமழியாத இளப்பருவத்தை அடையவேண்டுமானால் பழனி சி. எம். சாமி

மகா வீரிய தங்க பஸ்பம் சாப்பிடுங்கள்

தாதுபுஷ்டியில் மன்மதனுக்கொப்பாவீர்கள். பரீட்சைக்கும் பலனுக்கும் உத்திரவாதம் வயோதிக தசையாலும், வாலிபபருவ துர்க் கிருத்தியங்களாலும் நீங்கள் இழந்த பலம், தாதுநஷ்டம், போகசக்திக்குறைவு, மனஉற்சாகம் இவைகளை திரும்பக்கொடுத்து, இல்லற ஒற்றுமை, வீரிய விர்த்தி முதலியவைகளைக் கொடுப்பதில் இணையற்றது. 24 நாள் பஸ்பம் விலை ரூ 10

காமரூபிலேகியம்

தாதுபுஷ்டிக்கு மிக உயர்ந்தது
இதில் தங்கபஸ்பம் வைத்துச் சாப்பிடலாம் சேர் ரூ 15

குருதாளக பஸ்பம்—இருமலுக்கு

காசம், க்ஷயம், ஈளை, இளைப்பு, இருமல், கஷ்ட சுவாசம், கோழை, கபக்கட்டு இவைகள் எவ்வளவு நாட்பட்டதாயிருந்தாலும் சரி, 8-வித காசமும் அவசியம் தீரும். அனுபவத்தில் கைகண்டது. 24 நாள் புட்டி 1க்கு ரூ, 8.

குருநாக பஸ்பம்—மூலத்திற்கு

ஆப்ரேஷன் அவசியமில்லை. மூளை தானே கரையும், கீழ்மூலம், ரத்தமூலம், குத்தல், மூலமுளை மலபந்தம் முதலிய ஒன்பதும் அதிசீக்கிரத்தில் குணமாகும். உத்திரவாதமுள்ள சிறந்த ஔஷதம். புட்டி 1-க்கு ரூ. 4.

ஏராளமான நற்சாட்சிகளைக் கேட்லாக்கில் பார்க்கலாம்.

மாதர்களுக்கு

இது தான் வேண்டியது

கெர்ப்ப எண்ணெய்

மாதாந்தர காலத்தில் உண்டாகும் வயிற்றுவலியை உடனேநிறுத்தும். சரியாய் பஹிஷ்டையாகும். கெர்ப்பாசயம், சினைப்பை இவற்றிலுள்ள சகல கெடுதல்களும் நீங்கி கெர்ப்பம் உண்டாகும். மிக்க அநுபவமானது. புட்டி 1க்கு ரூ. 2

அந்நிய தேசவாசிகள் மருந்திற்கு ஆர்டர் செய்யும்போது முன் பணம் ரூ. 5 அனுப்பவேண்டும்.

வைத்திய ஆசிரியர் C மஹலயப்பசாமி, நித்தியானந்த மெடிக்கல் ஹால், பழனி, S. I.

உண்மை விளக்கம் பதிப்பகத்தில் அச்சிடப்பட்டதேதுமதி நாகம்மாளால் வெளியிடப்பட்டது.